

001
மானா
SLIPR

★ இது ஓர் உலகளாவிய தகவல் மஞ்சரி

★ மதநல்லிணக்கம் நூலின் அடிநாதம்.

★ ஆசிரியர் - 'மானா' (எம்.எம்.) மக்கீன்,
மாளிகாவத்தை.

★ உரிமை பீ54 - 1/2, மாளிகாவத்தை,
கொழும்பு-10ல் வாழும் அப்பாவி
'மனிதப்பறவை' கள் மூவருக்கு.

★ உரித்து வழங்கியவர் - தொழில் அதிபர்
ஹாஸிம் உமர் ஹாஜி.

★ முதல் அச்சுப்பதிப்பு - 1994 - ஏப்ரல் - 23

★ நிறைவேற்றியவர் கலைஞர் ஆர். ராஜசேகரன்.
('மானா'வின் நாடகத்துறை சகா)

★ கணணி எழுத்தமைப் '[illegible]ட்'
[illegible]பஹான்.
('லைட்ரீடிங்'கின் [illegible]நாள்
அபிமானி)


★ பக்க அமைப்பும்
ஓவியங்களும் ஓவியச்சுடர்' எஸ். டி. [illegible].

★ இலங்கை ஏக
விநியோகத்தர்கள் முத்[illegible]துயர் நிறுவன
இல[illegible]மண குமார்
('மானா'வின் இளவயது நண்பர்)
கொழும்பு - 11.

★ தமிழக விநியோகம் - நவமணி பதிப்பகம்,
சென்னை - 600 004



[illegible]HAVI LIBRARY




## மறக்கத்தான் முடியுமோ

கதை என்று முதன் முதலில் படித்தது அவருடையதைததான

கட்டுரை என்று கண்டதும் அப்படியே.

கேள்வி-பதில் என்பதற்கும் அவரே இலக்கணம்.

எழுத வேண்டும் என்று ஆசை பிறந்ததும், எழுதிப் பழகியதும் (சுதந்திரன் - வீரகேசரி, தினகரன்) வானொலிக்கு ஓடியதும் எல்லாவற்றுக்குமே காரணம் அவருடைய அந்த 'கல்கண்டு' தான் 32 பக்கங்களிலும் அவர் நிறைத்த எழுத்துக்கள் தான்.

இன்றைக்குப் பட்டங்களும், பாராட்டுக்களும், பொற்கிழிகளும் பெற்று 'கல்லாநிதி'யாக நான் உலா வருகின்ற வேளையில் அவரு இல்லையே என்ற ஏக்கம்.

ஊன்றி, ஊசிமுனையாக பேனையைப் பாவிப்பார் இருந்தாலும் குழந்தை மனதுக்காரர்.

சிரிப்பார் தெருக்கோடி வரை கேட்கும்.

உபசரிப்பார் செட்டி நாட்டுப் பாணியில்

மணிமேகலைப் பிரசுரங்களை ஒருபெட்டிக்குள் நிறைத்து அத்தனையிலும் பச்சை மையினாலேயே கையெழுத்திட்டு "ஊம் தூக்குங்கள்" என்பார் அப்போதும் ஒரு வெடிச்சிரிப்பு.

"என்னைக் கேவலப்படுத்தியது சினமாததுறை மட்டுந்தான்" என்று ஒரு முறை அலுத்துக் கொண்டார்.

மறுமுறை ஒரு தீபாவளி சமயத்தில், அவர் மரணச் செய்தி தான் கிடைத்தது.

எழுதுகோல் என கையில் இருக்கும் நேரமெல்லாம் நினைவில் வருகிறீர்கள் தமிழ்வாணன்.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன தமழமபசும உலகததினருககு 'கல்கண்டு' வழங்கிய அமரர் தமிழ்வாணன் மறைவு 10ல், 1977 நவம்பரில், திடீரென நண்பகலில் தியாகராயநகரில் (பாண்டிபஜார்) அவர் இயக்கம் நின்றது.

இந்த எழுத்துக்கள் அவருக்கு நினைவஞ்சலி.

# "மானா"வின் எழுத்துக்கள் இளைய தலைமுறையினருக்கு உந்து சக்தியாகும்

அமைச்சர் **அஸ்வர்** —

**''துள்ளித் துள்ளி வலம் வந்து இளமைத் துடிப்புடன் இன்றும் தொடர்ச்சியாக எழுத்துப் பணியாற்றும் என் பள்ளித் தோழனும், உற்ற நண்பருமான மானா மக்கீனின் எழுத்தாக்கங்கள் இளம் தலைமுறையினருக்கு முன்மாதிரியானவை. உந்து சக்தி போன்றவை**

*''முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளன மண்டபம் நிரம்பி வழிந்த இந் நிகழ்வு என் நெஞ்சக் கமலத்தில் என்றும் பசுமை படர்ந்தே இருக்கும்.''*

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல் ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் இவ்வாறு கூறினார்.

''தமிழ் மணி'' ''தாஜுல் உலூம்'' பட்டங்களைப் பெற்ற ''லைட்ரீடிங்'' புகழ் மானா எம்.எம். மக்கீனுக்கும் இலக்கியச் செம்மலுக்கும் முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளன வாலிப ஒன்றியம் நடத்திய பாராட்டு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சரும், முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனத் தலைவருமான அல் ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமை வகித்தார். செயலாளர் அல் ஹாஜ் என்.எம். அமீன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் தமிழ் வாணனின் எழுத்தால் ஆட்கொள்ளப்பட்ட மானா மக்கீன் ஒரு துணிகர நபர். துணிச்சல் மிக்கவர்.

எனக்கு அவர் டைரக்டர் நான் தமிழ் கற்கத் துணை நின்றவர். ''டயல் எம். போமெர்டர்'' என்ற நாடகத்தைத் தமிழில் மேடையேற்றியவர்.



தமிழ் வாணன் தமது கல்கண்டு இதழில் இலங்கையைச் சேர்ந்த மக்கீனின் படத்தை மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தார். இதனால் அந்த இதழில் புகைப்படத்தை பிரசுரித்துக் கொண்ட பெருமையும் மக்கீனுக்கு மட்டுமே உண்டு என்றார்.

29.7.92/30.7.92 'தினகரன்' பதிப்புகளில் வெளியானது.
(செய்தித் தொகுப்பு:நிருபர் எஃப்.எம்.பைறூஸ்)

## 'மானா' உலகம் புகழும் 'கொலமிஸ்' டாக வரவேண்டும்.

அமைச்சர் தேவராஜ்

இந்துசமய கலாசார ராஜாங்க அமைச்சர் திரு. தேவராஜ் பேசுகையில் ''மக்கீன் வேகம் மிக்கவர். ஆர்வம் கூடியவர்.

மானாவின் 'லைட் ரீடிங்' கைப் படித்து தான் நான் அவரை அறிந்தேன்.

துள்ளி ஓடும் மானாவுடன் பழகியதனால் தான் என்னவோ அமைச்சர் அஸ்வர் நாடாளுமன்றத்திலும் எல்லா விவகாரங்களிலும் ஆர்வமாக எழுந்து நின்று பேசி, விவாதித்து கருமமாற்றி வருகிறாரோ தெரியாது.

மானா சிறந்த ஒரு ''கொலமிஸ்ட்'' காலவரையில் உலகப் பெற்ற ஒரு 'கொலமிஸ்ட்' ஆக அவர் வரவேண்டும். இது என் வாழ்த்து'' என்றார்.

பூமாலை, பொன்னாடை அணிவிக்கப்பட்டார். வாழத்துச் செய்திகள் வாசித்தல், பரிசளித்தல் என நிகழ்ச்சிகள் பலவும் மெருகு பெற்றன.

மக்கீனின் அன்பர்களும் ஆதாரவாளர்களும் குடும்ப இலக்கிய நண்பர்களும் திரண்டிருந்தனர்.

கல் ஹின்னை கல்லூட்டுக் கவிராயர் கவிரயசு எம்.எச்.எம். ஹலீம்தீன் பாராட்டுப் பெறுவோரை வாழ்த்தி புதுமைப் பாவை தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடினார்.

பதிலுரை நிகழ்த்திய மானா மக்கீன் ''நான் மகிழ்ச்சி நிறைந்த மனதுடன் செல்கிறேன். இவ்விழா எனக்கு ''வெற்றி விழா இதில் ஒத்துழைத்தவர்கள் அனைவரும் என் நெஞ்சக் கண்களில் தென்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். என் எழுத்துப் பணி என்றும் சமூக உயர்வுக்குத் தொடரும்'' என்றார்.

-- 29/30.7.92 தேதிகளில் தினகரன்

# துள்ளி வரும் துளி வரிகள்...

*"நான் நல்லவன்..*
*திட்டமிட்டு*
*யாருக்கும் தீங்கும் செய்யாதவன்.*
*தொடர்ந்து நல்லவனாயிருப்பதற்குப்*
*பொறுமையோடு போராடிக்*
*கொண்டிருப்பவன்."*

கவிஞர் வைரமுத்துவின் இந்த

வைரவரிகளை தினமணி கதிர்

16.1.94ல் (பக். 19)

படித்தேன்.

இது, எனக்கும் மிகமிகப்

பொருந்துவதாய்பட்டது.

பதிக்க விரும்புகிறேன் இங்கே.

தாய்க்கு மடியில் பத்துமாத பாரம்.

எனக்கோ பன்னிரண்டு மாதமும் பாரமே!

இப்படி 4 ஆண்டுகள் 08 மாதங்கள் 02 கிழமைகள்

கழிந்தன.

கடைசியாக 16.1.94க்குப் பிறகு தினகரன்

'வாரமஞ்சரி' 6ம் பக்கத்திலிருந்து 'விடுதலை

என 'திடுக்' என தெரிவிக்கப்பட்ட பொழுது

ஆஹா, ஆனந்தம், ஆனந்தம்.



நான் திடீரென 'குட் பை' சொல்வேன் என்பதை 1993 மே 09

இதழிலேயே சூசகமாகத் தெரிவித்து விட்டேன்.

எனவே, என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினார்கள்

என்பதெல்லாம் என் எதிரிகளின் வெறும் பேச்சாகவே அமையும்.

இப்பொழுது என் சிறு 'குருவிக் கூட்டில்' பழைய குதூகலமும்

கும்மாளமும்.

முன்பெல்லாம் என் இல்லத்து 'நிழ'லும்

அருமை அஞ்சானா அஸீமும் அருகில் வர அஞ்சி நின்ற நேரங்கள் அதிகம்.

அத்தோடு, ஒரு தொகுப்பைப் புத்தகமாகக் கொண்டு

வருவதும் சாத்தியமாகியிருக்கிறது.

அதற்கு என் தோன்றாத் துணையாகிய என் புரவலர் அல் ஹாஜ் ஹாஷிம் உமர் அவர்களே முழு முதற் காரணம். (பின் அட்டையைப் பாருங்கள் இன்னும் தகவல்கள்)

மேலும், இது என் முதல் நூலாகிறது.

பல தடவை என் 'கன்னி' நூலின் அட்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

அன்பர் எஸ்.எம். அலி (சென்னை) யின் கைவண்ணத்திற்கு நன்றி. நன்றி

இறுதியாக இந்தப் புத்தகம் தொகுக்கப்பட்ட விதம் விளக்கிடல் வேண்டும்.

கொஞ்சம் பின்னோக்கி வாருங்கள்

அப்பொழுது 1989. ஜே.வி.பி. கிளர்ச்சி. 'லேக் ஹவுஸ் பத்திரிகைகளில் எழுதவே பயந்திருந்தவர்கள் மத்தியில் நான் துணிந்து ஒரு பக்கம் வழங்க சம்மதித்தேன். அந்தக் காலத்தில் வாசகர்களை 'தினகரன்' சென்றடைவதே சிரமமாகவிருந்தது.

இராணுவ முகாம்களில் வைத்து இதழ்களை விநியோகித்தனர். என் எழுத்துக்கள் ஒரு குறிப்பிட்ட சிறு வட்டத்திற்குள்ளேயே சென்றடையும் எனத் தெரிந்தும் இரவு பகல் பாடுபட்டு பழசுகளையும் புதுசுகளையும் வழங்கினேன்.

இன்றோ நிலைமை வேறு. அலைகடலுக்கு அப்பாலும் பல நாடுகளில் 'லைட்ரீடிங்' அறிந்தவர்கள் உண்டு.

அவர்களுக்கு அந்த 1989ன் எழுத்துக்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. தெரிய வைத்திடும் ஆசையால் சில இதில் அடக்கம். முதற் தொகுதி என்றும் கருதுக.

இரு முக்கிய அடிக்குறிப்புகள்:

அவசியம் கருதி 1990-93 எழுத்துகள் சிலவும் இடம்பிடித்துள்ளன.

இதனை வெளிக் கொணருவதில் முழுமூச்சுடன் பாடுபட்ட இஸ்பஹான், ஆர். ராஜசேகரன், கோவை அன்சார், எஸ். டி. சாமி முதலியோரின் உழைப்புக்கு நன்றி. இதயத்தில் எப்பொழுதும் அவர்கள். அதேபோல சென்னை மணிமேகலைப் பிரசுர நிறுவனர் திரு. ரவி தமிழ்வாணன், ('லேனா'வின் சகோதரர்) அவர்தம் அலுவலக சகாக்கள் (குறிப்பாக திரு மோகன்) எனக்கு வழங்கிய உதவி ஒத்தாசைகள் இருக்கிறதே, அப்பப்பா! வார்த்தைகளில் அடங்காத இதயத்தை தொட்ட நிகழ்வுகள்.

எப்பொழுதும்
எழுத்துப் பணியில்
இருக்க விரும்பும்

### அருமைத் தமிழுக்கே முதலிடம்

பல டசின் கணக்கான இந்திய மொழிகளில் முதலில் அச்சேறிய பெருமை தமிழுக்கே உண்டு. 1554ல் 435 ஆண்டுகளுக்கு முன் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பனில் அச்சான 'லூ சே தமிழ் வினா - விடை'' என்ற தமிழ் நூலே முதல் நூலாகும். 1556ல் கோவாவில் போர்த்துக்கீசியரால் அமைக்கப்பட்ட அச்சகத்தில் ''இறையியல் உரைகள்'' (கேட்சியம்) என்ற தமிழ் நூல் முதன்முதலாக அச்சேறியது.



# லைட்ரீடிங் பங்களிப்பு 5 ஆண்டுகளைத் தொட்டது!

30-4-1989 ஜே.வி.பீ. பிரச்சினைகளுக்கு மத்தியில் பிறந்த 'லைட்ரீடிங்' நான்காம் ஆண்டில் நடைபயிலப் போகிறது என்பது என் ஓய்வின்மையில் மறந்தே போயிற்று.

நல்ல வேளையாக அடுலுகம, பண்டாரகமச் செல்வி சில்மியா காதரிடமிருந்து ஒரு புதுமையான பிறந்த நாள் வாழ்த்து வந்து சேர்ந்து என்னை உலுப்பி விட்டது.

✱ லேக் ஹவுஸில் பிறந்து வாரமஞ்சரியில் வாழும் லைட்ரீடிங் தனது மூன்றாவது பிறந்த தினத்தை 30.4.92ல் கொண்டாட விருப்பதை யொட்டி பிரதம ஆசிரியரான தந்தையார் தமிழன்னையார் மற்றும் சோதர்களான ஆயிரமாயிரம் தமிழ், முஸ்லிம் கிறிஸ்துவ உள்ளங்களிலும் மாமன் மார்களான பார்க்கர், ஹீரோ, தட்டெழுத்துக் கருவி ஆகியோரும், மாமியார்களான புல்ஸ்கோப் தாள்கள், புத்தக கட்டுரைகள், பத்திரிகைகளும், மற்றும் இனிய, இதய 'தினகரன்' அலுவலக, வேலைத்தள அன்பர்களும் வாழ்வாங்கு வாழ்ந்து அறிவு மணமும் அன்பு மணமும் பரப்ப ஆசித்த வண்ணம் உள்ளார்கள்.

என்ற அந்த வாழ்த்து மின்சக்தி குறைந்த இந்த நாட்களில் ஸ்பெஷலாக மின்சாரத்தை உடம்பெல்லாம் பாய்ச்சி ஒரு புதுத் தெம்புக்கு வைத்தியம் செய்கிறது.

தமிழும் வாழ்ந்து தமிழ்பேசும் மக்களின் ஐக்கியமும் நிலைக்க நினைத்து, அவர்களுக்கு அறிவுபூர்வமாக கலை இலக்கியபூர்வமாக சேவையாற்றவே ஆவல். மற்றப்படி வேறொன்றும் அறியாத குழந்தை மனதுக்காரன் நான்! புரிந்தவர்கள் புரிந்தே இருக்கிறார்கள்.

பணியினைத் தொடர்ந்த வண்ணம் இருக்க இறைகிருபை ஒன்றே தேவை.

- 4ம் ஆண்டில் நடைபயிலத் தொடங்கிய பொழுது 1992, ஏப்ரல் 26ல் பதித்தது.

5-ம் ஆண்டில் நடை.......

1989 ஏப்ரல் 30ல் இப்பகுதி ஆரம்பமாவதற்கு முன் அப்படியே பேனையை மூடி நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தவன் நான். என்னைத் தட்டியெழுப்பினார் 'தினகரன்' பிரதம ஆசிரியர். அதன் விளைவாக நான்கு ஆண்டுகளாக சுமார் 200 முழுப்பக்கங்களில் என்னனென்னவோ எல்லாம் நிகழ்ந்துவிட்டன. அத்தனையும் இனிமை! அவ்வளவும் பெருமை. இந்த நிலையிலையே 'குட்-பை' என எழுத எண்ணங்கள். எழுதி விடவா? ஆனால் ஒரு ஞாயிறு அதிகாலையில் சிறு வயதினரிலிருந்து பெரியவர்கள் வரை வாரமஞ்சரியில் ஆறாம் பக்கத்துக்கு வருவார்களே என்பதை நினைக்கையில் தடுமாற்றம்.

ஏதோ..... எல்லாமே அவன் வகுத்த வழிப்படி! நடையை ஐந்தாம் ஆண்டில் தொடங்குகிறேன். உங்கள் அபிமானத்திற்காக எங்கி நிற்கின்றேன்.

- 1993, மே 09ல் எழுதிய எழுத்து. இதன் பின்னர் 16.01.94ல் நானே எதிர்பார்க்காத முறையில்
'லைட் ரீடிங்' பிரிந்தது.

## மலர்களுக்கு நிறங்கள் வழங்குவதுயார்?

வண்ண வண்ண மலர்கள் பலவற்றைப் பார்த்துப் பேரானந்தம் கொள்கின்றோமே, அந்த மலர்களுக்கு விதவிதமான நிறங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? சிந்தித்தீர்களா?

அனைத்துமே சூரிய பகவானின் கருணைதான். மலர்கள் சூரியனிடத்திலிருந்தே நிறங்களைப் பிரதி பலிக்கின்றன. என்றாலும் பூக்கள் விருப்பம் இல்லாமல் வெளியேற்றும் நிறமேதான் அவற்றின் வர்ணமாக வாய்க்கிறது. உதாரணம செவ்வந்திப்பூ. இது மஞ்சள் நிறத்தைத் தவிர மற்ற எல்லா நிறங்களையும் சூரியனிடமிருந்து இழுத்துக் கொள்கிறது. மஞ்சள் நிறத்தை வெளியேற்றுகிறது. ஆனாலும் அந்த நிறம்தான் ஒளிக்கிரணங்களின் பிரதிபலிப்பாக அதற்கு வாய்த்துள்ளது.



என்னருமைப் பள்ளித்தோழன் 'பதுருல் மில்லத்' எஸ்.எம்.ஏ.ஜபார் (சாத்தான்குளம்-தமிழகம்) இன்னொரு நெருக்கமான அன்பருக்கு எழுதிய ஆங்கிலக் கடிதத்தில் என்னைப்பற்றி இப்படி சில வரிகள்.....

S.M. Abdul Jabbar/ Personal

QUILON GENERAL POLYMERS

June 26, 1993.

My Dear

I do remember the fine article that Thully Wrote as soon as you assumed office, touching on Your, mine and his life. That was one of his brilliant pieces. That was possible only because of the author's love towards his "subject'. And we both know that Thully has so much of love in such abundance for both of us, inspite of the fact that he being a 'gini-bock'. Think what you may, and say what you may about him, however, no doubting the fact that he is a very nice little 'bastard' and the only trouble with him is he is a law unto himself and all will not stomach it.

It is you who support him and bring out the best in him. How you do it is left to you. Bully him, black-guard him. But keep him under your wings.

## 'பித்தலாடகம்' பண்ணக்கூடாது

பொன்னை நான்கு வகையாக அழைப்பார்கள். (ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பு நதம்) இதில் உயர்ந்த ரகப் பித்தளை ஆடகப் பொன் போல இருக்குமாம்.

ஏமாற்றுக்காரர்கள் ஆடகப் பொன்னுக்குப் பதிலாகப் பித்தளையையே கொடுத்து விடுவார்களாம். இப்படிப் பித்தளையைப் பொன்னெனக் கூறி ஏமாற்றும் செயலை 'பித்தலாடகம்' என்றார்கள். அது தற்காலத்தில் 'பித்தலாட்டம்' என்றாகி இருக்கிறது.

# திருமிகு தேவராஜர் சாதனைகள்

தமிழ் பேசும் சமூகத்து இலங்கை அரசியல்வாதிகளுள் மிகச் சிறந்த புத்திஜீவியாகக் கருதப்பட வேண்டிய இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி.பி. தேவராஜா் தான் பதவியேற்ற பின்னர் 3 சாஹித்திய விழாக்களை நடத்தி விட்டார்.

அந்த மூன்றிலும் அடி நாதமாக அமைந்திருந்தது என்னவெனில், தமிழ் பேசும் அனைத்துப் பிராந்திய மக்களையும் இன, மத பேதமில்லாது அரவணைத்ததும், அவர்களுக்குரிய பங்களிப்புக்கு வழிவகுத்தலும், பட்டமும் பாராட்டும் வழங்கியதுமே. அந்தப் பெரிய தமிழகத்திலுங் கூட இது நினைத்துப் பார்க்க முடியாத விடயம். (முதல் தடவையாக இங்கேதான் நாட்டார் பாடல் ஆய்வும் கருத்தரங்கும்)

- 1993 ஆகஸ்ட் 29

நம் காலத்தில் நமக்குக் கிடைத்த ஜெண்டில்மேன் திருமிகு தேவராஜ் இராஜாங்க அமைச்சர்.

அவர் சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பதால் தமிழ்க் கலைகள் மேம்பாடடைகின்றன.

டிசம்பர் மூடுபனியில் பல இசை விழாக்கள் தமிழகத் தலைநகரில் சக்கை போடுபோடுவது இன்று நேற்றல்ல. இருந்தும் இலங்கைக் கலைஞருக்கு இடம் கிடைப்பது அபூர்வம்.

இதோ 1993ல் ஒரு விடிவு. ஒரு பாலம்.

நம்மகத்து இருவர் திருமிகு தேவராஜரின் அயராத முயற்சியில் இதைப் படித்துக் கொண்டிருக்கையில் சென்னை மீனம் பாக்கத்தில் இருப்பர்.

புகழ் பரப்பி சந்தன மாலைகள் அணிந்து திரும்பி வரட்டும்.

-1993 டிசம்பர் 19





**Fine! Keep it up!**

பேரன்பு மிக்க சகோதரனுக்கு,

எல்லாம் வல்ல இறைவனின் ஆசிர்வாதங்கள் நிறையவே கிடைப்பதாக. பலகாலம் செய்த பணிகளின் நல்விளைவாக இன்று தாங்கள் உயர்ந்துள்ளீர்கள்.

சமுதாயம் மலர, கலை இலக்கிய உலகம் கயமைகளிலிருந்து விடுபட்டு சத்தியபூர்வமான மலர்ச்சிகளை, எம் ஆருயிர் சகோதரனின், அன்பு மக்கீனின் பேனாவும், உழைப்பும், ஆற்றலும் நிச்சயம் பாடுபடும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எமக்குண்டு.

மானுடனை பேதங்களகற்றி ஒன்றிணைப்பதும், வாழ்க்கையில் நேரிய பார்வையை, தரிசனத்தை பெறச் செய்வதும், தூய சிந்தனை வளர்ச்சியை தூண்டுதலும், உங்களைப் போன்ற ஆளுமையாளர்களினால் சாத்தியமாகும்.

**திருமதி. யோகா பாலசந்திரன், மொறட்டுவை.**

''சட்டர்டே'' என்றும் ''சண்டே'' என்றும் வார இதழ்களுக்குப் பெயர் வைப்பது பல நாட்டிலும் பழக்கமாகிவிட்டது. 'ஃபிரைடே' (வெள்ளிக்கிழமை) யாரும் தேர்ந்தெடுத்ததில்லை. அபூர்வமாக முஸ்லிம்கள் சாதித்து விட்டார்கள். ''எங்கள் பத்திரிகை ஒரு சுதந்திரமான பத்திரிகை'' எனக் கட்டியம் கூறிக் கொண்டு

மாதமிருமுறை இதழாக கே. அபூஸஹ்ராவைப் பிரதம ஆசிரியராகவும் எம். ஹமீத் என்பவரை நிர்வாக ஆசிரியர்ாகவும் கொண்டு இந்த 'ஃபிரைடே'' உள்ளத்திற்கு உவகையை அள்ளி வழங்குகிறது. ஒரு முஸ்லிம் இதழுக்கு இதையும் விடப் பொருத்தமான பெயரெதுவும் இருக்க முடியாது. மிகச் சமீபத்திய இதழொன்றை 'லைட் ரீடிங்' முஸ்லிம் வாசகர்களின் அறிமுகத்திற்காக அல் ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி சுமந்து வந்து அன்பளித்தது இதயத்தை ஈர்த்தது. அன்பருக்கு நன்றி.

**Friday**

## மினி... மினி...

'கராத்தே - கராத்தே' என்று பெரிசாக சொல்லிக் கொள்கிறோமே, உண்மையில் அதற்கு என்ன அர்த்தம்? 'எம்ப்டி ஹாண்ட்' என்று ஆங்கிலத்தில் பொருள்படும். அதாவது 'வெறும் கை'

தமிழ் நாட்டில் காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தின் முன்வாசலில் உள்ள சிறிய கோபுரம்தான் தமிழ்நாட்டுக் கோபுரங்களில் மிகவும் பழமையான கோபுரம் ஆகும்.

★ கைரேகைகள் ஒருவரை ஒருவர் ஒத்திருக்காது என்பதை அறிந்திருக்கிறோம். இப்போதைய ஆராய்ச்சியின் படி பல் அமைப்புங் கூட பொருந்தாது, ஒருவருக்கொருவர் வித்தியாசப்படும் என்ற ஆச்சரியமான தகவல் கிடைத்துள்ளது.

ஒவ்வொரு ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறையும் பெப்ரவரிக்கு முப்பது நாட்கள் வரும். அது இன்னும் பத்து ஆண்டுகளில் 2000 வருடத்தில் 30-02-2000 அன்று வரப்போகிறது. ஆனால் அவர்கள் பிறந்தால் கொண்டாடவே இயலாது.

பல் மஞ்சள் நிறமாக இருக்கிறதா? அதனை எளிய முறையில் நீக்க வழி ஒன்று இருக்கிறது. வல்லாரை என்கிற 'கொட்டுக் கொல' கீரையைக் கொண்டு பல்லில் தேய்த்துப் பாருங்கள். மஞ்சள் நிறம் போய் பல் நன்றாக வெண்மை ஆகிவிடும்.

சாப்பிடுவதற்கு முன் இஞ்சியையும் உப்பையும் உட்கொள்வது மிகவும் நன்மை தருமென தமிழ் மருத்துவ நூல்கள் சொல்கின்றன. உணவுக்கு முன் உப்பை ருசிக்கும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஆலோசனை தந்திருக்கிறார்கள். இதனால் நல்ல சுவையுயும் பசியும் உண்டாகும். நாக்கும் தொண்டையும் சுத்தமாகும்.



# தூக்கணாங் குருவிக் கூட்டிலே...

தூக்கணாங் குருவிக் கூட்டை நேருக்கு நேர் பார்த்திருக்கிறீர்களா? அது தொங்கும் அழகைப் பார்க்கவென்று பொலனறுவைப் பக்கம் போன காலம் உண்டு. அழகான ஒரு சின்னஞ் சிறு குருவியினுடைய 'ஏர்கண்டிஷன் வீடு' அது.

அதன் 'கட்டடக் கலை' நுட்பத்திற்கு, ஆண்டுக்கணக்கில் படித்துப் பட்டத்தைக் கையில் வைத்திருக்கும் கட்டடப் பொறியியலாளர்கள் பிச்சை வாங்க வேண்டும். மரத்தின் கிளை ஒன்றில் தலைகீழாக ஒரு தொங்கல். ஆனால், அற்புதமான அமைதியான வாழ்க்கை சுகத்தைத் தரக்கூடிய ஆட்டம். காற்றா, மழையா எதுதான் இலேசில் அசைத்துவிடும் அந்த வீட்டை?. ஒரு சிறு குருவிக்கு சிருஷ்டிகர்த்தா உருவாக்கிக் கொடுத்திருக்கும் 'நிழ'லுக்கு நிகரே இல்லை.

அதுபோல மனித இனத்திற்கும் ஒரு 'நிழல்' கிடைக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம். அப்பொழுதுதான் அமைதி, ஆனந்தம் அனைத்தும அவனை வந்தடையும். அந்த வகையில் நமது ஜனாதிபதி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் முன்னெடுத்துச் சென்ற இலட்சியம் இன்னும் தொடர்ந்த வண்ணமுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக இளைய தலைமுறையைச் சார்ந்த வீடமைப்பு அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாகீர் மாக்கார் இந்தப் புத்தாண்டில் அனுப்பிவைத்திருந்த வாழ்த்து ஒரு பெரிய சிந்தனையையே வாரி வழங்கிவிட்டது.

தூக்கணாங் குருவியையும் அதன் கூட்டையும் தாங்கி வந்திருந்தது அந்த வாழ்த்தட்டை. அதில் தொக்கி நிற்கின்ற உண்மைகள், உயர்ந்த தத்துவங்கள் பற்பல. ராஜாங்க அமைச்சருக்கு முன்னதாகவே கவியரசர் கண்ணதாசன் தன் காதல் கீதத்தால் அந்த குருவிக் கூட்டைத் தொட்டுக் காட்டியவர். ''தூக்கணாங் குருவிக் கூடு... தூங்கக் கண்டான் மரத்திலே, கூரைக்குடிசை நடுவிலே. அந்தப் படுக்கையைப் போட்டு ஒரு குத்துவிளக்கை ஏத்தி வச்சு கோலத்தைப் போட்டு ஆற அமர மச்சானோடு படிக்கணும் பாட்டு.'' என பி. சுசிலா குயிலாகக் கூவியதை யார் மறப்பர்?

அப்பப்பா! மனிதப் பிறவிகளுக்கு ஒரு 'நிழல்' அவசியத்திலும் அவசியம்.

இளைய தலைமுறைகளின் நம்பிக்கை நட்சத்திரம் இம்தியாஸ் அவர்களே!

தங்கள் சேவை தொடரட்டும் இனிதாக.

மேலும் இன்னொரு அடிக்குறிப்பு: அசலும் போலியும் மலிந்துள்ள அரசியலில் இந்த 'இளைய பிள்ளை' மிகமிக எச்சரிக்கையாக நடைபயில்வாராக. முக்கியமாக கூஜாதூக்கிகளை தன்னருகில் வைத்துக் கொள்ளாமல் நடைபயின்று நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் புரியட்டும்.





# ஒரு 81 வயது இளைஞர்

அவரிடம் ஊன்று கோல் இல்லை. அவர் கண்களில் தடித்த கண்ணாடி கிடையாது. அவரது பற்களைக் கவனித்தால் ஆடாமல் அசையாமல் முத்துப்பல் வரிசை காட்டிச் சிரிக்கின்றன. அவருக்கு நரை அங்கும் இங்கும்தான்.

இவரே பெரு மதிப்புக்குறிய அல்ஹாஜ் எம். இத்ரீஸ் மரைக்காயர்.

எண்பது வயதைக் கடந்து எண்பத்தொன்றில் தளர்ச்சியில்லா நடையும், தடுமாற்றமில்லாப் பேச்சும் இவருக்கே உரித்தானவை.

இத்ரீஸ் மரைக்காயர் அவர்களை எனக்கு நேருக்கு நேர் சந்திக்க கிடைத்ததே ஒரு பெரும் பாக்கியம்.

நிறைகுடம் கலாநிதி உவைஸ் ஒரு 'சாமான்ய எழுத்தாளனுக்குச் அந்தச் சந்திப்பு நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

அன்னார் இஸ்லாமும் இலக்கியமுமாக இருந்தார்.

ஹிஜ்ரி 980க்குச் சரியான 1572ம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட 'வகுதை நாடன்' செய்கு முதலி இசுகாக்கு எனும் வண்ணப் பரிமளப் புலவரின் 'ஆயிரமசாலா' என்ற முதல் இஸ்லாமியத் தமிழ்த் தலைக்காப்பியப் புதையலை 412 ஆண்டுகளுக்குப் பின் 1984ல் தோண்டியெடுத்துத் தமிழ்ப் பேசும் தாயத்தின் கரங்களில் வாரிக் கொட்டியதோடு, அதே ஆண்டில்



மற்றொரு இலக்கியப் புதையலான பெரிய நூகு லெப்பை ஆலிம் இயற்றி அருளிய மெய்ஞ்ஞானக் கருவூலமான 'வேத புராணம்' புதிய பதிப்பை அப்புலவரது சந்ததியைச் சார்ந்த மு.கி.மு. முஹம்மது ஹசனைக் கொண்டு அச்சிட்டு வெளியிட்டும்-

'தமிழகத்தில் மார்க்கோபோலோ- இபுனு பதூத்தா' 'கீர்த்தி மிகும் கீழக்கரை' என்னுமிரு நூல்களை பல ஆண்டு ஆராய்ச்சிக்கு பிறகு தானே எழுதி வெளியிட்டு கீர்த்திமிகு கீழக்கரைச் சிறப்பை உலகறியச் செய்த அதே நேரத்தில், இலங்கையுடன் கொண்டிருந்த தொடர்புகளைத் தொட்டுக் காட்டி மாபெரும் வரலாற்று ஆய்வாளராக அவர் திகழ்வதும் தித்திப்பாக இருந்தது.

நமது இலங்கை வாசிகளுக்குக் குறிப்பாக தென் பகுதி முஸ்லிம்களுக்கு இத்ரீஸ் மரைக்காயர் இன்னொரு வழியிலும் நெருங்கியவராக இருக்கிறார். அது, அஷ்-ஷெய்கு இமாமுல் அருஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் பீடுநடை போட்ட ஆத்மீக வழியில் வருகிறது.

மகான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களுக்குப் பிறந்த இரு ஆண்மக்கள், மூன்று பெண் மக்களில் மூத்த மகள், 'மக்கத்து உம்மா' என்ற செய்யது பாத்திமாவின் வயிற்றில் உதித்த அல்ஹாஜ் அதாவுல்லாஹ் சாகிப் மரைக்காயர் இவரது தந்தையராகும்.


நாம் அன்றாட வாழ்க்கையில் பலரை ஒரு சில வினாடிகளில், ஒரு சில நிமிடங்களில் மறந்து விடலாம். மற்றவர்களையோ சில நாட்கள் சில மாதங்களில் . ஆனால், இந்த 'இளைஞர்' இத்ரீஸ் மரைக்காயர் அவர்களையோ இஸ்லாமிய இலக்கியத்தையும் இஸ்லாமிய வரலாற்றையும் இரு கண்களாக கொண்டுள்ளோர் எந்தக் காலத்திலும் மறக்க முடியாது.

### ஆண்களுக்கு ஆரோக்கியம் அதிகம்.

ஒரு கேள்வி என்னையுமறியாமலே ஏற்பட்டது. திருமணம் செய்து கொள்வதால் அதிகமாகக் உடல் ஆரோக்கியம் பெறுவது ஆண்களா? பெண்களா?

அமெரிக்க, மிக்சிகன் சமூகவியல் நிபுணர் ஜேம்ஸ் ''ஆண்களுக்குத் தான்'' என்று அடித்துச் சொல்கிறார்.

அதே போல், கணவன் மனைவியைப் விட்டுப் பிரிந்தாலும் மனைவி கணவனை விட்டுப் பிரிந்தாலும் மனரீதியாகப் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் ஆண்களே!



# இணைந்த கரங்கள் "நவமணி" அய்யூப், "குரும்பூர் குப்புசாமி"

உலகின் எந்த மூலையில் எப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடந்தாலும் இன ஐக்கியமும் சௌஜன்யமும் வாழத்தான் செய்யும். வாழ்ந்தே ஆக வேண்டும்.

எங்கோ தொலை தூரத்தில் (ஹாங்காங்) தொழில் பார்க்கும் ஓர் அய்யூப், 'ராணி' இதழ் மூலம் இலட்சக் கணக்கான ரசிகர்களை (அதுவும் அதிகமாக ரசிகைகளை) சம்பாதித்திருக்கும் 'குரும்பூர் குப்புசாமி' இருவரும் தங்கள் கரங்களை இணைத்துக் காட்சி கொடுக்கின்றனர். காரிய சாதனை செய்கின்றனர். கண்கொள்ளாக் காட்சி அது.



காரணத்தை ஆராய்ந்தால் பல.

இந்திய இரத்தம் அவர்கள் இதயத்தில்.

தமிழக மண்ணின் வாசனை அவர்கள் உடலில். அனைத்தையும் விட மேலாக தமிழன்னையின் புத்திரர்கள்.

எழுதும் போது என் உடலே புல்லரிக்கிறது

இந்த இருவரும் கரங்களை இணைத்துக் கொண்டது இன்று நேற்றல்ல. நான் அறிய ஆண்டுகள் ஐந்துக்கு மேலாகின்றன. குரும்பூரில் பிறந்து குறும்பாக எழுதி எழுதி தமிழ் ரசிகைகளை தமிழகத்திலும் கடல் கடந்தும் கவர்ந்த திரு.அ.மா.சாமி அவர்கள் ரொம்ப சீரியசாக ஒன்றை நினைத்தார்.

எதையெதையோ எழுதிப் பேசி கலாநிதிகளாகவும் பேரறிஞர்களாகவும் புகழ் பெறுபவர்கள் ஏன் தமிழ்ப் பத்திரிகைகள்



(இதழியல்) வரலாறு பற்றிச் சிந்திக்கவில்லை. ஆய்வுகள் நடத்தவில்லை என்று வேதனை கொண்டார்.

வழக்கமான தனது ஜனரஞ்சக எழுத்துக்களுக்கு மத்தியில் அலட்டிக் கொள்ளாமல் ஓர் ஆராய்ச்சியாளர் ஆனார்.

'தமிழ் இதழ்கள் தோற்றம்- வளர்ச்சி என்ற அரிய ஆய்வு நூல் பிரசவமானது 1987ல்.

அதனைத் தமிழுலகம் அறிய வைத்தார். அ.அய்யூப், ஹாங்காங்கில் இரத்தினக் கற்களால் செழிக்கும் அவர் தமிழின் செழிப்புக்காக ஒரு வெளியீட்டாளராக மாறிப் போனார்.

ஆண்டுகள் ஐந்தைக் கடந்த பொழுது கட்டுக்கட்டாக 19ம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள் குரும்பூர் குப்புசாமியின் முன்னால்! அவற்றுக்கு முறையான ஆராய்ச்சி தேவைப்பட்டது. இலங்கையிலிருந்தும் இலண்டனிலிருந்தும் தகவல்கள் பெற அந்தந்த இடத்து நாணயங்கள் தேவைப்பட்டன. அதற்கும் உதவினார் அய்யூப். அப்புறம் முன்னைய நூலை வெளியிட்டதைப் போல இரண்டாவது நூலுக்கும் கை கொடுத்தார்.

அதன் தலைப்பு '19 ஆம் நூற்றாண்டு தமிழ் இதழ்கள்'. இலங்கை வெளியீடுகளை விரிவாக உள்ளடக்கிய ஒரு புதையல்.

இந்தப் புத்தகம் கேட்டு வந்த வரம் நல்ல வரம். எந்த நூலுக்கும் கிடைக்காத பாக்கியம் இதற்கு. உலகளாவிய ரீதியில் உலகம் சுற்றி வெளியீட்டு விழாக்கள் கண்டு வருகிறது.

இலங்கையில் இன்று ஞாயிறு மாலையில் தலைநகரில் வெளியீடும் பாராட்டும் நடக்கிறது. மாண்புமிகு இராஜாங்க அமைச்சர்கள் அஸ்வர், தேவராஜ் எம்.பீக்கள் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ள, இணைந்த கரங்களுக்கு ஏ.பி. பில்ம்ஸ் அதிபர் ஏ.எஸ்.எம். ஹசன்.பொன்னாடைகள் போர்த்த தமிழை சகோதர மொழியாகக் கொண்டு பாசமும் நேசமுமாய் உள்ள மேமன் சமூகப் பெருமானார் ஹாஜி ஹாசிம் உமர் முதல் பிரதி பெறுவார்.

நல்லது அபிமானிகளே. செய்வோர் செய்யட்டும் பேசுபவர் பேசட்டும் நினைப்போர் நினைக்கட்டும். நாமும் இணைந்த கைகளாக அய்யூப்-சாமி போல செயல்படுவோம். இறைவன் துணை.

1992 நவம்பர் 29.






# போக்கிடமில்லா பொக்கை வாய்கள்

இங்கிலாந்து இலண்டனிலிருந்து வெளியாகும் 'டெய்லி எக்ஸ்பிரஸ்' அக்டோபர் 17ந் தேதி இதழை அன்பர் அன்பளிக்க அதில் வந்துள்ள ஒரு விளம்பரம் இது.

விளம்பர வாசகங்களை முழுமையாகத் தமிழாக்கித் தந்தால் உங்கள் இதயம் கனத்துப் போகும். அதே சமயம் பிறருக்கு உதவ முடிகிறதே என்றும் நெகிழ்ந்தும் போவீர்கள்.

'வயதானவர்கள் வாழ்க்கைக்குப் பாரமானவர்கள்' எனச் சொல்லாமற் சொல்லும் விளம்பரம் இது.

இதில், தாய்லாந்து பாட்டி ஒருவர் 'ஔவை' போல நம்மைப் பார்க்கிறார். யாருமற்ற அனாதையாகத் தன்னந்தனியாக தன் சிறு காணி நிலமொன்றில் உழைத்து வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்தவர் திடீரென வாதரோகியாக அவரைக் கவனிக்க யாரும் இல்லாத நிலை. அச்சமயம் பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள இங்கிலாந்துக் குடும்பமொன்று அவரது இறுதிக் காலம் வரையில் 'தோன்றாத் துணையாக' இருக்க முன் வருகிறது.

'ஒரு பாட்டியைத் தத்தெடுங்கள் - வயது முதிர்ந்தோருக்கு உதவுங்கள்' எனச் சுலோகமிட்டுக் கொண்டு சேவையாற்றும் ஓர் இயக்கத்தின் மூலம் இது சாத்தியமாகியுள்ளதாக விளம்பரம் பேசுகிறது.

தொடர்ந்தும் இணை துணையில்லாப் பாட்டிமார்களுக்கும் பாட்டாக்களுக்கும் உதவ மேல்மட்ட வெள்ளையரிடையே ஆட்களைச் சேர்க்கவே இந்த விளம்பரம் போடப்பட்டுள்ளது. அதே சமயத்தில் 'ஏழை நாடு ஒன்றிலிருந்து' மூப்பானவர்களைத் அது விரும்புவது போலவும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் வாசகங்கள் உள்ளன.

எப்படியிருந்த போதிலும் நம் கண்ணெதிரே ஆயிரமாயிரம் 'பொக்கை வாய்கள்' தோன்றுகின்றனர். அவர்கள் தங்கள் இளவயதிலே பிள்ளை குட்டிகளைப் பெற்று அவர்களை ஆசை ஆசையாக வளர்த்துச் சீராட்டிப் பாராட்டி என்னென்ன ஆசைக் கனவுகளை கொண்டிருப்பார்கள் எங்கே அவர்கள் எல்லோரும்? உலகத்தின் எல்லா மூலைகளிலும் இது தானா நடக்கிறது?

## ஒளவை இங்கிலிஷ்

ஒளவைக் கிழவி அன்றே ஆங்கிலம் பேசியிருக்கி றாள். நம்புவீர்களா?

''பாம்பென்றால் படையும் நடுங்கும்;' அவள் கூறியது. இதைத் தனித்தனியாக குத்திக் குதறினால் 'பாம் -என்றால் படையும் நடுங்கும்' என்று வகைப்படுத்தலாம். 'பாம்' என்றதுமே இந்தப் போர்க காலத்தில்' வெடிகுண்டைத் தான் குறிக்கும். எல்லாப் படையி னரும் 'பாம்' என்ற கண்ணிவெடி சங்கதிக்கு நடுங்கத்தான் செய் கின்றன. ஒளவை தீர்க்கதரிசி, அன்றைக்கே சொல்லி விட்டாள் பாருங்கள்.

(பாம்பு, கீம்பு என்றெல்லாம் வேறுவிதமாகத் தெளிவுபடுத்த வராதீர்கள். இந்தக்காலச் சின்ன வர்கள் ஏற்கமாட்டார்கள்)

## 13- 'அன்லக்கி' அல்ல

13ம் இலக்க துர்அதிர்ஷ்ட (அன் லக்கீ) மானது என்பதெல்லாம் இப்பொழுது பொய்த்து வருகிறது.

13ம் தேதி 'பிறந்த ஒரு பெண்மணி தனது 112வது வயதில் இறந்திருக்கிறார். பருத்தித்துறை, அல்வாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த இம்மூதாட்டியை அதிர்ஷ்டக் கட்டை என்று சொல்ல முடியுமா?

## நேரம் 5000 ஆண்டுகளுக்கு முன்

இப்போது நம் உபயோகத்தி லுள்ள கடிகாரங்கள் முற்காலத தில் இருக்கவில்லை. 5000 ஆண்டுகளுக்கு முன் நான்கு முறையில் நேரத்தை கணக்கிட்டு தெரிந்து கொண்டார்கள். சூரிய வெளிச்சம், நெருப்பதிர்வு, நீரலை. ஊற்று மணல் போன்ற வைகளால் நேரம் கணக் கிடப்பட்டது.

## கழுத்துப்பட்டை அழுக்கு

சட்டைகளின் கழுத்துப் பட்டைகளில் அப்பியிருக்கும் அழுக்கைப் போக்க முதல் நாளிரவு முகப்பவுடரை அதிலே பூசி வையுங்கள் அடுத்த நாள் வழக்கம் போல் சவர்க்காரத்தைக் கொண்டு கழுவினால் அழுக்கு கள் மாயமாக மறையும்.

## கொய்யா வந்தது எங்கிருந்து?

கொய்யாக்கனி குழந்தை களுக்கு மட்டுமா ஆசை? நமக்குந்தான். விட்டமின் 'சி' சத்து நிறைய உள்ள கொய் யாவை உலகுக்கு தந்தது தென் அமெரிக்கா. இங்கிருந்துதான் தக்காளியும் உருளைக்கிழங்கும் பட்டாணியும் மக்காச் சோளமும் மனித இனத்திற்கு வழங் கப்பட்டன.



# அட்டை மீன் சீனர்களுக்கு சீதனம்!

சீன மக்கள் மீன்களில் ஒரு வகையைச் சீதனமாகக் கொடுத்துக் கொண்டிருப்பது நம் அபிமானிகளுக்கு நல்ல ருசியைத் தரும். அதுவும் அவர்கள் தமிழ்நாட்டு இராமநாதபுர மாவட்டக் கடற்கரையில் அபரிமிதமாகக் காணப்படுகிற அபூர்வ அட்டை மீனைத்தான் அள்ளி அள்ளிச் சீதனமாக வழங்குகிறார்கள்.

இந்திய மீன் ஆராய்ச்சி தலைமை விஞ்ஞானி ஜேம்ஸ் என்பாரது தகவலொன்றின் படி தமிழ்நாட்டில் அட்டை என்றும் வெளிநாட்டினரால் கடல் வெள்ளரிக்காய் என்றும் அழைக்கப்படுவது ஓர் அபூர்வ மீன் வகையாகும்.

இதை சீலக் என்றும் (அதாவது கடல் அதிர்ஷ்ட ஜந்து) அழைக்கிறார்கள்.

சீனர்கள் இதை மங்கலப் பொருளாகக் கருதி திருமணத்தில் சீதனமாகவே வழங்குகிறார்கள்.

கொரியர், ஜப்பானியர் மங்கோலியர் இதை விரும்பி உண்கிறார்கள்.

இரத்தக் கொதிப்பு தசைக் கோளாறு மற்றும் வீரிய சக்திக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் இந்த மீன் அபூர்வ மருந்தெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து ஆண்டொன்றுக்கு 55 இலட்சம் டன் அட்டை மீன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஒரு டன்னின் விலை இந்திய விலையில் ரூபாய் இரண்டரை இலட்சம். அம்மாடி

(ஓர் அடிக்குறிப்பு கேள்வி- இது இராமநாதபுரக் கடலில் இருந்தால் இலங்கையிலும் இருந்ததாக வேண்டுமே. நமது மீனவர்களிடம் விவரம் உண்டா?)



# பள்ளிவாசல் மணம் பரப்பும் துளசிச் செடி

பாணந்துறை தொட்டவத்தையில் வந்து தங்கியுள்ள வட பகுதி மக்களின் நலன்காண போன பொழுது பகல் தொழுகைக்காக பதுரிய்யாப் பள்ளியில் பத்து நிமிடங்கள் மிக நிம்மதியாகக் கழிந்தது. அங்கிருந்து வெளியேறுகையில் தான் அந்தச் செடியில் பார்வை பட்டுத் தெறித்தது.

அது ஒரு துளசிச் செடி. பக்கத்தில் மல்லிகைச் செடியும்.

பள்ளிவாசலின் அந்தச் சிறிய வளவுக்குள் அவ்விரு செடிகளும் இடம் பிடித்து காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

மல்லிகை அதிசயமாகப்பட வில்லை. ஆனால் துளசி? அது. இந்துப் பெரு மக்களுக்குப் புனிதமானது. வீடுகளிலோ, வாசளின்முன் அல்லது பின் புறத்திலோ வளர்த்து, விளக்கும் ஏற்றி வணக்கத்திற்குறிய ஒரு பொருளாகக் கருதுவது அவர்கள் மரபு.

அத்தகைய ஒரு செடி பள்ளிவாசலுக்குள் நுழைந்திருப்பது சரிதானா?

மெத்தச் சரி. தமிழ் மக்கள் அதன் மகத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள். முஸ்லிம்கள் புரியாமல் தூர வைத்திருக்கிறார்கள்.

உண்மையில் துளசிச் செடி இறைவனின் ஓர் இயற்கைக் 'கிருமி நாசினி. மிகச் சிறந்த மருத்துவ மூலிகை.

கொஞ்சம் இலையைக் கிள்ளி, அல்லது பூவைப் பிய்த்து கையிலே தேய்த்து முகர்ந்து பார்த்தாலே கமகமவென்று ஒரு மணம் வரும். அத்தனையும் உடம்புக்குச் சுகம் தரக் கூடியது. வியாதிகளை அண்ட விடாமல் விரட்டக் கூடியது.



சமீபத்தில் சென்னையில் நான் சந்தித்த இலக்கிய வரலாற்றுப் பேரறிஞர் அல் ஹாஜ் இத்ரீஸ் மரைக்காயர் கூடப் பேச்சுவாக்கில் துளசிச் செடியைச் சொல்லி, உங்கள் வீட்டில் குழந்தை இருந்தால் ஒரு துளசிச் செடியும் வீட்டில் வளர்க்க வேண்டும் என்றார்கள். துளசியின் மருத்துவ மகத்துவம் குறித்து பல நூல்கள் இருப்பதையும் நினைவுபடுத்தினார்கள்.

அவர்களைச் சந்தித்த ஒருமாதகால இடைவெளியில் இறைவனது இல்லத்திலே துளசியைப் பார்த்துப் பிரமிப்பே ஏற்பட்டது. பாணந்துறைப் பள்ளியில் இதை வளர்க்க எந்த மனிதர் முடிவெடுத்து காரியசாதனை செய்தாரோ அவர் பெரிய விஷயம் தெரிந்த மனிதராக இருக்க வேண்டும். வாழ்க அவர்.

## துருக்கி எங்கும் மஸ்ஜித்கள் மயம்

வருடத்திற்கு 150 மஸ்ஜித்கள் வீதம் துருக்கியில் புதுப்புது மஸ்ஜித்கள் கட்டப்பட்டு வருகின்றன. தற்சமயம் 67,670. உள்ளன. பள்ளிவாசல்களின் முக்கியத்துவம் குறித்து மக்களை அறிவுறுத்த ''மஸ்ஜித் வாரம்'' அனுஷ்டிக்கப்படுகின்றது.


**தகவல் அறிந்தவர்: யு.எல். முஸம்மில், ஹேனகெதர.**

## உலகில் அதி கனமான குர்ஆன்

பாகிஸ்தானைச் சேர்ந்த கையெழுத்துக்கலை நிபுணர் ஒருவர் திருக்குர்ஆன் பிரதியொன்றை கையால் எழுதித் தயாரித்திருக்கிறார். இதுவே உலகில் மிகவும் கனமான திருக்குர்ஆன் பிரதி மொத்த எடை 1500 கிலோ. இதை எழுத இரண்டாண்டுகள் ஆயின. ஒன்னரை இலட்சம் செவாகியுள்ளது. இந்தச் சாதனையைச் செய்தவர் ஹாஜி பஷீர்

என்பவர் பாகிஸ்தான் செல்லக் கிடைத்தவர்கள் பைசாலாபாத் அருங்காட்சியகத்தில் (மியூசியம்) இதனைக் கண்டு பரவசப்படலாம்.

**ஸ்ரீ சித்தி விநாயகர் ஆயுதங்கள்**




விக்கினங்கள் அனைத்தையும் தீர்ப்பார் எனத் தமிழ்ச் சகோதரர்கள் நம்பும் ஸ்ரீ சித்தி விநாயகர் சாமானியரல்லர் என்பதை நான்தான் தெரிவிக்க வேண்டுமென்பதில்லை.



என்றாலும் நான் தெரிவிக்கக் கூடிய சமாசாரம் ஒன்று இருக்கிறது. அருகிலுள்ள படத்தைப் பாருங்கள். அத்தனையும் ஆயுதங்கள். கத்தி, கேடயம், அம்பு, வில் என்று நமக்குத் தெரிந்தவை போக, மற்றவை அத்தனையும் அறிமுகம் அல்லாதவை. இன்றைக்கு 'டி 56', 'ஏகே 47' என்று என்று இன மத பேதமில்லாமல் நவீன ஆயுதங்கள் பயமுறுத்துகின்றன. ஆனால் எக்காலத்திலும் தமிழ் மக்களைக் காக்கவென ஸ்ரீ விநாயகப் பெருமான் வைத்திருக்கும் 29 ஆயுதங்களில் 14 ஆயுதங்களை நான் இங்கு வழங்குவதில் மகிழ்ச்சி. திருவாவடுதுறை ஆதீனத்தாரிடமிருந்து பெற்றவை இவை.

# ஜப்பானில் அரிசியும் சீனியும் கட்டுபடியாகாது

அன்றாட உணவு வகைகளில் எந்த நாட்டில் 'ஆனை விலை, குதிரை விலை' விற்கிறதென்று ஆராய்ந்து பார்த்ததில், 'ஜப்பான், ஜப்பான், என்று நாம் பேசிக் கொண்டிருக்கிற நாட்டில் தான் மகாபயங்கரமாம்.

36 வகை உணவுகளைப் பட்டியலிட்டு டோக்கியோ (ஜப்பான்) - நியூயார்க் - லாஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா) இலண்டன் - பாரிஸ் - ஹம்பார்க் - சிட்னி (ஆஸ்திரேலியா) சிங்கப்பூர் முதலிய இடங்களில் அவை என்ன விலைகளில் கிடைக்கின்றன என்று பார்த்ததில் டோக்கியோ தூக்கி அடித்திருக்கிறது. இந்த எட்டு நாடுகளிலும் அங்கேதான் முப்பது சதவிகிதத்திற்கு மேல் அதிகம்.

அதிலும் அரிசியும் சீனியும் மாட்டிறைச்சியும், பன்றி மாமிசமும் கிட்ட நெருங்க முடியாதபடி அளவுக்கதிக விலை. இதற்கு இறக்குமதி கட்டுப்பாடும் ஒரு காரணம்.

அப்படியானால் அங்கே என்ன உணவுதான் 'சீப்' பாகக் கிடைக்கும் என்றால். முட்டையும், கோழியும், வெங்காயமும் மலிவாய்ப் பெறலாம்.

மேலும் ஹோட்டல் டாக்ஸி வாடகைகள் சொல்லி மாளாது. மின்சாரக் கட்டணங்கூட அப்படித்தான்.

# வண்ணத் தோகையில் பேனா முனை!



**வண்ணமயிலின் தோகை ஒன்றையும் அதன் நுனியில் 'பேனாமுனை'யையும் (நிப்) பார்த்துவிட்டு நீரோட்டமாக பலபல எண்ண ஓட்டங்கள்...**

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் நான்கு இடங்களில் ஒரே சமயத்தில் வெளியாகும். 'ஈ நாடு' (நம் தேசம்) நாளிதழ் இதைத் தன் விளம்பரங்களுக்கு உபயோகிக்கிறது.

வண்ணத் தோகையில் பேனாமுனையை செருகி வைத்திருப்பது புதுமையாக இருப்பது மட்டுமல்ல, அழகாகவும் உள்ளது. பாரத நாட்டின் தேசியப் பறவையாக விளங்குவது. ஆண் வண்ண மயில் அதன் தோகையுடன் பத்திரிகை எழுதும் முனையை இணைப்பதன் மூலம் தேசியக் கண்ணோட்டத்துடன் பத்திரிகை வெளியிடுகிறோம் என்கிறார்களா? அல்லது தேசிய நாளேடு என்று உணர்த்துகிறார்களா? இல்லாவிட்டால் இரண்டுமா என்று சொல்ல இயலவில்லையே. எப்படியோ ஐடியா பிரமாதம்.



இதேபோல் நமது எயர்லங்காவும் வண்ண மயிலை தன் சின்னமாக வரித்துக் கொண்டுள்ளது. அது ஏன் என்பதை அறிய நேரம் கிடைக்கவில்லை.

தமிழ்ச் சகோதரர்கள் முருகப் பெருமானின் வாகனமாக அதை ஏற்றிப் போற்றுகின்ற மரபு யாருக்குந் தெரிந்ததே.

ஆனால் ஜென்ம விரோதி பூனை என்பது தெரியுமோ?

மேலும், உலகின் எல்லா இடங்களிலும் சவசவ என்று மயில் இனம் கிடையாது. இந்தியா- இலங்கை- பர்மா அவ்வளவுதான். (பர்மாவிலும் இதுவே தேசியப் பறவை)

புலிக்கும் சிறுத்தைக்கும் 'புரியாணி' இதுதானாம். அதை அந்த மிருகங்கள் வேட்டையாடுவது பாய்ந்து குரல்வளையை நெறித்தல்ல. அது ஒரு தனிக்கலை. மயில்களைக் கண்டதும் அந்த மிருகங்கள் அவற்றின் கண்களையே இமைக்காது நோக்கி வசியப்படுத்துமாம். அந்த வசியத்தில மயக்கமுறும் மயில்கள் தன்னுணர்வற்றுப் போய், ஆடாமல் அசையாமல் நின்றுவிட காரியம் கனகச்சிதமாக முடித்துவிடுமாம்.


தமிழ் இலக்கியங்களில் மயிலுக்கு இல்லாத இடமா? காணமயிலாடக் கண்டிருந்த வான் கோழி...'' நமக்குச் சின்ன வயதிலேயே 'காங்கிரீட்டாக' அமைந்துபோன பாடல்.

'பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இருந்த ஜனாப். கே. ராஜா முகம்மது 'வண்ண மயில்' என்ற ஒரு மிகத் தரமான இலக்கிய சஞ்சிகையைத் திரைமறைவில் நின்று தோகை விரித்தாடவைத்ததுண்டு.

## கிரீஸ் பெண்களின் வயது திருமண நாளிலிருந்து

பழங்கால கிரீஸ் நாட்டில் பெண்கள் தங்கள் வயதைத் தாங்கள் திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்துதான் கணக்கிடுவார்கள். திருமணத்திற்குப் பிறகுதான் தங்கள் உண்மையான உலக வாழ்க்கை தொடங்குவதாகக் கருதினார்கள். ஒரு வகையில் இதுசரி, மீண்டும் இந்தப் பழக்கத்தைக் கொண்டு வர மாதர்சங்கங்கள் முயற்சிக்கலாமே.

# அக்கால 'டி-56' இதோ!



குரூரமான மரண தண்டனையை வழங்கும் 'கில்லட் டின்' கருவியைப் படத்தில் பார்க்கிறீர்கள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் பிரான்சில் புழக்கத்திலிருந்த கருவி இது. கருவியைக் கண்டு பிடித்தவர் பெயரையே வைத்திருந்தார்கள்.

1792ல் இது அறிமுகமான பொழுது களவு செய்த திருடன் தான் தண்டனை பெற்றான். அடுத்தாண்டில் பாரிஸில் பதினாறாம் லூயி மன்னனேயே கொன்றது இது. அக்காலத்தில் புரட்சி வீரர்களாக விளங்கிய பல அரசியல் கைதிகளைத் தீர்த்துத் தள்ள இது பெரிதும் உதவியது. இன்றைய டி. 56'ன் வேலையை அது அன்று செய்தது என்று சொல்லலாம்.

உதாரணத்திற்கு பிரான்சில் புதிதாக அமையப் பெற்றிருந்த நாடாளுமன்ற வலதுசாரிகள் 21 பேரை முப்பத்தெட்டே நிமிடத்தில் வெட்டித் தள்ளியது. இன்னொரு சமயத்தில் குடியரசு கட்சி ஆதாரவாளர் 15 பேரை முப்பது நிமிடத்தில் முடித்தது. 1974ல் மட்டும் ஏழு கிழமைக்குள் 1351 பேரை 'சதக் சதக்' செய்தது. சராசரியாக நாளொன்றுக்கு 30 பேர் வீதம் எமலோகம் போய்க் கொண்டிருந்தார்கள். 1977ம் ஆண்டில் இதற்குப் பென்சன் கொடுத்தார்கள். அன்றைக்கும் ஒருவனைக் கொன்று விட்டுத்தான் ஓய்வு பெற்றது.

இப்பொழுது பிரான்ஸ் நாட்டின் அருங்காட்சியகத்தில்.





## The coffin moved

MOULMEIN (Burma), Saturday

A YOUNG man narrowl escaped being buried alive here.

Maung Tin Win, 17-year-old son of O U Hla Tin and Daw Thein of Pabedan quarter, had small-pox and was pronounced dead.

The sorrowing parents held the funeral for him at the Buddhist cemetery in Myenigone quarter. While the last rites were being performed by Buddhist monks besides the wooden coffin at the edge of the freshly-dug grave, it began to move.

When groans were heard inside the coffin, relatives decided to open it. They found Maung Tin Win alive —Sapa-Reuter.

THE DAILY NEWS

JANUARY 3, 1984

## Shaken and stirred

NAIROBI Mr Barnabas Achachi suddenly stirred while being carried to a mortuary after he was declared clinically dead "from too much Christmas liquor"

Returned to hospital, doctors advised him to go easy on strong drink —Sapa-AP

Ripley's—Believe It or Not!



# செத்துப் பிழைத்தவர்களுள் சாயிபாபாவும் ஒருவரா?

ஓர் அபாயத்திலிருந்து மீண்டால் 'நான் செத்துப் பிழைத்தேன்' என்போம் உண்மையிலே 'செத்துப் பிழைப்பவர்கள்' சங்கதி அன்றாடம் உலகில் நடக்கிறது. அண்மையில் சவூதியில் இறந்த ஒரு மனிதன் அதே 'கபன்' உடையோடு வீட்டுக்கு வந்து சும்மா இருந்த இருவரை அதிர்ச்சியால் சாகடிக்கச் செய்ததை நீங்களனைவரும் அறிவீர்கள்.

இதேபோல ஒரு பிரபலமான மனிதரை, 'மூன்று நாட்கள் செத்துப்போனார். அப்புறம் பிழைத்தார்' என்கிறது. ''நம்பினால் நம்புங்கள்'' பகுதியொன்றை பல உலக நாளேடுகளில் வெளியிட்டு வரும் பிரசுர நிறுவனம் ஒன்று.

நான், அது வெளியிட்டுள்ள தகவல்கள் மூன்றை அப்படியே இங்கு தமிழ்ப்படுத்தி தந்துவிடுகிறேன். நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் உங்கள் பொறுப்பு.

★ ''மூன்று நாட்கள் மரணித்திருந்த சாய்பாபா'' (1856-1918) இந்தியா ஷிராந்தியில் உள்ளவர். அவர் 1886ல் இந்ததாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அவருடைய மூச்சும் மற்றும் இயக்கங்களும் முற்றுமுழுதாக நின்று போயின. மூன்று நாட்களின் பின்னர் அவரது மரணச் சடங்குகளுக்கு ஆயத்தங்கள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தபொழுது அவர் மூச்சு விடுவதைப் புரிய முடிந்தது. அதன்பின் அவர் மேலும் 32 ஆண்டுகள் உலகில் வாழ்ந்தார்.

✤ பர்மாவில் ஒரு நிகழ்ச்சி. 17 வயது வாலிபனொருவனுக்கு சின்னம்மை போட்டிருந்தது. அவன் இறந்துவிட்டதாக முடிவு செய்தார்கள். பௌத்த மையவாடி ஒன்றில் புதைக்கும் ஏற்பாடுகள் நடந்து, புதைகுழிக்கு அருகில் பௌத்த பிக்குகள் இறுதிச் சடங்குகளை நடத்திக் கொண்டிருந்த பொழுது சவப்பெட்டி நகரத் தொடங்கியது. உள்ள 'சவம்' முக்கி முனங்குவது கேட்டது திறந்து பார்த்த பொழுது வாலிபன் உயிரோடு இருந்தான்.

✤ நைரேபி, ஆபிரிக்காவில் ஒரு மனிதன், கிறிஸ்மஸ் அன்று மிதமிஞ்சிக் குடித்து உயிரை விட்டு விட்டான் என்று சவக்காலையில் கொண்டு போய்க் கிடத்தினார்கள். போகிற வழியில் அசையத் தொடங்கிய அவன் செத்துப் பிழைத்தான்.

## ஆணுக்கு ஆண், பெண்ணுக்குப் பெண் சட்டபூர்வ பதிவுத் திருமணம்.

ஒழுக்கத்தைப் பேணுவதும் பண்பாடு பார்ப்பதும் கீழைநாட்டு மக்களாகிய நமக்கு இறைவன் காட்டிய பாதை. அதிலும் கூட நூற்றுக்கு நூறு இல்லையே என அங்கலாய்த்த படியே வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டிருக்கிறோம். டென்மார்க் நாட்டைப் பாருங்கள். ஒழுக்கம் பண்பாட்டுக்கெல்லாம் அந்த நாட்டின் அகராதியில் வேறு அர்த்தம்தான். எயிட்ஸ் பெருவியாதியை ஒழிப்பதற்கு ஆணையும் ஆணையும், பெண்ணையும் பெண்ணையும் பதிவுத் திருமணம் செய்துவித்து தம்பதிகளாக்கி விடுவதுதான் சிறந்தது. அப்பொழுது தான் ஒழுக்கம் பண்பாடுகாக்க இயலும் என்று அது முடிவுக்கு வந்துவிட்டது. இப்பொழுது அங்கே சட்டப்படி ஒரு பெண்ணை இன்னொரு பெண் 'வாழ்க்கைத் துணைவி' யாக்கிக் கொள்ளலாம். அவ்வாறே ஆண்களுக்கும். ஆனால் குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்க்க இயலாது. தங்கள் இணைப்பைப் பதிவு செய்து கொள்ளலாம். திருமணம் அது இதுதென்று வைபவங்கள் நடத்த முடியாது. மற்றப்படி கல்யாணம் செய்த ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள எல்லா உரிமைகளும் உண்டு. 59 ஆண்டுகளுக்கு முன்பேயே தன்னினச் சேர்க்கையை அங்கீகரித்த டென்மார்க்கில் இப்பொழுது இரண்டாவது அங்கீகாரம் கிடைத்துள்ளது. சுவீடன் தேசமும் இதே நடைமுறையைச் அமுலுக்கு கொண்டு வந்துவிட்டது. ஆக, உலகத்தில் இரண்டு நாடுகள் தலைகாலியாகி மதி இழந்து தறிகெட்டு தறுதலைகளாகி விட்டன.



# அதிக வயது வாழ்வோர் ஆசியப் பெண்களே!

நாம் வாழும் ஆசியக் கண்டப் பகுதிப் பெண்களே ஆண்களை விட அதிக வயது வாழ்பவர்கள்.

ஜப்பான் மக்களின் சராசரி வயது 75. ஆனால் பெண்கள் 90ஐ எட்டுகிறார்கள்.

கொரியாவிலும், ஹொங்கோங்கிலும் 80வரை பெண்கள் வாழ்கிறார்கள்.

மற்ற நாடுகளின் சராசரி வாழ்க்கை எல்லைகள் இவை. சீனா - 69, மலேசியா - 68, தாய்லாந்து - 64, இந்தோனேஷியா - 55. இவைகளை ஜப்பான் நாட்டு நிஹோன் பல்கலைக்கழக ஜனத்தொகை ஆய்வுப் பிரிவு கண்டறிந்துள்ளது. அதன் ஆய்வில் முக்கியமானது பெண்கள் ஆண்களை விட அதிக வயது வாழ்கிறார்கள் என்பதே.

இந்தியா இலங்கையைப் பற்றி குறிப்பாக இவர்களின் ஆய்வில் எதுவுமில்லையென்றாலும் இங்கேயும் நிலைமை இப்படித்தான். அறுபதைக் கடந்து விட்டால் நாம் நாட்களை எண்ணிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம். ஆனாலும் அதற்கிடையில் பாழும் குரங்குமனம் என்னென்ன ஆட்டமெல்லாமோ போட்டு விடுகிறதே. ஆட்டத்தை அடக்கி அமைதி வாழ்க்கை வாழ்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.

## மாமியார் ஜோக்ஸ்



''யாரு அது? உன் மாமியார் கூட எப்பப் பார்த்தாலும் ஒரு பொம்பிளை இருக்கா?''

'அதா... மாமிக்கு வயது போயிட்டுது. ரொம்ப நேரம் என்னோட சண்டை புடிக்க ஒரு ஆளு'



# கைலாயர் செல்லநைனார் மகனுடன் ஒரு ஜப்பானியர்

தலைப்பு கொஞ்சம் நெற்றியைச் சுளிக்க வைக்கும். யார் இந்தக் கைலாயர் செல்ல நைனார் என்பதைக் கண் பிடிக்க வேண்டுமே! இன்றைக்கு கலை, இலக்கிய, விமர்சனத்துறையில் ஏதாவது பயனுள்ளது நடக்கிறதென்றால் அது கே.எஸ். சிவகுமாரன் ஒருவரால்தான். அவரது தந்தையார் பெயர் அது! ஏனைய கலாநிதிகள், போரசிரியர்கள் யாரைத் தள்ளலாம். யாரை ஒதுக்கலாம் என்று யோசித்து முடிப்பதற்குள் இவர் பல மைல்கள் தூரம் போய் எந்த இருட்டடிப்புமே செய்யாமல் எழுதி முடித்துத் தன் கண்ணாடியைத் துடைத்துவிட்டுக் கொள்கிற பிறவி!

ஆகவே, அப்படிப்பட்ட ஒரு ' நல்ல பிள்ளை' மட்டக்களப்பில் பிறக்கக் காரணமாகவிருந்த வரை அறியவைக்க ஆசை. தலைப்பு இப்படி அமைந்தது. இருந்தாலும் இந்தப் 'பிள்ளை'க்கு வயது 55.

தொலைவில் ஜப்பானில் நாகசாகி பல்கலைக்கழகப் பொருளியல் பீடத்து லீ ரோய் ரொபின்சன் இவரை எப்படியறிந்தாரோ, வசதிப்படுகிற நேரங்களில் எல்லாம் நேர்முகங்கள். பசுவின் மடியில் பால் கறப்பது போல... ந்து சுடச்சுட அங்கே கலைச் செய்தி மடல்களில் பதிப்பித்தார்.

இப்படி 88, 89, 90ம் ஆண்டுகளில் நிகழ்ந்த நேர்முகங்களால் நம்மவர்களுக்கு அடித்தது பிரைஸ்! நமது கலைஞர்கள், எழுத்தாளர்கள் விவரங்களை இப்போது உலகம் தெரிந்திருக்கிறது. ஜப்பான் வழியாக!

இன மத பேதம், சித்தாந்தம் போன்றவைகளை தூர வைத்துவிட்டு நேர்முகம் கொடுத்திருக்கிறார் செல்ல நைனாரின் மகன்.

நம்மைப்பற்றி நம் காலத்திற்குப் பிறகும் சொல்லும் அந்த நூலின் தலைப்பு: ''எஸ்பெக்கடஸ் ஆஃப் கல்சர் இன் ஸ்ரீ லங்கா''.

செல்ல நைனார் மகன் சிவகுமாரனார் கையைத் தரவேண்டும் பலமாகக் குலுக்க!

ஆகஸ்ட், 18-1991



## காலைப் பொழுது பைபிள்!

பிரான்ஸ் நாட்டு மேல் மத்தியதர வகுப்பார் காலை நேரத்தில் தாங்கள் வாங்கும் ஒரு தினசரியை, ''காலைப் பொழுது பைபிள்'' என்று கூறிக் கொள்வார்கள். அதன் பெயர் 'லேஃபிகாரோ'. வத்திக்கானிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபை வெளியிடும் வாராந்திர இதழுக்குப் பெயர் 'லே ஒஸ்வாடோர் ரோமானோ'!

## அதிக வயது வாழ்வோர்

நிச்சயமாக ஆண்களல்ல. பெண்கள் அதுவும் ஐரோப்பியப் பெண்கள். அவர்களது சராசரி வாழ்நாள் 81.39 அய்ஸ்லாந்து பெண்கள் இரண்டாம் இடம் பெறுகிறார்கள். நாற்பதாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பியப் பெண்கள் வயது சராசரி 53.96 ஆக இருந்தது. இந்த வளர்ச்சிக்குக் காரணம் நோய்த் தடுப்பு முறையான வாழ்வு கட்டமை உணர்வு என எடுத்துக் காட்டப்படுகிறது.

## பைபிள் பிராணிகள்

★ பைபிள் பிராணிகள் ஜெரூசலேமிலுள்ள ஒரு மிருகக் காட்சிசாலையில் அனைத்து மிருகங்களையும் பறவைகளையும் பார்க்க முடியாது. பைபிள் வேகத்தில் வரும் விலங்குகளை மட்டும் வைத்திருக்கிறார்கள். அவற்றின் பெயர்கள் இடம் பெற்றுள்ள பைபிள் வாக்கியங்களையும் போர்டுகளில் எழுதித் தொங்க விட்டிருக்கிறார்கள்.

## சளிக்கு எளிய மூலிகை!

மார்கழி மாதத்திலும் கிறிஸ்மஸ் காலத்திலும் உடலை நடுநடுங்க வைக்கும் குளிர் காற்று வீசுவது இயற்கை. உடம்பை உலுக்கத் தொடங்கி விடும் இக்காற்றினால் சிலருக்கு நெஞ்சில் சளி உண்டாகி விடுவது வழக்கம். இந்தச் சளியைப் போக்கும் அருமருந்தாகப் பயன்படுகிறது ஓர் எளிய பணச் செலவில்லாத மூலிகை; அது, துளசி இலை. இலையை இடித்துச் சாறெடுத்துக் கண்ணை மூடிக் கொண்டு குடித்துவிடுங்கள்.

## சூடான கிளாஸா?

சூடாக ஏதையாவது கிளாஸில் ஊற்றப் போகிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள். ஊற்றுவதற்கு முன்னால் ஒரு ஸ்டீல் கரண்டியை அதற்குள் போட்டு விட்டு பிறகு ஊற்றுங்கள் சூட்டை அந்தக் கரண்டி இழுத்துக் கொள்ளும். கிளாஸ் அவ்வளவாக சுடாது. 'சூடு சூடு' என்று குழந்தைகள் கத்தமாட்டார்கள்.

★★★★★★★★★★



# செக்ஸ் கேட்டுத் துரத்தும் ஓநாய்கள்

ஒரு புறத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மகாபாரதக் கதையை கூட்டம் கூட்டமாக 'தூரதர்ஷன்' தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கிற பாரதத்துப் பிரஜைகள் இன்னொரு புறத்தில் திங்கட்கிழமை விடிந்ததும் வேலைக்குப் போகிற பெண்களை செக்ஸுக்குத் துரத்துகிற வக்கிரத்தையும் செய்கிறார்கள்.

பிரியதர்ஷணி என்கிற அழகான பெயரில் ஒருவர் எழுதியிருக்கிற கட்டுரையில் பல பரிதாபமிக்கத் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

35 வயது நீலு முதல் நாள் வேலையில் அமரப் போனபொழுது தன்னுடைய 'பாஸ்' ஹலோ என்று கைகுலுக்கி வாழ்த்துவார் என்று எதிர்பார்க்க அவர் கட்டிப் பிடித்து வாழ்த்த முயன்ற பொழுது அப்படியே அசந்து போனாராம்.

செக்ஸ் வக்கிரத்தை ஏதாவது ஒரு வழியில் தீர்த்து வைக்காத பெண்களுக்கு புரமோசன், சம்பள உயர்வு முதலியவைகளெல்லாம் எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றாம்.

பெரிய அலுவலகங்களில் மாத்திரந்தான் செக்ஸ் வக்கிரமம் என்பது இல்லை மிகச் சாதாரண எடுபிடி வேலை பார்ப்பவர்கள் கூலிக்காரப் பெண்களிடமிருந்து கூட செக்ஸ் எதிர்பார்க்கிறார்கள் ஆண்கள்.

இந்த அபலைகள் செக்ஸ் தேவைகளைப் பூர்த்தி செய்தால் தான் மேஸ்திரிகள், மேற்பார்வையாளர்கள் கெடுபிடிகளில் பிரச்சினைகளிலிருந்து தப்ப இயலும்.

ஒரு கட்டடம் கட்டும் இடத்தில் கூலி வேலை செய்யும் ஹமீதா சொல்வது இது ''நான் ஏழுமாதக் கர்ப்பிணி. 11வது மாடிவரையில் சிமெந்தைச் சுமந்து ஏறி இறங்குகிறேன். இப்படியான நிலைமையிலும் நான் சிரித்து நல்லபடியாக நடந்து கொள்ளாவிட்டால் ஓவர்சியர் இன்னும் வேலையைக் கடுமையாக்குவான். முதலாவது, இரண்டாவது மாடிகளில் வேலை செய்ய வேண்டுமானால் ஓவர்சியரோடு நல்ல கூட்டாளிகளாக வேண்டும். அவன் கூப்பிடும் நேரமெல்லாம் அவன் அலுவலகத்திற்குள் நுழைந்துவிட வேண்டும். கர்ப்பிணிகள் அவனுக்கு அவ்வளவு கவர்ச்சியில்லை.



வீடுகளில் வேலை செய்யும் பெண்களின் நிலை இன்னும் பரிதாபமாம்.

வீட்டு வேலைகளை காலையிலிருந்து இரவு வரை செய்துவிட்டு எஜமானின் காலை அமுக்கும் வேலையும் உண்டு. இது மனைவியின் ஒப்புதலுடன் தனி அறையில் நடப்பதும் சாதாரணம். இந்த வேலைக்காரிகள் தவறிப்போய் கர்ப்பிணியானால் உடனே வீட்டு வாசல் திறக்கப்பட்டு வெளியேற்றப்படுவாள்.

பம்பாய் சினிமா உலகத்தில் இந்த வக்கிர செக்ஸ் தனிரகம் பெரிய பெரிய நடிகைகள் கூட டைரக்டரையும் தயாரிப்பாளரையும் ஹீரோக்களையும் அனுசரித்துப் போக வேண்டும். இல்லையேல் சான்ஸ் என்பது அப்படி அப்படி தான்.


'ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்கள்' என்று இருக்கிற எக்ஸ்ட்ரா நடிகைகள் நிலைமை படுமோசம் இவர்களிலும் 'சுப்பர் கிளாஸ்' 'கிரேட் ஏ' 'கிரேட் பீ' என்று இருக்கிறார்கள். பெரும்பாலும் விதவைகளும் கணவனை விட்டுப் பிரிந்தவர்களும் இந்த தரங்களில் அடங்குவார்கள். 'ஜூனியர் நடிகைகளின் ஏஜன்ட்' என்பவனைத் திருப்தி செய்வதிலிருந்து இவர்களின் வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும் நாளொன்றுக்கு கையில் நூறு ரூபாயை பெற்றுக் கொள்ளும் இவர்கள் யாருடைய செக்ஸ் வக்கிரங்களுக்கும் தப்பித்து விட முடியாது.

இந்தியாவில் மருத்துவ தாதிகள் என்போர் மற்றொரு அபலைகள்.

32 வயது சங்கீதா குறிப்பிடுகிறார். 'நான் பம்பாயில் ஒரு ஆஸ்பத்திரியிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றப்பட்டேன். இதை ரத்து செய்ய டாக்டரிடம் போனபோது 'அதையெல்லாம் என் வீட்டில் வந்து பேசிக் கொள்' என்றார் அவர். நான் தயங்கிய பொழுது 'எல்லா நர்ஸ்களும் விபசாரிகள் தான் என்றார் அந்த டாக்டர்.'

வேலைக்குச் செல்லும் இந்தியப் பெண்களிடம் வக்கிர செக்ஸ் ஜோக்ஸ்களைச் சொல்வதும் அவர்களை ரொம்பவும் சாதாரணமாகத் தொட்டு விளையாடுவதும் அன்றாட அசிங்க பழக்கமாகி விட்டனவாம்.

# அக்கால காயல்பதியின் வள்ளல் 'அ.க.'



அது காயல்பட்டணம் [illegible]
ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான தமிழர் - அறபு மக்கள் அன்புக்குப் பங்களிப்புச் செய்த இடம். (கீழக்கரையை போல்) அப்போது உலக மகாயுத்த காலம் (1939-45) காயல்பட்டணத்துக்குக் கிணறுகள் முழுமையிலும் உப்பு நீர். குடிநீருக்குப் பெரும் தவிப்பு. விலை கொடுத்து வழங்கும் அவலம்.



அப்புறம் ஆறு ஆண்டுகளின் பின் யுத்த முடிவில் ஊர் மக்களே ஒரு முடிவுக்கு வந்து ஆறரை லட்சம் திட்டத்தில் தண்ணீர்த் திட்டம் அமைததனர். இதற்கெனவே 'ஐக்கிய முன்னேற்ற சங்கம்' ஒன்று அப்பாப் பள்ளித் தெரு கனம் அ.க. முகம்மது அப்துல் காதிர் மர்ஹூம் அவர்கள் இல்லத்தில் கூட்டப்பட்டு அவரையே தலைவராகவும் ஆக்கினர்.

இந்த அற்புதமான 'ஆனா கானா' அப்போது கொழும்பு, இரண்டாம் குறுக்குத் தெருவில் ஒரு காசுக்கடை முதலாளியாகக் கொடி கட்டிப் பறந்தார்.

'காசுக்கடை' என்பதற்கே ஒரு தனிக் கட்டுரை எழுதவேண்டும். வைரமும், வைடூரியங்களும், தங்கமும், வெள்ளியும் புரளும் வர்த்தக நிறுவனத்திற்கே அப்படிப் பெயர்.

அப்படிப்பட்ட ஒன்றின் உரிமையாளர் தண்ணீர்த் திட்டத்திற்குத் தலைவரானதும் 29.4.45ம் ஆண்டு கொழும்பு நகரிலேயே ஆறரை இலட்ச நிதிக்கு அடிகோலப்பட்டது. அப்பொழுதே ஐம்பத்தொரு ஆயிரம் அள்ளி வழங்கினார் 'ஆனா கானா' முதலாளி அக்காலத்தில் அத்தனை பெரும்தொகை வழங்கியதை இன்றைக்கு நினைத்தால் யாருக்கும் புல்லரிக்கும். (இப்போது பல லட்சம் மதிப்பாகலாம்)

இதனை எழுதிக் கொண்டிருக்கும் உங்கள் எழுத்தாளரின் 11 வது வயதில் அந்த வள்ளல் பெருந்தகையின் அறிமுகம் எனக்குக் காயல் பட்டணத்திலேயே கிடைத்தது என்றால் அதிசயமே.

என் காலஞ் சென்ற தந்தையார் தன்னிறப்பை முன்கூட்டியே உணர்ந்தோ என்னவோ., 'காசுக்கடை' முதலாளியைக் கொண்டு காசு சம்பாதித்துக் கொள்' என்று மறைந்தார்கள்.

சில ஆண்டுகளின் பின்னர் அவர் நிறுவனத்தில் நானும் ஒரு ஊழியனாகினேன். ஆனால் என் கரத்திலோ எழுதுகோல். என்னை ஒரு வார்த்தகனாக்குவதில் அவர் தோற்றுப் போய் என் எழுத்தார்வத்தை ஊக்கினார். 'தினகர'னுடன் அப்போது தான் நிறைந்த தொடர்பேற்பட்டது. வானொலித் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் வசதிகள் செய்து கொடுத்தார். ஒரு வர்த்தக ஊழியனுக்குக் கனவிலும் நடக்காத சங்கதிகள் எந்தச் சமயத்திலாவது 'என்னைப் பற்றியும் இரண்டு வார்த்தைகள் எழுது' என்று கட்டளையிட்டிருக்க மாட்டார். அவர் வாரி வழங்கிய

ஐம்பத்தொரு ஆயிரம் கூட 46 ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் அன்பர் ஷாமு சிஹாப்தீன் மூலம் கிடைத்த ஒரு சிறப்பு மலரிலேயே காணக் கூடியதாகவே இருந்தது.

அத்தனை தன்னடக்கமான வள்ளல் 'ஆனா கானா' முதலாளி தண்ணீருக்கு காட்டிய முன்னுதாரணத்தையும் அவருக்குப் பின் நின்று உதவிக்கரம் நீட்டியவர்களின் தாயாளத்தையும் இன்றைய நிலையில் யாராவது கர்நாடக மக்களுக்கு உணர்த்தினால் அங்கிருந்தும் பல 'ஆனாக் கானாக்'கள் தலை உயர்த்திக் காவிரியை தமிழக மக்களுக்கு வழிமறிக்க மாட்டார்கள் என எதிர்பார்க்கிறேன்.

- ஆகஸ்ட் 11, 1991

அன்புள்ள மானா.

லைட்ரீடிங் பார்த்து வருகிறேன். சுவையான பல சரக்குப் பகுதி. லேஅவுட் கூட நன்றாகவே உள்ளது. காரியம் சாதிப்பதில் அப்பர்கள் கலைந்துவிட்டது ஒருவிதத்தில் தினகரனுக்கு நல்லது-மாற்றம்-கவர்ச்சி-தரம் தெரிகிறது.

45 வருடங்களுக்கு முந்திய தமிழ் (முஸ்லிம்) இலக்கியம்-நல்ல முயற்சி.

லைட்ரீடிங் அபூர்வமான இலக்கியச் செய்திகளையும் இடம் பெறச் செய்வது எம்மைப் போன்ற இலக்கிய வாதிகளுக்கு ஆறுதல் தருகிறது உ+ம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய செய்தி.

**எம்.எச்.எம். ஷம்ஸ்,**
**34, கொட்டே கொடல வீதி,**
**வெலிகாமம்.** (12/06/1990)

உரத்த சிந்தனையை ஊட்டவல்ல நூல்களுக்குள் தலையைப் புதைத்து அவதிப்படும் வேளைகளில் தற்காலிகமாக அதனின்றும் மீண்டு ஆறுதலும் உற்சாகமும் பெற தங்கள் 'லைட்ரீடிங்' பக்கம் கண்கள் சாயும். உணர்வுகள் ஒன்றும். உற்சாகம் பொங்கும்.

**எஸ்.எல்.எம். ஹனிபா.**
**ஓட்டமாவடி.**




இந்திய தொழிலாளர் தலைவரி
மந்திரி சபையாரின் தீர்மானம்
புதிய மசோதா

# இந்திய தொழிலாளருக்கு தலைவரி

1934 மார்ச் 3ந் தேதி திங்கட்கிழமை 'தினகரன்' இதழில் வந்த ஒரு செய்தியைப் படம் பிடித்துத் தந்துள்ளேன்.

55 ஆண்டுகளுக்கு முன் அது என்ன அப்படியொரு தலைவரி என்பதை என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை. (வயசுக் கோளாறு)

முழுச் செய்தியும் இப்படி அமைந்துள்ளது.

''இந்நாட்டிலுள்ள தோட்டங்களில் வேலை செய்யும் பொருட்டு இந்தியாவிலிருந்து வருகிற கூலி ஜனங்கள் மீது வரி விதிக்க மந்திரி சபை தீர்மானித்திருக்கிறதென்று தெரிகிறது. இத்தலைவரி சம்பந்தமாக மசோதா ஒன்று அரசாங்க சபையில் விரைவில் விவாதிக்கப்படுமென்று தெரிகிறது.

'இப்புதிய வரி வசூலிப்பதில் பல இடையூறுகள் குறுக்கிடுமென்று மந்திரிகள் ஒப்புக் கொண்டார்கள். ஆயினும் தற்கால நிலைமையை உத்தேசித்து இத்தலைவரியை விதிப்பது நீதியாகுமென்று அவர்கள் ஏகோபித்த அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இவ்வாலோசனை முன்னால் ஒருமுறை கூறப்பட்ட பொழுது கூடாத நிலைமை ஏற்பட்டிருந்த படியால் அச்சமயம் அது கைவிடப்பட்டதென்று அறிவிக்கப்பட்டது.'

இந்த அதிசயச் செய்தி பற்றி பழைய பரம்பரையினர் குறிப்பாக மலையகத்தில் வாழும் முதிய பெரு மக்கள் மேலும் விவரங்களைத் தந்தால் அது இப்பொழுதுள்ள பரம்பரைக்கு மிகவும் பயனுள்ள தகவலாக அமையும்



# மூதறிஞர் கி.ஆ.பெ. பார்வையில்!

## நபிகளின் சமத்துவமும் சகோரத்துவமும்

சமத்துவம் இந்துக்கள் கோவில்களிலே கிடையாது. கிறிஸ்துவர்களின் ஆலயங்களில் கிடையாது. தன்னுடைய வேலைக்காரன் தொழுகைக்கு முன்னே சென்றுவிட்டால், எஜமானன் பின்னே சென்றால். அவனுக்கும் பின்னே இருந்துதான் தொழ வேண்டும். கிறிஸ்துவர்கள் கோயிலில் அமைச்சர்களுக்கு இடம், அரசனுக்கு இடம், அரச குடும்பத்திற்கு இடம், உத்தியோகத்துக் கலெக்டர்களுக்கு ஓரிடம், மக்களுக்கு இடம் என்றெல்லாம் நாற்காலிகள் ஒழுங்குபடுத்தி இருப்பார்கள். இந்துக் கோயில்களிலே அர்ச்சகர் போகிற இடம் வேறு, ஜமீந்தார் போகிற இடம் வேறு, பணக்காரர்கள் போகிற இடம் வேறு, ஏழைகள் இடம் வேறு, கடைசியாக தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடிக் கம்பத்துக்கருகில் இடம் என ஒதுக்கப் பெற்றிருக்கும்.

பள்ளிவாசல்களில் அது இல்லை. ஆப்கன் அரசர் அமீர், ஐதராபாத் நிஜாம் துருக்கித் தலைவர் இனூனூ, ஈரான் மன்னர், அரேபிய அரசர் யாராக இருந்தால் தான் என்ன? வேலைக்காரன் முன் சென்று முன் வரிசையில் இருந்தால், இந்த மன்னவர்கள் அவனுக்கு அடுத்த வரிசையில் இருந்துதான் ஆண்டவனைத் தொழவேண்டும். இன்னும் ஒரு படி தாண்டிச் சொல்கிறேன். தன் வேலைக்காரனுடைய காலடியில்தான் மன்னாதி மன்னர்கள் தங்கள் முடியை வைத்து ஆண்டவனைத் தொழ வேண்டும். எல்லாச் சமயங்களிலும் சமத்துவம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்லாத்தில் மட்டுந்தான் சமத்துவம் செய்யப்பட்டிருக்கிறது.

சகோதரத்துவம்- அது மக்கள் அனைவரும் உடன் பிறந்தோர் என்பது, கறுப்பு அடிமை பிலால், வீரத் தலைவர் சைய்யது, புணக்கார அபூபக்கர், பலசாலி உமர், வாலிப வீரர் அலி ஆகிய இவ் ஐவரின் வரலாறு படித்திருப்பீர்கள். ஒன்றுக்கொன்று மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை. இவர்கள் அத்தனை பேரையும் ஒரு மேடையில், ஒரு வரிசையில் நிறுத்தித் தோளோடு தோள் சேர்த்துச் சகோதரனாக்கி வைத்தது இஸ்லாம். இது நாயகம் அவர்களுடைய போதனை. இதை அவர்களைத் தவிர வேறு எவராலும் செய்ய முடியாது. வேறு எந்தச் சமயத்திலும் காண முடியாது. இது ஒன்றே போதும். சகோதரத்துவத்தைப் பற்றிக் கூறுவதற்கு!



### திருமணத்தால் ஆண்களுக்கு ஆரோக்கியம் அதிகம்

ஒரு கேள்வி என்னையுமறியாமலேயே ஏற்பட்டது. திருமணம் செய்து கொள்வதால் அதிமாக உடல் ஆரோக்கியம் பெறுவது ஆண்களா? பெணகளா?

அமெரிக்க, மிச்சிகன் சமூகவியல் நிபுணர் ஜேம்ஸ் ''ஆண்களுக்குத் தான்'' என்று அடித்துச் சொல்கிறார்.

அதே போல், கணவன் மனைவியை விட்டுப் பிரிந்தாலும் மனைவி கணவனை விட்டாலும் மனரீதியாக அதிகம் பாதிக்கப் படுபவர்கள் ஆண்களே!

### கைரேகை மட்டுமல்ல பல்லும் அப்படியே!

★ கைரேகைகள் ஒருவரை ஒருவர் ஒத்திருக்காது என்பதை அறிந்திருக்கிறோம். இப்போதைய ஆராய்ச்சியின் படி பல் அமைப்புங் கூட பொருந்தாது, ஒருவருக்கொருவர் வித்தியாசப்படும் என்ற ஆச்சரியமான தகவல் கிடைத்துள்ளது.



# தஜ்ஜாலும் அந்திகிருஸ்துவும் கம்ப்யூட்டர் உருவில்!

*

வெகு வேகமாக அனைத்தையும் ஆக்கிரமித்து வரும் கம்பியூட்டரைக் கொண்டு இயங்கும் பொம்மைகள் வந்துள்ளன. இந்தப் பொம்மையைக் 'கம்பியூட்டர் மனிதன்' என்கிறார்கள் 'ரோபட்' என்றும் பெயர் வைத்திருக்கிறார்கள். 'ரோபோ' (அல்லது 'ரோபா') என்றும் அழைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இப்பொழுது ஓர் ஆங்கிலப் படமே திரையிடப்பட்டுள்ளது. 'பாதி மனிதன் - பாதி இயந்திரம் இந்த ரோபோ' என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட 'கம்பியூட்டர் மனிதன்' சிந்திக்கத் தெரியாதவன். மற்றப்படி எந்த எடுபிடி வேலையையும் செய்வான். இப்பொழுது 'சிந்திக்கிற ரோபட்'களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். அமெரிக்க நிறுவனமொன்று பாதி வெற்றியடைந்து விட்டதென்றும் செய்தி.

இந்தக் கம்பியூட்டர் மனிதனாகிய ரோபட்டைத் தான் 'தஜ்ஜால்' என்றும் 'அந்தி கிருஸ்து' என்றும் ஒரு பிரபலமான முஸ்லிம் நூலாசிரியர் 'ஜுல்பிகார்' தனது நூலொன்றில் எடுத்துக் காட்டுகிறார்.

'தஜ்ஜால்' என்று முஸ்லிம்கள் குறிப்பிடுவதும் அந்தி கிருஸ்து என்று கிறிஸ்தவர்கள் குறிப்பிடுவதும் ஒருவனைத் தான். இவன் தான் இப்பொழுது கம்பியூட்டர் மூலம் அறிமுகமாகியுள்ள 'ரோபட்' மனிதன். இன்னும் சில காலத்தில் உலகம் முழுவதும் கம்பியூட்டர் மையங்களினால் செயல்படத் தொடங்கும் பொழுது இவன் கையில் தான் உலகம் ஒப்படைக்கப்படும். அப்பொழுது இதைப் புரிந்து கொள்ளலாம்' என்று எடுத்துரைக்கிறார்.

அருமையான தகவல். அதே நேரத்தில் சிந்திக்க வேண்டிய செய்தியுங் கூட. ஏனென்றால் மதக் கோட்பாட்டில் விஞ்ஞானம் ஊடுருவுகிறது.



# அல்-குர்ஆனில் 'மேரிமாதா'

புனித விலியத்தில் சொல்லப்பட்டதை விட திருக்குர் ஆனில் தான் மேரி மாதாவைப் (மர்யம் அலைஹிஸ்ஸலாம்) பற்றி அதிகமதிகம் சொல்லப்பட்டிருக்கிறது.

இது என் குறிப்பல்ல, கிறிஸ்துவத் தமிழபிமானியும், குழந்தை உள்ளம் கொண்ட வார்த்தைச் சித்தரும், பிரபல 'தாய்' ஆசிரியருமான வலம்புரிஜான் தகவல்.


அன்னை மரியாளையும் (மர்யம் அலைஹிஸ்ஸலாம்) குழந்தை இயேசுவையும் (ஈஸா அலைஹிஸ்ஸலாம்) முழு யூத இனமுமே தூற்றி இகழ்ந்த பொழுது இஸ்லாம் ஒன்றே அவர்களைத் தூற்றாதிருந்தது. அந்த மார்க்கம் ஒரு படி மேலே போய் அவர்களது பெயர்களைச் சொல்லும் போதெல்லாம் 'அலைஹிஸ்ஸலாம்' என்று கௌரவித்தது. (அப்படியென்றால் அன்னாருக்கு இறைவனது அருள் உண்டாவதாக என்பதாகும்) இந்த நடைமுறை இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதேபோல உலக வரலாற்றைத் தனக்கு முன்னும் பின்னும் சுழலச் செய்யும் பெருமை இயேசு (ஈஸா அலைஹிஸ்ஸலாம்) உடையதாகும்.

அதெப்படி? 'கி.பி' (கிறிஸ்துவுக்குப் பின்) 'கி.மு' (கிறிஸ்துவுக்குப் முன்) என்றுதான் உலக வரலாறு தன் நிகழ் காலத்தையும் குறித்துக் கொள்கிறது.

'அவரது பிறப்பில் கேவலம் சேர்க்கலாம். ஆனால் அவர் தம்முடைய பிறப்புக்களில் உள்ள கேவலங்களை நீக்கினார். பிறப்பு என்பது பிறருக்கு அன்பு செய்வதே எனக் கூறிப் பிறப்புக்குப் பயன் உரைத்தார்.'

என இலக்கியத் தென்றல் அப்துல்லாஹ் அடியார் 'முள்முடி மன்னர்' என்ற நூலில் சொல்லி நம்மையெல்லாம் புல்லரிக்க வைக்கிறார்.





# கல்கண்டு தமிழ்வாணனின் பிள்ளைக்கனி

'கல்கண்டு' சுவைக்கததந்த அதன் முன்னாள் ஆசிரியர் காலஞ்சென்ற தமிழ்வாணனின் பிள்ளைக்கனியமுதுகளில் ஒருவர் கடந்த வாரத்தில் எங்கள் மத்தியில்.

அந்நிகழ்வு கனவு போல். கிள்ளிப் பார்த்துக் கொண்டால் நனவே!

திரு. லேனா தமிழ்வாணன் மின்னாமல் முழங்காமல் சென்னை மழையோடு வந்தார். அப்பொழுது இங்கேயும் பெய்த மழையிலும் நனைந்தார். ஆளுக்கொரு துவாய்களை நீட்டினோம்.

'துவட்ட மாட்டேன். அன்பு மழை இது. நனைவேன்' என்றார்.

அப்படியே இருநாட்களிலும் (7-8) செய்தார்.

சுமார் 50 பேருடன் ஒருவராக எளிமையாய் இனிமையாய் கலந்து கொண்டபொழுது, 'கருத்தரங்கின் கதாநாயகன்' என ஒருமனதாகச் சூட்டப்பட்டார்.

3ம்நாள் அதிகாலையில் அதிசயமொன்று புரிந்தார்.

அவர் அப்பாவிடம் எழுதக்கற்ற என்னையும் தேடி என் குருவிக் கூட்டிற்குள் ஓடிவந்து ஓர் அரைமணி நேரம் ஒண்டிக் கொண்டார்.

அன்று ஒரு குசேலரிடம் அவர் துணைவியார் சுசீலை அவல் மட்டுமே கொடுத்துவிட்டார். என் 'நிழ'லோ அதைக் கஞ்சியாகவே காய்ச்சிக் கொடுக்க, விரும்பிச் சுவைத்தார். அப்புறம் அவர் செல்லும் விமான ஓசை கேட்டு வானத்தை ஏறிட்டு ஏங்கி நின்றோம்.

திருமிகு தேவராஜர் அமைச்சும், அரசு தகவல் திணைக்களமும் தமிழ்ப் பத்திரிகையாளர் பயிற்சிக்கு மிகமிகப் பொருத்தமான ஓர் இளைய தலைமுறை ஆசிரியரை அழைத்து பெரும் பாராட்டுதல்கைளப் பெற்றுவிட்டன.

ஆனாலும், உலகத்தில் பாதிக்கு மேல் சுற்றிவிட்ட 'லேனா'வுக்கு இலங்கையில் இருக்க இரண்டே நாட்கள்தான் முடிந்தது. அன்னையரது உடல் நிலையைக் காரணம் காட்டினார்.

இருந்தாலும் இன்னொரு சந்தர்ப்பம் லேனா தந்தாக வேண்டும். அப்பொழுதுதான் இங்குள்ள பல நூறு அன்பர்களும் அபிமானிகளும் சமாதானம் பெறுவர். நிறைவேற்றுவார் என நம்புகின்றேன்.

(ஓர் அடிக்குறிப்பு: 'லேனா' எங்களிடம் தெரிவிக்கத் தவறிப்போன தகவலொன்று என்னிடம் பத்திரமாக. இதோ அது:

✱ 'குமுதம்' ஆசிரியர் திரு. எஸ்.ஏ.பி. அண்ணாமலை சென்னை கீழ்ப்பாக்கத்தில் ஒரு பங்காளவை வாங்கி பெரும் நூலகமாக மாற்றியுள்ளார். தன்னுடைய தனிப்பட்ட புத்தக சேகரிப்பு மற்றும் விமர்சனத்துக்காக வரும் புத்தகங்களையெல்லாம் அங்கே பொக்கிசமாக்கியுள்ளார். ஏறக்குறைய 30 ஆயிரம் புத்தகங்கள் அங்குள்ளன. மாதமொருமுறை வெவ்வேறு துறையைச் சேர்ந்தவர்களின் கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்தை நடத்தும் செயலாளராக லேனா தமிழ்வாணன் கடமையாற்றி வருகிறார்.

## பாலியல் அறிவு வேண்டுமா? வேண்டாமா?

பால்யர்கள் கெட்டு குட்டிச்சுவராகிறார்கள் என்ற பொதுவான கருத்து இப்பொழுது வலுவடைந்து வருகிறது.

எப்படி வலுவடைந்தாலும் ஒளிவு மறைவிலிருந்து விடுபட்டு அறிவு விசாலப்பட நம்மவர்களுக்கு இன்னும் பல காலம் பிடிக்கும். வெறும் சாதாரண வார்த்தைகளில் சொன்னால் நமக்கு இந்த அறிவை இலேசில் ஜீரணிக்க இயலாது. ஆனால் லத்தீன் அமெரிக்கன் கரிபிய நாடுகளின் கல்வித்திட்டத்தில் பாலியல் கல்வி எட்டிப் பார்க்கிறது. ஆபிரிக்கப் பாடசாலைகளிலும் குடும்ப வாழ்க்கைக் கல்வி என்ற பெயரில் பாலியல் கல்வி நுழைந்துள்ளது.

பாலியலின் நன்மை தீமைகளைத் தெரிந்து கெட்டழிபவர்கள் அதிகமா அல்லது அறியாமலேயே பிஞ்சில் பழுத்தவர்கள் அதிகமா என்று அமெரிக்காவில் ஓர் ஆய்வு நடாத்தினார்கள். அதைத் தெரியாமல் 'பிஞ்சில் பழுத்தவர்கள்'தான் அதிகம்.






## தொலைபேசியில் அழைக்கச் சொல்கிறார்கள்

அனைத்து நாகரிகங்களுக்கும் பெயர்போன லண்டன் நகரிலிருந்து வெளியாகும் 'டெய்லி மிரர்' தின இதழின் சமீபத்திய பதிப்பொன்றைத் காணும் சந்தர்ப்பம் கிடைத்த பொழுது மேலே காணப்படும் 'தொலைபேசி அழைப்பு' விளம்பரங்கள் மூன்று நான்கு என்னென்னவோ கற்பனைகளைத் தந்தன.

தினமும் 3,992,624 பிரதிகள் விற்பதாக முன்பக்கத்திலேயே தகவல் தந்திருக்கும் ஒரு தேசிய தினசரியில் வந்துள்ள இவை, இலட்சக்கணக்கான வாசகர்களுக்கு என்ன அழைப்பைத்தான விடுக்கின்றன? அவர்களுக்குப் புரியும். நமக்குப் புதிராக இருக்கிறது. எதற்கும் இரண்டொன்றின் மொழி பெயர்ப்பை வழங்குகின்றேன். புரிகிறதா பாருங்கள்.

(1) ''கணவன் வெளிநாட்டில், வீட்டில் இருக்கிறேன். உங்கள் அழைப்புக்காகக் காத்திருக்கின்றேன். 0836, 402, 302''

(2) துகிலுரிதல். எங்கள் தொலைபேசி தொடர்ந்து ''ரிங் செய்த வண்ணம் 0836, 402, 302''

(3) ''கறுப்பு கால்மேஜோடு. உள்ளத்தை அள்ளும் ஆடை உங்களைத் திருப்தி செய்யத் தயார். 0836, 402, 302

இந்த வரிகள் அனைத்தும் 'கிளுகிளு'தான். ஆனால் அனையனைத்தும் பகிரங்கமாக விபசாரத்திற்கு விடுக்கப்படும் அழைப்பு என்று ஏமாந்துவிட முடியாது. இலண்டன் இரவு வாழ்க்கையில் (நடனக் கிளப்கள்) ஓர் அம்சமாக, அதற்கான 'ரிசர்வேசன்' விளம்பரமாக இருக்கலாம். அப்பாடா, இப்பொழுது மூச்சு வருகிறதா?

## விரலுக்குத் தோழன் மூளை

நாம் மிக லாகவமாகச் செயல்படுவது நமது விரல்களைக் கொண்டுதான். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து நமது மூளையின் (சாம்பல் நிறப் பகுதியின்) பெரும் பங்கு, விரல்களைக் கண்காணிப்பதிலேயே ஈடுபடுகின்றது. மார்பு, மற்றும் வயிற்றுப் பகுதியின் மீது செலுத்தப்படும் கட்டுப்பாட்டை விட இது அதிகம்.

## மருதோன்றி மணம் தூக்கத்திற்கு

தூக்கம் வராது தவிப்பவர்களுக்கு தூக்க வில்லைகள் அவசியமில்லை என அடித்துப் பேசுகிறது நாட்டு வைத்தியம். மருதாணிப் (மருதோன்றி) பூக்களைத் தலையணைக்கு உட்புறம் பரப்பி வைத்துக் கொண்டு படுத்துப் பாருங்கள். அது தரும் நறுமணத்தைப் மூக்கு சுவாசிக்க சுவாசிக்க சுகமான நித்திரை நிச்சயமாம்.

## பொறாமை தரும் பொல்லாமை

✱ பொறாமை தோல்வியின் அடையாளச் சின்னம்.

✱ பொறாமை அழிவின் ஆரம்பம்.

✱ பொறாமை மனித உளத்தின் மிகப் பெரிய பலவீனம்.

✱ அடுத்தவர் வாழ்வைக் கண்டு நாம் பொறாமைப் பட ஆரம்பித்தால் நம் வாழ்க்கை வளராது. நம்மிடமுள்ள ஆக்க சக்திகள் அறிவாற்றல்கள் அழிந்து போய்விடும்.

## எண்ணெய்க் குளிப்பில் அர்த்தமுண்டு!

உடல் சுகத்திற்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில் இரு விதமான கருத்துக்கள் இருந்து வருகின்றன. ஒன்று தோலின் துவாரங்கள் வழியே எண்ணெய் உட்சென்று தோலின் உட்பகுதிக்கும் மற்றும் உள்ளுறுப்புகட்கும் நலம் விளைவிக்கிறது என்பது.

மற்றொன்று - அதெல்லாம் மூட நம்பிக்கை. தோலின் வேலை வியர்வையை வெளியேற்றுவது மட்டும்தான். அது எதையும் உள்வாங்கிக் கொள்வதில்லை என்பது.

அவர்களின் சமீபத்திய கண்டுபிடிப்பின் படி தோலின் துவாரங்கள் மூலம் உள்ளேயும் பொருள்கள் போகின்றன. அவை ஒரு வழிப்பாதையல்ல.

அப்படியானால் நமது முன்னோர்களின் எண்ணெய்க் குளிப்பில் அர்த்தங்கள் இல்லாமலில்லை என்பது தெளிவாகின்றது.





## தாடி வைத்தால் தண்டம்!

தாடி ஒரு கடமை என்கிறது இஸ்லாம் பஞ்சாப் சீக்கியர்களுக்கும் அப்படியே. மனிதனுக்கு ஓர் அந்தஸ்தைக் காட்டவும் தாடி ஒரு ன்னமாக அமைந்தது. இதிலே கை வைத்தான் ரஷ்யாவை ஆண்ட கிரேட் பீட்டர் என்ற மன்னன். அவன் ஒரு சட்டத்தை கொண்டு வந்து ரஷ்யர்கள் தாடி வைத்தால் தண்டனை என்றான். ஐரோப்பியர்களை போல் 'கிளீன் ஷேவ்' செய்யுங்கள் என்று கட்டளை பிறப்பித்தான். ஷேவிங் நடந்த பாடாயில்லை. தாடியில் உயிரையே வைத்திருந்தார்கள். கடைசியில் ஒவ்வொருவரையும் பிடித்து கடுமையான தண்டன் விதித்தான். தாடி போன இடம் தெரியவில்லை. இது நிகழ்ந்தது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு.

## கழுதையும் மழையும்

தமிழ் நாட்டில் ஒரு பகுதியில் கடுமையான வறட்சி. கிராமத்தவர் ஒன்று கூடி ஒரு பழைய சடங்கைச் செய்ய முடிவெடுத்தார்கள். உடனே ஒருவர் ஓடிப்போய் பேப்பர்களைத் தின்று கொண்டிருந்த இரண்டு கழுதைகளைக் கொண்டு வந்து நிறுத்தினர். எல்லாருமாகச் சேர்ந்து எல்லாக் கல்யாணச் சடங்குகளையும் செய்து கழுதைகளுக்குத் தாலி கட்டி வைத்தார்கள். கொஞ்ச நேரத்தில் மழை கொட்டத் தொடங்கியது. கழுதைத் தம்பதியினரும், கிராமத்தவரும் நனைந்து தொப்பமானார்கள். இது உண்மைக் கதை.

# ஆணாகி வரும் பெண்கள்

இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்களுக்கே உரிய கெட்ட பழக்கங்களை உலகெங்கிலும் உள்ள பெண்கள் கற்று வருகின்றனர். பல பெண்கள் முரட்டுத்தனமாக பேசுகின்றனர். மது அருந்துகின்றனர். புகை பிடிக்கின்றனர். சிலர் வன்முறை சார்ந்த குற்றங்களை புரிகின்றனர்.

ஆண்களுக்குரிய இயல்புகளைப் பெண்கள் பெற்று வருவதால் உளவியல், சமூக அம்சங்களில் பல பிரச்சினைகள் எழுகின்றன.

பல பெண்களுக்குப் பெண்மையின் நளினத்தை விட ஆண்களைப் போல் நடந்து கொள்வதே அதிகக் கவர்ச்சியாக இருக்கிறது.

ஆண்களைப் போல் தோற்றமளிப்பது பல பெண்களுக்கு சகஜமாகி விட்டது.

சமூக உளவியலாளர்களிடையே நிலவும் கருத்தின் படி, எதிர்காலத்தில் ஆண் - பெண் இருபாலரின் தோற்றங்கள் நடத்தை உடைப்பாங்கு ஆகியவை சிறுகச் சிறுக் ஒரே மாதிரியாகிவிடும் உடற் கூறுகளில்தான் இருபாலாரும் வேறுபட்டிருப்பர். (2000 ஆண்டே வருக, வருக!)

இதற்கு ஆதாரமாக பெண்களிடையே ஆண்களுக்குரிய இயல்புகள் இப்போது ஆழமாக வேரோடியுள்ளன.

சமமான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கும் இன்றைய நிலைமையில், இப்போதைய பெண்கள் அனைவருமே வெவ்வேறு வகைப்பட்டவர்களாகவே உள்ளனர். சிலர் வியத்தகு முன்னேற்றம் காண்கின்றனர்.

கவர்ச்சியானவர்களாகவும், பெண்மைக் குணமிக்கவர்களாகவும் உள்ளனர். மற்றவர்களோ உழைக்கும் இடத்திலும் தோல்வியைத் தழுவுகின்றனர். மோசமான மனைவியராகவும் அன்னையராகவும் இருக்கின்றனர்.



# தமிழில் தவறான பிரயோகங்கள்

'ஆல் சிலோன்' 'ஆல் இந்தியா' என்பவைகளுக்கு 'அனைத்திலங்கை', 'அனைத்திந்தியா' என தமிழ்ப் பயன்படுத்தீப்படுகின்றது. இது தூய தமிழ் போல தோற்றமளிக்கிறது. 'இது சரியன்று' என்று வாதிடுகிறார் 'குங்குமம்' சஞ்சிகையில் மா. நன்னன் என்பவர். 'ஆல்' என்ற ஆங்கில வார்த்தையின் பொருளைச் செம்மையாகத் தமிழுக்குக் கொண்டு வரத் தவறியதால் ஏற்பட்டுள்ள பெரும் 'பிழை' என்கிறார் அவர். ஆங்கிலத்தில் 'ஆல்' என்பதற்கு 'எல்லாம்', 'சகலதும்', 'முழுவதும்' என்றெல்லாம் பொருள்படுகின்றது. 'ஆல் தி பேர்ட்ஸ்' என்ற வாக்கியத்தை எடுத்துக் கொண்டால் எல்லாப் பறவைகளும்' என்று பொருள் சொல்லியாக வேண்டும். ஏனென்றால் ஒன்றுக்கு மேற்பட்டதனால் அப்படி. அதே போல ஒரேயொரு இந்தியாவிற்கும், ஒரேயொரு இலங்கைக்கும் தமிழில் எப்படி 'அனைத்து' சரியாகும். இலங்கைகள் பலவும், இந்தியாக்கள் பலவும் இருந்தால் தான் 'அனைத்து போட முடியும்?' சிந்தித்துப் பாருங்கள் என்கிறார் திரு. நன்னன். சிந்தித்துப் பார்த்தால் 'அனைத்திலங்கையும்', 'அனைத்திந்தியாவும்' தவறான பிரயோகம் என முடிவு செய்ய வேண்டியுள்ளது. மேலும் அன்றாடம் நாம் பாவிக்கும் தமிழில் பிழைகள் விடுகின்றோம். இளைய தலைமுறையினர் இலேசில் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இருந்தாலும் ஒரு சிறு பட்டியல்: பயிர்ச்சி - பயிற்சி. களவாணி - களவாளி கருப்பு - கறுப்பு. குண்டுமனி - குன்றிமணி. வென்னீர் - வெந்நீர். கழிமண் - களிமண். நம்பகரமான - நம்பத்தக்கது. அகோரம் - கோரம். ஒட்டுரிமை - வாக்குரிமை. செல்வந்தர் - செல்வவந்தர் முதல் வரிசையில் இருப்பது பிழை இரண்டாம் வரிசையே சரி. இதோ ஒரு சொல்லாராய்ச்சி 'தன்' என்பதனையும் 'திறம்' என்பதையும் சேர்த்து 'தந்திரம்' ஆயிற்று. 'மன்' என்பதனையும் 'திறம்' என்பதனையும் சேர்த்து 'மந்திரம்' ஆயிற்று

# டிமாக்கிரஸியுடன் மோதும் குரானாகிரஸி!

'லைட்ரீடிங்' வாசகர்கள் நன்றாகவே கொடுத்து வைத்தார்கள். சில நேரங்களில் சில அபூர்வமான சஞ்சிகைகள் நம் கைக்குக் கிடைத்து விடுகின்றன. அப்படி ஒன்றில் 'குரானா கிரஸி' என்றொரு வார்த்தை தென்பட்டது ('குர் ஆனா கிரஸி' என்றாலும் பிழையில்லை.)

'ஜனநாயகம்' என்பதற்கான ஆங்கிலவார்த்தை 'டிமாக்கிரஸி'யைக் கேட்டுகாது புளித்த நமக்கு இந்தக் குரானா கிரஸி இனிப்பாய் இனித்தது. புதிய வார்த்தையாக ஆங்கில அகராதியில் இடம் பிடிக்க வேண்டிய தகுதி மிகச் சிறப்பாக இதற்கு இருப்பது சட்டெனப் புலப்பட்டது. இந்த வார்த்தை உணர்த்துவதும் ஒரு ஜனநாயகத்தைத்தான். அது இஸ்லாமிய ஜனநாயகம். இறை மறையைக் கொண்டு இறைத்தூதர் நபிகள் நாயகம். ''1400 ஆண்டுகால இஸ்லாமிய அரசியல் சட்ட முறைக்கு யாரும் ஒரு பெயர் சூட்டியதாக வரலாறு இல்லை. அதற்குரிய நியாயமான பெயர் 'குரானா கிரஸி'யாக இருக்க முடியும்'' என்று 'தாருல் குர்ஆன்' எழுதுகிறது. ஆமாம், வாசகர் வட்டத்தில் அவ்வளவு புகழ் பெற்றிராத ஓர் இந்திய முஸ்லிம் சஞ்சிகையிலேயே இவ்வார்த்தையைக் காண்டேன். மெய்சிலிர்த்தேன். (இதை என்கரம் எட்டச் செய்த பெருமை வாழைச்சேனை இலக்கியவாதி வை. அகமதுவுக்குச் சென்றடைதல் வேண்டும்.)

சஞ்சிகை மேலும் ஒரு கருத்து முத்தைச் சிந்துகையில் 'டிமாக்கிரஸியாகிய ஜனநாயகத்தை அமுல்படுத்துவதில் மோசடிகள், ஊழல்கள் இருக்கலாம். ஆனால் குரானா கிரஸிக்கும் டிமாக்கிரஸிக்கும் முரண்பாடுகள் தத்துவரீதியாக இல்லை நபிகள் நாயகம் (ஸல் - அம்) வாழ்ந்த வழியே ஜனநாயகம் வந்த வழி'' என்கிறது. இவ்வளவுடன் இந்தத் தகவல் இங்கே போதும். இனித் தொடர விரும்புவோர் தொடர வேண்டிய இடங்களில் தொட்டுத் தாலாட்டுப் பாடுவார்களாக.





# ★ இது சினிமா விளம்பரம் அல்ல! ★

உண்மை, உண்மை! இது சினிமா விளம்பரமல்ல. பாரதத்து வங்கத்தில் -கல்கத்தாப் பகுதிகளில் செழித்து வளர்ந்த வண்ணம் உள்ள ''ஜாத்ரா'' நாடக விளம்பரப் பத்திரிகை விளம்பரங்கள் இவை! அங்கே சினிமா இரண்டாம் இடத்திலிருக்கிறது.

வங்க நாடக இயக்கத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல்வகை 'ஜாத்ரா' எனப்படுகின்ற கிராமியக் கலை நாடகங்கள். 'தியேட்டர்ஸ்' எனப்படும் சோதனை நாடகங்கள் இரண்டாம் வகை. 'புரொஷனல்' (தொழில்முறை) எனப்படுபவை மூன்றாவது.

இவற்றில் 'ஜாத்ரா' எனும் முதல் வகைக்குத் தான் ஏக மவுசு. அதில் பங்குபெறும் ஒரு கலைஞர் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிட்டால் ஆறே மாதங்களில் 14 லட்சம் ரூபாய் அளவுக்குச் சம்பாதித்து விடுவார். 'ஜாத்ரா' என்பது கிராமம் கிராமமாகச் சென்று நாடகம் போடும் குழுவென அர்த்தம். இவர்கள் நாடகங்களில் அரங்க அமைப்பு (செட்டிங்ஸ்) என்கிற சங்கதியெல்லாம் கிடையாது. ஒரு சிறுமேடை. அதற்குப் பின்னால் ஒரு திரை. அவ்வளவுதான். ஆனால் கதையம்சமும் வசனங்களும் மிகமிக முக்கியமானவை. இப்படிப்பட்ட நாடகங்களைப் பார்ப்பதற்கு பத்தாயிரத்திலிருந்து பன்னிரண்டாயிரம் மக்கள் வரை மக்கள் குவிவார்களாம். சுருக்க[illegible] வங்காளத்தில சினிமா நட்சத்திரங்களை விடப் பன்மடங்கு செல்வாக்குள்ளவர்கள் நாடகக் கலைஞர்கள். ஊம், வாழட்டும் அவர்கள். பல்லாண்டு

## குழந்தையை மூன்றாண்டுகள் தள்ளி வையுங்கள்

தமிழ்-முஸ்லிம் சமுதாயத்தினரிடையே ஒரு பழக்கம், கன்னிப் பெண்கள் கல்யாணம் ஆகாதிருந்தால் எப்போது கல்யாணம் என்பார்கள். ஒரு மாதிரி முடிந்து விட்டாலோ எப்போது குழந்தை என்று நச்சரிப்பார்கள்.

இதிலே, 'எப்போது குழந்தை' என்பதைக் கொஞ்சம் சிந்தித்து முடிவெடுத்தால் என்ன? இப்போதைய உலகத்திற்கு- இன்றைய காலப்போகிற்கு இளம் தம்பதிகளின் உடல் நலத்திற்கும் சிறந்த முறை எது தெரியுமா? திருமணமாகி மூன்றாண்டுகள் சென்ற பிறகே முதல் குழந்தை பெற்றுக் கொள்வதே!

இப்படி மூன்றாண்டுகள் சென்று குழந்தை பெறுவதால் மூன்றுவித நன்மைகள் ஏற்படும்.

✱ முதல் நன்மை. புதுமணத் தம்பதிகள் கணவனும் மனைவியுமே குழந்தைகள் போல் கொஞ்சி 'விளையாடலாம்'

கவலைகள் கஷ்டங்கள் மிக மிகக் குறைவு. எந்த இடத்திலும் **'ஒண்டுக் குடித்தனம்'** நடத்தி விடலாம்.

✱ இரண்டாவது நன்மை, உடல் வலிமை குறையாதபடி பார்த்துக் கொள்ளலாம். கணவன் மனைவி உறவு வலிமை பெற உதவலாம்.

✱ மூன்றாவது நன்மை தான் மிக முக்கியமானது வருவாய்க்கு தக்கபடி வாழ நினைப்பவர்களுக்கு மூன்றாண்டுகளின் பின் பெறப் போகிற குழந்தையின் செலவிற்குச் சேர்த்தும் வைக்கலாம்.

ஆனால் இதைக் கடைப்பிடிக்க அடுத்த வீட்டு அம்மணி விடுவாளா அவளுக்கு ஏற்கனவே ஆறேழு பிள்ளைகள். மற்றவளும் தன்னைப் போல கஷ்டப் பட வேண்டும் என்று நினைப்பவள், அடுத்தவள் மூன்றாண்டு பிள்ளை பெறாதிருந்தால் பொறுக்குமா? உடனே மலடிப் பட்டம் கட்டி விடுவாள்; அது மட்டுமல்ல கொழும்புப் பகுதிகளில் சில இடங்களில் ஆண் பெறாமல் பெண்களையே பெற்றுக் கொண்டிருந்தாலும் பொம்பிளை மலடிதான்!

இந்தச் சமுகம் எதற்கு உருப்படும்?







## தக்காளி ஒரு கால்த்தில் நச்சுக் கனி

213 ஆண்டுகளுக்கு முன் தக்காளி ஒரு நச்சுக் கனியாவே கருதப்பட்டது.

1776ல் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த வாஷிங்டனை நஞ்சூட்டிக் கொல்ல அவரது உணவில் தக்காளியை வறுத்துச் சேர்த்த எதிரிகள் ஏமாந்தனர். இச்சதிக்குப் பின்னரும் 23 ஆண்டுகள் நலமுடன் வாழ்ந்தார்.

1774ல் டென்மார்க் நாட்டில் பிரசுரமான தோட்டக்கலை நூலொன்று தக்காளியை நச்சுக் கனியாகவே வர்ணித்தது.

அதனை நாய் இறைச்சி என்றும் பாவக் கனி என்றும் முன்னோர்கள் அழைத்தனர்.

நானூறு ஆண்டுகளுக்கு முன் அது மெக்ஸிகோவிலிருந்து கொணரப்பட்ட பொழுது ஐரோப்பியர் ஓர் அழகுப் பொருளாக ஜன்னல் முகப்புகளில் அழகுத் தொட்டிகளில் நட்டு வைத்திருந்தனர்.

தற்போது குளிர்ச்சி தரும் மரக்கறி வகைகளிலொன்றாகப் பயன்படுகிறது. ஆனால், தோல் வியாதி உள்ளவர்கள் முதலில் தூர தள்ள வேண்டியது தக்காளியைத் தான்.

## மலர்களுக்கு நிறங்கள் வழங்குவது யார்?

வண்ண வண்ண மலர்கள் பலவற்றைப் பார்த்துப் பேரானந்தம் கொள்கின்றோமே, அந்த மலர்களுக்கு விதவிதமான நிறங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன. சிந்தித்தீர்களா?

அனைத்துமே சூரியபகவானின் கருணைதான். மலர்கள் சூரியனிடத்திலிருந்தே நிறங்களைப் பிரதிபலிக்கின்றன. என்றாலும் பூக்கள் விருப்பம் இல்லாமல் வெளியேற்றும் நிறமேதான் அவற்றின் நிறமேதான் அவற்றின் வண்ணமாக வாய்க்கிறது. உதாரணம் செவ்வந்திப்பூ.

இது மஞ்சள் நிறத்தைத் தவிர மற்ற எல்லா நிறங்களையும் சூரியனிடமிருந்து இழுத்துக் கொள்கிறது. மஞ்சள் நிறத்தை வெளியேற்றுகிறது. ஆனாலும் அந்த நிறம்தான் ஒளிக்கிரணங்களின் பிரதிபலிப்பாக அதற்கு வாய்த்துள்ளது.




பெலி டான்சரை தமிழில் 'தொப்புள் நடனக்காரி' என்பதா? 'வயிறு ஆட்டி டான்சர்' என்பதா? அல்லது 'உடல் குலுக்கு நடனமணி ' என்பதா புரியவில்லை. 'சிலுக்கு நடனம்' என்று விடலாம். பொருத்தம் ஏற்கெனவே அந்தப் பெயரைத் தட்டிக் கொண்டு விட்டார் ஸ்மிதா. எப்படியோ 'பெலி' என்றால் அகராதிப்படி 'வயிறு' என்றுதான் பொருள்.

தொடர்ச்சி பக்கம்: 65







★ இரவில் கெட்ட கனவு காண்பவராக நீங்கள் இருந்தால், வயிறு நிறைய இரவு சாப்பிடாதீர். உறங்க செல்வதற்கு 3 மணி நேரத்திற்கு முன்பு சாப்பிட்டு விடுங்கள். உறங்குவதற்கு முன்பு பால் குடிக்கும் பழக்கம் இருந்தால், அதை நிறுத்துங்கள். பச்சை காய்கறிகள், பழங்கள் இரவு சாப்பாட்டில் சேருங்கள். படுக்கும் முன்பு மூச்சை சரியாக இழுத்து சிலமுறை விடுங்கள். ''நான் இன்று கெட்ட கனவு ஏதும் காணமாட்டேன்'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு, திருப்தியாகப் படுங்கள். கடவுள் நம்பிக்கை இருந்தால், 'இரவில் கடவுளுக்கு நன்றி' என்று சொல்லி படுங்கள்.

★ இரவில் பெண்களில் சிலர் தூங்கும் போது கால் பாதங்களில் குளிர்ச்சி ஏற்படும். அதிகமான அளவு காய்கறிகள், பழங்கள் சாப்பிட்டால், அது வராது. கூடவே தூங்கப் போகும் முன்பு பாதங்களை சுடுநீரில் கழுவுங்கள் அதனால் ரத்தம் ஓட்டம் தடை ஏற்படாது.

★ உடல் எடையைக் கூட்ட பழங்களுடன் 100 அல்லது 150 கிராம் சுத்தமான தவிடு சேர்த்து சாப்பிடுங்கள். பப்பாளிப் பழத்துடன் தவிடு சேர்த்து சாப்பிட்டால் வாய்க்கு ருசியும் ஜீரணமும் கிடைக்கும். மைதா அரிசி, தேன் காய்ந்த முந்திரிபழம், பேரீச்சம் பழம், நேந்திரம் பழம், (எத்தன்) ஆகியவை உடல் எடை அதிகரிக்க நல்லது. இனிப்பு பலகாரங்கள் உடல் எடையை அதிகரிக்க ஒத்துழைத்தாலும் அதில் வைட்டமின் சத்து எதுவும் இல்லை.

★ பேன் தொல்லையைத் தீர்க்க லேசான சுடுநீரில் எலுமிச்சை பழச்சாறு அல்லது தயிரின் மேல் இருக்கும் தெளிந்த நீரை ஊற்றித் தலையை வாரத்தில் இரண்டு முறை கழுவுங்கள்.



### அதி விசேட ரஷ்யச் சிரிப்புகள்.

இள மனைவி: டார்லிங் என் சமையல் பிடிக்கிறதா?

இளங் கணவன்: ஓ.. ரொம்பப் பிடிக்கிறது.

இள மனைவி: அதில் உங்களுக்கு அதிகம் எது விருப்பம் டார்லிங்?

இளங் கணவன்: பட்டரும் பாணும்.

★★★★★★★★★★★★★★★★★

தினகரன் வாரமஞ்சரியில் வாராவாரம் நீங்கள் எழுதித் தயாரித்து வெளியிடும் பக்கமான 'லைட் ரீடிங்'கைத் தவறவிடாது படித்து மகிழும் பல வாசகர்களில் நானும் ஒருவன்.

வானொலி வர்த்தக ஒலிபரப்பு நிகழ்ச்சி பற்றிய குறிப்பைப் படித்ததும் பழைய ஞாபகங்கள் எழுந்தன. ஒரு காலத்தில் (1966-1974) அடியேனும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பகுதி நேர அறிவிப்பாளனாகப் பணிபுரிந்தேன் என்பதும், வர்த்தக ஒலிபரப்பில் எமது குரல் ஒலித்தது என்பதும் தாங்கள் அறிந்ததொன்றுதான். ஆயினும் எமது புதிய பரம்பரையினர் அதனை நம்பமாட்டார்கள் போகட்டும். இப்பொழுது ஆங்கிலச் சேவையில் பகுதி நேர அறிவிப்பாளனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன்.

தங்கள் அபிமானி.<br>
கே.எஸ். சிவகுமாரன்.<br>
முருகன் பிளேஸ்.<br>
கொழும்பு. (19/9/91)

★★★★★★★★★★★★★★★★★★



### இந்தக் கல்லறைவாசகம் இதயத்தில் இருக்குமா?

உலகத்தையே வெற்றி கொண்டு தன் காலடியில் வைத்துக் கொள்ள விரும்பிய மாவீரன் அலெக்சாண்டரின் கல்லறை மீது பொறிக்கப்பட்டுள்ள வாசகம் இது.

★ உலகம் முழுவதும் தமக்குப் போதவில்லை என்று கூறிய இவருக்கு இப்போது இந்தக் கல்லறையே போதுமானதாக இருக்கிறது.

### 103 வயது வரை பென்சன்

1983 ஜுலை 10ல் பிரபலமான 'ஹிந்து' நாளிதழில் இப்படியொரு செய்தி இருந்தது.

''ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி எஸ். ராஜகோபலன் 103 வது வயதில் மறைந்தார். இவர். மதுரையில் மாவட்ட நீதிபதியாக இருந்தபொழுது 1935ல் ஓய்வு பெற்றார்.

இறக்கும் பொழுது 103 என்றால் அவர் 1880ல் பிறந்திருக்க வேண்டும். தனது 20 வயதில் (1900ல்) வேலையில் சேர்ந்து 35 ஆண்டுகள் 1935 வரையில் வேலை பார்த்திருக்கிறார். பின்பு ஓய்வு பெற்றிருக்கிறார். அப்புறம் சுமார் 48 ஆண்டுகள் இறக்கும் வரை யில் பென்ஷன் வாங்கி யிருக்கிறார்.

இதன் படி வேலை பார்த்த ஆண்டுகள் 35. பென்ஷன் வாங்கி வேலை பார்க்காமல் இருந்த ஆண்டுகள் 48 இப்படி பென்ஷன் வாங்கிய வேறு யாராவது எங்காவது இருப்பார்களா?

### பெண்களே இந்த 'மை'கள் வேண்டாம்.

பெறாமை - பொல்லாமை

வெறுமை - தனிமை

முதுமை - கல்லாமை

அறிவில்லாமை - அடக்கமில்லாமை

**ஆகிய எட்டு 'மை'களையும் பெண்கள் தொட்டும் பார்க்கக் கூடாது.**

(யார் சொன்னது என்று தலையைப் பிடித்து கொள்ளாதீர்கள். கருத்து மணியாக இருக்கிறதல்லவா. அது போதும்)

### 'அ' என்றால் அம்மா அல்ல

நம் பிள்ளைகளின் அரிச்சுவடி 'அ' எழுத்தாகிய அம்மாவில் தொடங்கும்.

கேரளத்தில் (மலையாளம்) 'அ'வுக்கு அம்மா சொல்ல மாட்டார்கள் 'அரிவாள்' என்று தான் போதிப்பார்கள். அங்கே குழந்தைகள் முதன் முதலாகத் தெரிந்து கொள்ளும் வார்த்தை ஆயுதம் பற்றியதாகும். அம்மா எல்லாம் சும்மா.

# கொழும்புக்கு பெயர் சூட்டிய "லொள் லொள்" நாய்!

1795. ஜெனரல் ஸ்டூவர்ட்டின் தலைமையிலான ஆங்கிலேயப் படை யாழ்ப்பபாணத்தைச் வெற்றி கொண்டது. மன்னாரை ஜெனரல் பௌஸர் வெற்றி கொண்டான். பின்னர் படைகள் மேற்குக் கரை வழியாக கொழும்பை நோக்கிப் பயணப்பட்டு வந்து கொண்டிருந்தன. புத்தளமும் சிலாபமும் ஒருவித எதிர்ப்புமின்றி அவர்கள் கைக்குள்ளானது வழிநெடுக நண்டும், இறால்கறியும், அரக்குலா மீனுமாக இராணுவத்தினர் ஒரு கை பார்த்து வந்தனர். கொச்சிக்கடைக்கருகிலே மஹாஓயா ஆற்றுப் படுக்கையைக் கடந்து பழைய சோனகர் பஸாரையும் தாண்டி நீர் கொழும்புக்குள் புகுந்து லுவிஸ் பிளேஸ் வழியாக கடற்கரையை அடைந்தனர். தற்சமயம் கோல்டீ சாண்ட்ஸ் ஹோட்டல் அமைந்திருக்கும் இடத்தருகே படையினரை ஓய்வெடுக்க வைத்து கடலில் நீந்திக் களிக்க அனுமதி வழங்கினான் கர்ணல் ஒருவன். அவர்கள் நீச்சல் உடையிலே கடல் தண்ணீரில் கும்மாளமிடத் தொடங்கியது. உள்ளூர் வாசிகளான கத்தோலிக்கர்களுக்கு விசித்திரமாக இருந்தது. அவர்கள் பலர் மீனவர்கள். கர்ணல் தன் கன்னங்கறுத்த குதிரை மீது கம்பீரமாக வீற்றிருந்தவனாக கடற்கரையோரமாக ஒரு சிறு நடைபயின்றான். ஓரிடத்திலே மீன் வலையைச் சிலர் பின்னிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் முதியவர். அவர் மீது கர்ணலின் பார்வை. அவரைப் பார்த்து மீசையை முறுக்கி விட்டுக் கொண்டே, ''இந்தக் கிராமத்திற்கு என்ன பெயர்?'' என்றான் சுத்த ஆங்கிலத்தில். முதியவருக்குப் பாஷை புரியவில்லை. அதே நேரத்தில் அந்தப் பக்கம்போன குதிரைரைப் பார்த்துவிட்டு மிரண்டு 'லொள் லொள்' என்று குரல் எடுத்து குரைக்க ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. ''ஊம் சொல்லு மேன், இந்தவில்லேஜுக்கு என்ன பெயர்'' முதியவரோ கேள்வியைப் புரிந்து கொண்டது வேறுவிதமாக, குதிரையைப் பார்த்து நாய் ஏன் குரைக்கிறது என்று கேட்பதாய் நினைத்தவறாக 'நிக்கங் பூ' என்றார் தன் தாய் மொழி சிங்களத்தில். ''ஓ நிகொம்பு (நீர் கொழும்பு) நல்ல ஜொலியான பெயர்தான்'' என்று குதிரையைத் தட்டிவிட்டான் கர்ணல் தன் தற்காலிகத் கூடாரத்தை நோக்கி. அங்கே போனதும் மேலிடத்திற்கு இப்படியொரு செய்தி பறந்தது. ''நிகொம்பு'' என்கிற இடத்தில் நமது படைவீரர்கள் இரவைக் கழிக்க உத்தேசித்துள்ளார்கள் என்பதை அறியத்தருகிறேன்''.



60ம் பக்கத்திலிருந்து

'பெலி' நடன .த்திற்குப் புகழ் பெற்ற நாடு எகிப்து தான். கிளியோபாட்ரா ஆண்ட தேசமாயிற்றே. அங்கே இன்றைக்கும் ஒரு திருமணம் என்றால் இதற்குத் தான் முக்கிய இடம். குறைந்த பட்சம் இருபது இசைக் கலைஞர்கள் இசைக்க ஆடப்பட வேண்டிய அழகு நடனம்.

உண்மையில் இது கலை அம்சம் மிக்க ஒன்று. உடலின் ஒவ்வொரு அங்கத்திற்கும் வேலையுண்டு. விரசமே இல்லாமல் ஆடுவதில்தான் புனிதம் தங்கியுள்ளது.

ஆனால் எல்லா நடனக்காரிகளும் அவ்வாறு ஆடுகின்றார்களா என்றால் இல்லை. பார்க்க வருகின்றவர்களும் ஒரு விதமான வக்கிர ஆசையுடன் தான் வருகிறார்கள்.

இங்கே படத்தில் உள்ள ஸெஹர்ஷாத் இவைகளை ஒத்துக் கொள்கிறார். ''நாட்டுக்கு நாடு இதை ஆடுவதில் வித்தியாசமுண்டு. துருக்கி, மொரோக்கோ, இந்தோனேஷியா, எகிப்து இங்கெல்லாம் ஒவ்வொரு மாதிரி. ஒவ்வொரு மாதிரி என்றால் இரசிகர்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றாப் போல் என்னென்னமோ. அவைகளையெல்லாம் உண்மையான பெலி நடன அம்சங்களோடு சேர்த்துக் கொள்ள இயலாது.'' என்கிறார்.

கொழும்பு ஹோட்டலில் இவர் நள்ளிரவு தாண்டியும் பெலி டான்ஸ் ஆடிக் கொண்டிருக்கும் பொழுது கூடவே வந்திருந்த இவரது பெண்குழந்தை அறையில் நல்ல தூக்கமாம்.

''இரவில் மட்டும் தான் மேடையில் நான் பெலி டான்சர். மற்ற நேரங்களில் இங்கிலாந்தின் ஒரு குடும்பப்பெண்'' என்கிற இவர், டச்சுத் தகப்பனுக்கும் இந்தோனேஷியத் தாயுக்கும் பிறந்து ஜெர்மனியரை (இவருக்கு இங்கிலாந்து ஷெல் நிறுவனத்தில் உத்தியோகம்) மணந்து ஒரு தாயாகவும் உள்ள இருபத்தெட்டு வயதுப் பெண்.

## ஏலக்காய்

ஏற்றம் மிகுந்த ஏலக்காய் 5000 ஆண்டுகள் பிரசித்தமானது. மிதமான குளிரும் உஷ்ணமும் உள்ள பகுதியில்தான் செழித்து வளரும். அதனால்தான் மலையகப் பகுதிகளில் இதன் வளர்ச்சியைக் காண்கிறோம்.

சவூதி அரேபியர்களுக்கு ஏலக்காயில் ஒரு தனி அவா. அவர்கள் அருந்தும் தேநீரிலும் கோப்பியிலும் ஏலக்காய் சரிக்குசரியாக இருக்கும் செக்ஸ் உணர்வைத் தூண்டுவதில் இது வல்லமையுடையதென்று ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே சவூதிக்காரர்களுக்குக் கொண்டாட்டம் பிரசவத்தில் சுடு தண்ணீரில் போட்டு அந்தத் தண்ணீரை தினமும் 21 நாட்கள் உட்கொள்ளும் பழக்கம் சில இடங்களில் உள்ளன.



## இதிகாச காகங்கள்

காகங்கள் நம் மத்தியில் சர்வ சாதாரணமாக அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருப்பதால் அதன் மகத்துவம் நமக்குப் புரிவதில்லை. நிறமும் கறுப்பாக இருப்பதால் ஒதுக்கித் தள்ளுகிறோம்.

பஞ்சதந்திரக் கதைகளில் ''லகுபதனன்'' என்றொரு புகழ் பெற்ற காகம் சிறகடித்துப் பறந்து சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

மகாபாரதத்தில் ஞானதிருஷ்டி மிக்க காகம் ஒன்று இருந்ததாக விவரங்கள் உண்டு. அது கூண்டில் இருந்தவாறே அரசருக்கு ரகசியங்கள், லஞ்சம் வாங்குபவர்கள், வரிகொடாமல் இருப்பவர்கள், புதையல் இருக்கும் இடம் முதலியவற்றை உள்ளது உள்ளபடியே கூறுமாம்.

சமீபகாலத்தில் பேசும் காகமும் இருந்ததாகத் தெரிகிறது.

ஜப்பானில் மியாஸாகி நகருக்கு அருகாமையில் பறந்து திரிந்த பெண் காகம் ஒன்று ஜப்பான் மொழியிலேயே போவோர் வருவோரிடம் குசலம் விசாரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. சில உதவிகளும் செய்தது.






தாய்லாந்து எங்கேயிருக்கிறது என்பது சிலருக்கு தெரியாது. ஆனால் பாங்கொக் தெரியும். அதாவது ஒரு தேசத்தின் தலைநகர் தெரிந்திருக்கிற அளவுக்கு தேசத்தின் பெயர் பிரபலமில்லை.

போகட்டும். பாங்கொக்கைத் தலைநகராகக் கொண்டுள்ள தாய்லாந்தின் வட பகுதியில் பாலியல் அறிவையூட்ட மேற்கொள்ளப்பட்ட புதுமுறைப்படி 'காம் லா' என்று ஒரு கொமிக் புத்தகம் பாடசாலைகளில் விநியோகமாகியிருக்கிறது. எல்லா இளவயது பிள்ளைகளும் இதை விழுந்து விழுந்து படிக்கிறார்கள். 'காம் லா' என்பது அவர்கள் வயதையொத்த ஓர் இளவயதுப் பெண்ணின் பெயர். இவளுடைய வாழ்க்கையில் நடந்த உண்மையான பரிதாபமான சம்பவத்தை சித்திரங்களின் வாயிலாக புத்தகம் சித்தரிக்கிறது.

'காம் லா' ஒரு கிராமப் புறத்துச் சிறுமி தன் கிராமப் பள்ளியில் எழுதப் படிக்க கற்றதுடன் சரி. பின் படிப்பைத் தொடரவில்லை. பள்ளிக்கூடம் தூரத்தில் இருந்ததும் பெண் பிள்ளைகளுக்குப் படிப்பு எதற்கு என்ற போக்கும் சூனியமாக்கியது. அவளுக்கு நகரத்தின் கவர்ச்சியைக் காட்டினான் ஒருவன். இவன் ஒரு பெண் தரகன். விபசார விடுதிகளுக்குப் பெண்களைக் கொண்டு சேர்ப்பவன். ஒரு மரியாதையான குடும்பத்தில் வேலை என்று நம்பி சிறுமி 'காம் லா' அவனுடன் நகரத்திற்கு வந்தாள். அந்த விடுதி வீட்டிற்குள்

அடைக்கப்பட்டாள். அது விபசார விடுதி என்பதை அவள் புரியவில்லை. தன் தகப்பனைப் போல ஒரு வயதான மனிதன் தன் உடுப்புகளைக் களைந்த போதுகூட அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒவென்று அழத்தான் தெரிந்தது. அப்புறம் விடுதிக்காரனே அவளைக் கெடுத்தான். ஈனத் தொழிலுக்கு உட்படுத்தப்பட்டாள். இன்னும் நாலு சிறுமியர் இவளுடன். ஒருநாள் அந்த விபசார விடுதியே தீப்பற்றி எரிந்தது. அறைக்குள் அடைபட்டிருந்த இவர்களும் எரிந்து கருகினார்கள். முழு தாய்லாந்துமே அலறியது.

இந்த உண்மைச் சம்பவம் சோகத்தில் முடிவு பெற்றிருப்பதால் இளம் பிள்ளைகளின் இதயங்களைச் சுண்டியிழுத்துள்ளது.

எதிர்காலத்தில் ஒன்றுமறியா அப்பாவிச் சிறுமிகள் எப்படி எப்படியெல்லாம் தங்களை காம நாய்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் பெண்களுக்குப் பாலியல் அறிவு எத்தனை முக்கியமானது என்பதையும் ஒரு காமிக் புத்தகத்தின் ரூபத்தில் பாலியலை மிகவும் இலகுவாக தாய்லாந்து உணர்த்தியிருப்பதாக பல இயக்கங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

## பருவம் 16 அல்ல!


நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்ததை விட இப்பொழுது சிறுமிகள் குறைந்த வயதிலேயே பெரியவர்களாகி விடுகிறார்கள். இதற்குக் காரணம் இப்பொழுதெல்லாம் உணவில் நிறைய கொழுப்புச் சத்து சேருவதுதான். அமெரிக்காவில் அட்லாண்டா என்ற இடத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி இதை நிரூபிக்கிறது.

## கண்ணில் தெரியுதொரு தோற்றம்

இரத்தத்தில் சர்க்கரை (சீனி) அதிகமாகும் பொழுது அடிக்கடி கண் பார்வையில் மாறுதல் ஏற்படும். ஒருநாள் நன்றாக தெரியும் பார்வை மறுநாள் சரியாகத் தெரியாது. இவ்வாறு பார்வை அடிக்கடி மாறினால் சிறுநீரைப் பரிசோதித்து சர்க்கரை இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இது அவசியம்.



# கின்னஸ் பதிவு செய்துள்ள உலக விசித்திரங்கள்



யாரும் சாதிக்க முடியாத விசித்திரங்களை சாதிக்க வைத்தால் அது உலகப் பிரசித்தி பெற்ற 'கின்னஸ்' சாதனைப் பதிவேட்டில் பதிவு பெறும் பாக்கியத்தைப் பெறுகின்றது. 1955ம் ஆண்டிலிருந்து இந்த ஏற்பாடு ஆரம்பித்தது. இதுவரையில் ஓர் இலட்சத்து நாற்பதாயிரம் 'சாதனைப் பதிவுகள்' இருப்பதாக ஒரு கணக்கு. இந்த 'கின்னஸ்' புத்தகமும் 31 மொழிகளில் வெளியாகி 60 மில்லியன் பிரதிகள் விற்றிருக்கிறது. இதை பைபிளுக்கு அடுத்தபடியான விற்பனை என்கிறார்கள். புதிய 35வது பதிப்பில் பதினைந்தாயிரம் 'விசித்திரமான 'சாதனைப் பதிவுகள்' உள்ளனவாம். அவைகளிலிருந்து ஒரு சிறிய பட்டியல் இங்கு தரப்படுகின்றது.

✱ உலகத்திலேயே உயரமாக வளர்ந்து கொண்டிருக்கிற ('இப்போதைக்கு 2.33 மீட்டர்,) ஒரு பெண் போர்னியோவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன்னும் உயரம் கூடிக் கொண்டிருக்கிறது

✱ 53 கிலோ எடையுள்ள ஒரு கோவா இங்கிலாந்தில் பயிராகியுள்ளது. ✱ ஸ்பெயினில் ஒரு பாக்ஸிங் சாம்பியன் போட்டி 45 வினாடிகளுக்குள் நடந்து முடிந்துவிட்டது.

✱ ஜேம்ஸ் என்கிற ஆங்கிலேயன் ஒரு பெரிய தோட்டத்தில் நடந்த விருந்தில் 4525 பெண்களை ஒரே நாளில் முத்தமிட்டு மகிழ்ந்தான். ✱ ஆறு மணித்தியாலம் 24 நிமிடங்கள் வரையில் மூன்று ஆரஞ்சுப் பழங்களை ஒருவன் கீழே போடாமல் வித்தை காட்டிக் கொண்டிருந்தான்.

✱ அமெரிக்காவில் மைக்கால் என்பவன் தூங்கிக் கொண்டே 160 கிலோ மீட்டர்கள் நடந்து தொலைத்தான்.

இவைகள் போதுமா இன்னும் தேவையா?

# இலங்கை இலக்கியம்:
## 40-50 ஆண்டுகளுக்கு முன்...

கந்தரோடை (சுன்னாகம்) 'கலைச்செல்வி' பற்றி 1960 ஏப்ரல் மாதத்து சி.சு.செல்லப்பாவின் 'எழுத்து' என்ற தமிழக இலக்கிய சஞ்சிகையில் ஒரு குறிப்பு இப்படி இருக்கிறது-

''தமிழகத்தைவிட இலக்கிய அக்கறை கொண்ட பத்திரிகைகள் கூடுதலாகவே இலங்கையில் உள்ளன. அவைகளில் ஒராண்டு முற்றுப் பெற்றுள்ள 'கலைச்செல்வி' ஒன்று. அதன் ஆண்டு மலர் இலக்கியத்தரமாக இருக்கிறது''

இந்தக் 'கலைச்செல்வி'யில் வெளியான 'ஈழத்துச் சோமு' கட்டுரை இன்றைய இலக்கிய இளைஞர்களுக்கு மிக்க பயனுள்ளதாக அமையும் என்ற நோக்கில் 'லைட்ரீடிங்'கில் தருவதற்கு விருப்பம்.

இதோ முதற்பகுதி- தமிழ் நாட்டில் 'புதுமைப் பித்தன்' தலைமையில் சி.சு. செல்லப்பா, கு.ப.த.ரகுநாதன் முதலியோர் 'மணிக்கொடி'யில் செய்த புதிய இலக்கிய பரிசோதனைகளையொட்டி, தாமும் அப்படி இலக்கிய பரிசோதனைகளை இலங்கை மணம் வீசக்கூடியதாகச் செய்ய வேண்டுமென்ற துடிப்புக் கொண்டு, புதுமை இலக்கிய ஆர்வங்கொண்ட சிலர் சிறப்பாக வரதர், அ.செ.முருகானந்தம், அ.ந.கந்தசாமி ஆகியோர் 'மறு மலர்ச்சி' என்ற மாத இதழை மலர வைத்தனர். இலக்கிய தாகத்தால் துடித்துக் கொண்டிருந்த இளம் வட்டாரங்களில் அந்த இதழுக்கு அமோக வரவேற்பு இருந்ததில் ஆச்சரியமில்லை.

'மறுமலர்ச்சி' தோன்றிய பிறகுதான் புதுமை இலக்கியம் முழு வேகத்தோடு வளரத் தொடங்கியதாகையால் இலங்கை இலக்கியத்தில் மறுமலர்ச்சி புதியதொரு சகாப்தத்தை தோற்றுவித்தது எனக் கொள்வது மிகையாகாது.

மேலும் ஒரு புதிய எழுத்தாள அணி சு.வே, 'சயா', 'சொக்கன்', 'சாரதா', 'நாவற்குழியூர் நடராசன்', பஞ்சாட்சர சர்மா, சு.இராசநாயகம், 'யாழ்ப்பாணன்', சோ.நடராசா, சண்முகபாரதி, 'அனுசூயா' முதலியோரைக் கொண்டு உருவாகியது.

'மறுமலர்ச்சி' நின்றுவிட அதைச் சேர்ந்த குழுவினர் வெவ்வேறு திசைகளில் சென்று-ஆனால் மறுமலர்ச்சி இயக்கத்தை, புதுமை இயக்கத்தை, புதுமை இலக்கியத்தை தொடர்ந்து வளர்க்கக்கூடிய இடங்களில்-சிலர் இடம் பிடித்துக் கொண்டனர். புதிதாகப் பிறந்த 'சுதந்திரனில்' பணியாற்ற அ.செ. முருகாநந்தமும், அ.ந.கந்தசாமியும் புகுந்தார்கள். தி.ச.வரதராசன் தன் இலக்கியப் பரிசோதனைகளுக்கு எதிர்காலத்தில் இடமளிக்கத்தக்க வசதிகளோடு கூடிய அச்சகம் ஒன்றில் அமர்ந்தார். பிறகு நாவற்குழியூர் நடராசனும் இலங்கை வானொலியில் பதவி பெற்றுக் கொண்டார்.


ஆகவே, புதுமை இலக்கிய 'மறுமலர்ச்சி' நின்ற பிறகும் தளர்ச்சியடையாமல் புதிய வீறுடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிழக்கு மாகாணத்தில் இலக்கிய மறுமலர்ச்சிக்கான முயற்சிகள் நடத்தப்படாமலில்லை. புதுமை இலக்கிய 'உதயம்' செய்விப்பதில் ஈடுபட்ட பிறகு 'தினகர'னில் சேர்ந்து கிராமியக் கவிதைகளை ஆராய்ந்து இலக்கிய மெருகுடன் வெளியிட்டுக் கொண்டிருந்தார் எஸ்.டி.சிவநாயகம்.

இனி மற்றுமொரு பகுதியையும் பார்த்து விடுங்கள்:

சுதந்திரன் செய்து ஓய்ந்து போய்விட்ட இலக்கியப் பணியை தொடர்ந்து சிறந்த முறையில் இலங்கை எழுத்தாளர்கள் செய்வதற்கு ஏற்பட்ட ஒரு பெரும் வாய்ப்புத்தான் கே.கைலாசபதி 'தினகரனில்' ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்ட சம்பவம் இன்று எழுத்தாளர்களது புதிய இலக்கிய பரிசோதனைகளுக்கு இடமளிப்பது மட்டு மல்ல, இந்த ஆண்டில் எழுதப்பட்டுள்ள சிறந்த சிறு கதைகளும் தினகரனில் தான் இடம் பெற்றுள்ளன. இளம் எழுத்தாளர்கள் சிலரும் 'தினகரன்' மூலம் உருவாக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் குறிப்பிட கூடியவர்கள் சாந்தினி, பொ.தம்பிராசன், அ.முத்துலிங்கம், யாழினி, அ.பொன்னுத்துரை, ரபேல், யாழ்நங்கை முதலியோராகும்.

தமிழ் நாட்டில் சிறு கதைத் தொகுதிகள் பல ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்து விட்டன. ஆனால் இலங்கையில் சிற்பி தொகுத்தெடுத்த பன்னிரெண்டு எழுத்தாளர்களது படைப்புக்கள் ஈழத்துச் சிறு கதைகள் தாம் இலங்கை இலக்கிய உலகத்தைப் பொறுத்தவரை வெளிவந்த முதல் சிறு கதைத் தொகுதியாகும். ஈழத்து எழுத்தாளர்களின் சிருஷ்டிகள் சில இதோ எனப் பெருமை யோடு வெளி நாட்டாருக்கு வேற்றுமொழி இலக்கிய கர்த்தாக்களுக்கு காட்டக்கூடிய இந்த நாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய சிறந்த பணி ஈழத்துச் சிறு கதைகள் என்ற தொகுப்பாகும்.

சம்பந்தன்-சி. வைத்தியலிங்கம் முதலியோர் 'கலைமக'ளில் எழுதிவந்தது பொய்யாய் கனவாய் பழங்கதையாகி விட்டது. பிறகு தமிழகத்துச் சரக்குகளுக்கு இலங்கை இலக்கியச் சந்தையில் இடம் பிடிக்கும் வியாபார நோக்குடன் ஆம் அப்படித்தான் நம்பவேண்டியுள்ளது கல்கி முதலிய ஏடுகள் தீபாவளி மலர் ஆகியவற்றுக்கு மட்டும் பண்டிதர் க.பொ. இரத்தினம் அவர்களிடமோ வண தனிநாயக அடிகள் அவர்களிடமோ ஒரு கட்டுரை வாங்கிப் பிரசுரித்து கண் துடைப்புச் செய்து கொண்டு வந்தன. இந்த மரபைத் தகர்த்து இலங்கை எழுத்தாளர்களது படைப்புக்களுக்கும் இடமளிக்க முன் வந்தவை 'பொன்னி, சரஸ்வதி, தாமரை ஆகிய ஏடுகள். ஈழத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் கோஷ்டியொன்றைச் சேர்ந்தோர் இப்பொழுது அடிக்கடி இந்த இதழ்களில் எழுதி வருவது கண்கூடு. 'ஆனந்த விகடனி'ல் கூட அண்மையில் இலங்கை எழுத்தாளர் ஒருவரது படைப்பு இடம் பெற்றிருந்தது. தொடர்ந்தும் இலங்கைச் சந்தையில் வியாபாரம் செய்ய முடியாது என்பதை உணர்ந்து தமிழகத்துப் பத்திரிகைக்காரர்கள் மனம் மாறி வருகிறார்கள் என்பதை இச் சம்பவங்கள் காட்டுகின்றன.



## இந்தக் கோயில்களில் இவை கிடைக்கும்.

★ அர்த்தஜாமப் பூஜைக்குப் பின் அருமையான பால் கிடைக்கும் ஸ்ரீ ரங்கத்தில் (திருச்சி)

★ மீண்டும் மீண்டும் சாப்பிடத் தூண்டும் பிட்டமுதுக்கு திருச்செந்தூர் (திரு நெல்வெலி)

★ தித்திக்கும் திருக்கண் அமுது திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் (சென்னை)

★ பெரிய பெரிய தாளித்த இட்டிலிக்கு காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில்.

★ பயறுகளுடன் தேங்காயும் கலந்து செய்யப்படும் வங்காரத் தோசைக்கு ஆழ்வார் திருநகரி (திருநெல்வேலி)

★ தின்னத் தின்னத் திகட்டாத திருவாதிரைக் களிக்கு தில்லை நடராசர் கோயில் (சிதம்பரம்)



# அக்குறணைக்கு உரிமையாளர்கள் மூன்று முஸ்லிம் வீரர்கள்

மலையகத்து கண்டிப் பிரதேசத்துக்கு அழகு சேர்ப்பது அக்குறணை. இந்நகரச் செல்வாக்கையும் சிறப்பையும் வைத்து இலங்கை முஸ்லிம்களை மதித்தோர் அன்று அதிகம். இன்றும் இல்லாமலில்லை.

இந்த மண்ணின் மக்கள் வீரத்தின் விளை நிலத்தோராவர்.


சமீபத்திய பல பயங்கரவாத நிகழ்ச்சிகளில் இவர்கள் ' முகம்' கொடுத்த விதத்தின் கதைகள் இப்பொழுது நிறைய வருகின்றன.

இதற்கு ஒரு பின்னணி வரலாறு உண்டு என்பது என் கருத்து.

கண்டி மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் (1632-87) காலத்தில் மூன்று பிரபலமான முஸ்லிம் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நன்கொடைதான் அக்குறணைப் பிரதேசம்: அவ்வீரர்களால் அப்படியொரு குடியேற்றம் நடைபெறாது போயிருப்பின் இன்று ஒரு சிறப்பு மிகு முஸ்லிம் பாரம்பரியத்தை அங்கு கண்டிருக்க முடியாது. வீரமிகு செயல்களையும் பார்த்திருக்க இயலாது.

கவிஞர் ரி.எம். சாகுல் ஹமீத் அவர்களின் கவிதையொன்றில் இடம் பெற்றுள்ள வரிகள் இவை-

'கண்டிய பதியைக்
காவல் புரிந்த
திண்டிறல் வீரரென்றிசை
மிகவீட்டிய
சோனகப் பெரியோர்க்
கான பரிசாய்ச்
சிங்கள மன்னன் சீருற
வளித்தனன்'



### நமக்கு பற்களே இல்லாது போகலம்.

போகிற போக்கில் எதிர்காலத்தில் நமக்குப் பற்களே இல்லாது போகலாம்.

ஓர் இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த பற்களின் நீளத்தில் பாதிதான் இன்று நமக்கு இருக்கிறதாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருசத விகிதம் என்ற கணக்கில் நம்முடைய பற்களின் நீளம் குறைவடைந்து கொண்டே வருகிறதாம்.

இந்த ரீதியில் ஒரு காலத்தில் பற்களே இல்லாத மனிதனைப் பார்க்கும் நாள் வரும் என்ற மனித இன ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### தேசிய பொய்யர்கள் கழகம்.

அமெரிக்காவில் 'தேசிய பொய்யர்கள் புகழ் கழகம்' ஒன்று உள்ளது. இந்த அமைப்பு ஆண்டுதோறும் புகழ் பெற்ற பொய்யர் ஒருவருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கிறது. கடந்தாண்டு விருதை ஒரு விவசாயப் பத்திரிகையாளர் பெற்றுக் கொண்டார். இவர் பத்திரிகையில் வெளியிட்ட எமகாதகப் பொய் இதுதான்; ''ஒஹியோ மாநிலத்தில் வறட்சி மிக அதிகம். அந்த மாநிலப் பாதிரியார் மதுவை நீராக்க முயற்சிகள் மேற் கொண்டிருக்கிறார்.



## இந்தியாவில் இங்கே பிச்சை எடுக்கத் தடை!

பிச்சைக்காரர்கள் மலிந்துள்ள இந்தியாவில் ஒரு நகரத்தில் பிச்சையே எடுக்கக் கூடாது எனத் தடை செய்திருக்கிறார்கள். அது எர்ணாகுளம், கேரள மலையாளப் பகுதி நகரம்.





## காலனைத் துரத்தும் காளான்

பிலிப்பைன்ஸ் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு 97 வயது மனிதரிடம் அவரது நீண்ட வயதின் இரகசியத்தை வினவினார்கள்.

'எனக்குக் காளான் உணவும், மீனும் துணை செய்கின்றது' என்றார் அவர்.

'முக்கியமாகப் பகலில் காளான் சாப்பிடத் தவறமாட்டேன். கிடைக்குமாயின் இரவிலும் உண்பேன்' என்று சொன்னார் அவர்.

நமது ஊவா மாகாணத்தில் இப்பொழுது பல இளைஞர்கள் காளான் விளைச்சலில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். வெளிநாட்டில் நல்ல கிராக்கி என்றும் என் காதில் செய்திகள்.

சந்தையில் அரிசி விலை ஏறிப் போயிருக்கிறது. காலத்திற்கு காலம் பல புதிய உணவுகளைக் கண்டு பிடித்தாக வேண்டிய சூழ்நிலை.

காளான் அப்படியொன்றும் புதிய பொருளுமில்லை. 3000 ஆண்டுகளுக்கு முன்பே அது உணவுப் பொருளாகப் பயன்பட்டு வந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. 1707ம் ஆண்டில் இதன் மகிமையை பிரான்ஸ் மக்கள் புரிந்தார்கள்.

காளானில் பல ரகங்கள். அனைத்துமே உண்ணத் தகுந்தவையும் அல்ல. விஷத் தன்மை உள்ளவையும் உண்டு. அவை பளிச் சென்று வெண்மையாக இருக்குமாம்.

உண்மையில் கலோரிச் சத்துக் குறைவான காளான் வேறு பல சத்தான சங்கதிகளைத் தந்து நம்மை நீண்ட நாள் வாழச் செய்கிறது. காலனைக் கொஞ்ச நாள் சென்று வா என்று கட்டளை பிறப்பிக்கின்றது. ஏராளமான வைட்டமின்கள், தாதுப் பொருட்கள், புரோட்டின்கள் அதில் மலிந்துள்ளனவாம்.

# 4 கண்-காது-வாய் 1

நூறு வயதுக்கு அருகில் வந்திருக்கும் முத்தமிழ்க் காவலர், முதுபெரும் அறிஞர் கி.ஆ.பெ. வஸ்வநாதம் மணமக்களுக்கு மகிழ்வுடன் வழங்கும் தகவல் இது.

✱ மணமகனுக்கு நேற்றுவரை இரு கண்கள். இனி அது கூடாது. நாளையிலிருந்து மணமகளின் இரு கண்களையும் பயன்படுத்தி உற்றார் உறவினர்களையும் உலகத்தையும் நான்கு கண்களால் பார்த்து வாழ்வைத் தொடங்க வேண்டும்.

மணமகளுக்கு நேற்றுவரை இரு காதுகள். இனி அதுபோதாது. நாளையிலிருந்து மணமகனின் இரு காதுகளையும் பயன்படுத்தி நான்கு காதுகளால் உற்றார் உறவினர்களின் செய்திகளையும் உலகின் செய்திகளையும் கேட்டு வாழக்கையை நடத்தியாக வேண்டும்.

✱ அவர்கள் வாழ்க்கையில் பெற்றிபெற இவையும் போதாது. தம்பதியர் தங்கள் வாய்கள் இரண்டையும் நான்காகப் பெருக்கிக் கொள்ளாமலும் இரண்டாகப் வைத்துக் கொள்ளாமலும் ஒன்றகாக் குறைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்வில் வெற்றி பெறமுடியும்.

### ஒற்றைத் தலைவலிக்கு எளிய சித்த வைத்தியம்.

✱ முருங்கை வேர்ப்பட்டையும், வெள்ளைப் பூண்டையும் சம எடை எடுத்துப் பஞ்சு போல் இடித்து இதில் வரும் சாற்றை இடது பக்கத் தலைவலிக்கு வலது மூக்கிலும், வலது பக்கத் தலைவலிக்கு இடது மூக்கிலும் 4 அல்லது 5 சொட்டுகள் விட தலைவலி நீங்கும்.

✱ அதிமதுரம், சோம்பு, சாக்கரை அல்லது கருப்பட்டி ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 35 கிராம் எடுத்துச் சூரணம் செய்து அரை தேக்கரண்டி அளவு தேனில் கலந்து நாள் தோறும் உண்டு வர தலைவலி, ஒற்றைத் தலி, தீராத தலைவலி தீரும். கண்களும் ஒளி பெறும். அதிகச் சூட்டினால் ஏற்பட்ட தலைவலிக்கு இச்சூரணம் நல்ல பயனை அளிக்கும்.



✱ கரும் செம்பை பூ அல்லது சிற்றகத்திப் பூவை நல்லெண்ணெயிட்டு குளித்து வந்தால் தலை பாரம் ஒற்றைத் தலைவலி தலையில் நீரேற்றம் தீரும்.

✱ 35 கி. பச்ச கொடி வேலி வேர்ப்பட்டையைக் கற்றாழைச் சாற்றில் அரைத்து நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி குளித்து வர ஒற்றைத் தலைவலி போகும்.

✱ நொச்சித் தைலம், மிளகாய்த் தைலம் இவற்றில் ஒன்றைத் தலையில் தேய்த்துக் குளித்து வர நல்ல பயனளிக்கும்.

## 400 ஆண்டுகளுக்கு முன்

மலர்களைப் போலத் தூங்கிக் கொண்டிருக்கும் ஓர் இளவரசியைக் கண்டுகளிக்க வேண்டுமா? அதுவும் 4000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவள்.

உலகப் புகழ்வாய்ந்த எகிப்தியப் பிரமிடுகள் ஒன்றில் இவளை 'மம்மி'யாகக் (பாடம் செய்யப்பட்ட இறந்த உடம்பு) கண்டு பிடித்தார்கள். ஆனால் அவள் 'தூக்க'த்தை யாரும் கெடுக்கவில்லை.

நவீன கருவிகளைக் கொண்டு 'மம்மி'க்குச் சேதம் விளைவிக்காமல், பிரமிடுகளை உடைக்காமல் அவளது உடலுக்கும் முகத்திற்கும் வடிவமைப்புக் கொடுத்துள்ளார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுக்கு முந்திய பெண்ணின் முகத்தைப் பார்க்கும் போது யாருக்கும் பிரமிப்புத் தோன்றும்.

நன்றாக சுற்றிக் கட்டி வைக்கப்பட்டு இருக்கும் இவளைப் போன்றவர்களின் இந்த உடம்புகளை (மம்மி) பிரிக்காமல், அறுத்துப் பார்க்காமல், எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் மூலம் உள் உறுப்புக்களைப் பரிசோதனை செய்தலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இளவரசி இன்னும் பலநூறு ஆண்டுகள் தூங்கிக் கொண்டே இருப்பாள் போலிருக்கிறது. தூங்கு கண்ணே, தூங்கு.

# வேடிக்கை தந்த வேதனை மரணங்கள்

மரணத்திலும் வேடிக்கை உண்டா? அதிலும் விதவிதமானவையும் இருக்கின்றனவா?

இருக்கிறது என்பதற்குச் சான்றுகள் பத்திரிகைகள் பலவற்றை லைட் ரீடிங்குக்காகப் புரட்டிக் கொண்டிருந்த பொழுது கிடைத்தது. இதில் உள்ளூர் மரணங்கள் இரண்டும் தமிழ் நாட்டு மரணம் ஒன்றும் அடங்குகிறது.

கேகாலை, இங்குகஸ தெனியவில் தென்னக்கூன் நல்ல பணக்காரர். தூய்மையான வாழ்க்கை அவருடையது. வயது 83. இரு பிள்ளைகளை டாக்டர்களாக்கி விட்டார். மற்றும் மூவரைப் பட்டதாரிகளாகவும் ஆக்கி உத்தியோகமும் தேடிக் கொடுத்து விட்டார். ஒருநாள் திடீரென்று தூக்க வில்லைகளை விழுங்கி இறந்து போனார்.

'83 ஆண்டுகள் வாழ்ந்தது போதும். இனிப் பூமிக்கும் பிள்ளைகளுக்கும் பாரமாக இருக்கக் கூடாது' என்று சொல்லி, தன் மூப்பைக் குறிப்பிட்டு ஒரு கவிதையையும் எழுதிவிட்டு மறைந்திருக்கிறார்.

மத்துகாமப் பகுதியில் தெகிபிட்டிய என்ற ஊரில் ஒரு குமரி. பி. அசோகா குமாரி என்று இவளுக்குப் பெயர். கால் விரல்கள் இரண்டும் மிகச் சிறியவை. தரையையே தொடாது. பிறப்பிலேயே அப்படி. அதைப்பற்றி சாஸ்திரம் ஓர் எச்சரிக்கை செய்தது. நீ யாரையாவது மணம் முடித்தால் அவன் அநியாயமாகத் திடுதிப்பென்று மாண்டு போவான்' என்றது அது. அந்தச் சமயத்தில் அவளுக்கு ஒரு காதலனும் இருந்தான். திடீரென்று அந்தக் கன்னி தற்கொலை செய்து மாண்டு போனாள்.

'என்னை மணம் செய்த பிறகு என் கணவர் மாண்டு நான் விதவைக் கோலம் பூணுவதை விட இப்பொழுதே நான் செத்து விடுவது மேல்' என்று அவள் கடிதம் பேசியது.

மதுரை மாவட்டம், சின்னமனூரில் 22 வயது சுந்தரம்மாள் செத்த விதம் இன்னொரு வகையில் வேடிக்கையானதும் வேதனையானதுமாகும்.



இவள் வீட்டில் உயர்ஜாதி பசு மாடுகள் உண்டு. இவளுடைய அபிமானத்துக்குறிய மாடு அன்றைக்குத்தான் கன்று போட்டது. உடனே நோயும் கண்டது. எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் இரண்டொரு நாளில் செத்துப் போயிற்று. சாகும் பொழுது சுந்தரம்மாள் வீட்டிலில்லை. வெளியே போய்விட்டு வீட்டுக்குள் நுழைந்த பொழுது மாட்டின் மரணத்தைச் சொன்னார்கள். அதிர்ச்சி அடைந்த அவள் தான் கண்ணுக்கு கண்ணாக வளர்த்த மாடு செத்ததே என்று அலறி கீழே சாய்ந்தாள். அவள் உயிரும் போயிற்று. இரு சாவுக்கும் இடைப்பட்ட நேரம் இருபது நிமிடங்கள் தான்.

மரணத்திலும் வேடிக்கை கலந்த வேதனைகள் உண்டு என்பதற்கு இந்த மூன்று சாவுகளுமே சாட்சி.

## உங்கள் உணவில் நஞ்சு கலந்திருக்கிறது

இப்பொழுது நாம் உண்ணும் உணவை நினைத்தால் அச்சமாக இருக்கிறது.

உணவுகளில் உண்டாக்கப்படும் கலப்படத்தினால் நஞ்சை உண்ணும் நிலை. நம் வாழ்வைக் கூட்டுவதற்குப் பதிலாக நாம் உண்ணும் உணவு குறைக்கும் வழியைச் செய்கிறது.

★ அரோரூட் மாவில் 42 சாம்பிள்கள் எடுத்துப் பார்த்ததில் 37ல் இருந்தது வெறும் சோளத்தூள்தான். 3ல் கலப்படப் பொருட்கள் 3 மட்டும் உண்மையானவை.

★ பாக்கெட் செய்யப்பட்ட கோப்பித்தூள் பாக்கெட்டுகள் 27ஐப் பரீட்சித்ததில் வெறும் மரக்கறி வகைகளை வறுத்திருந்தது புரிந்தது.

★ நெய் என்று சொல்லப்பட்ட 42 சாம்பிள்களில் 39ல் நெய் என்பது மருந்துக்கும் இல்லை. ஒரு சாம்பிளில் நெய் தரம் குறைந்து காணப்பட்டது. இரண்டு மட்டும் தரமானவை.

★ தேங்காய் எண்ணெய்யும் என்ன? 13 சாம்பிள்களில் ஒரு சாம்பிள்தான் தேங்காய் எண்ணெயாக இருந்தது. மற்றவை மிக மிகத் தரம் குறைந்த கலப்பட எண்ணெய்கள்.

★ ஐம்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட ஐஸ்கிரீம் வகைகளிலும், அறுபது சதவிகிதத்திற்கு அதிகமான லொலி பொப்பிலும் வெறும் செயற்கை இனிப்புச் சமாசாரங்களே.

★ இவையனைத்தும் அரசினர் ஆய்வுத் திணைக்கம் ஆராய்ந்து கண்ட உண்மைகள்.

## ‘ஷெர்லக் ஹோம்ஸ்’

‘ஷெர்லக் ஹோம்ஸ்’ என்ற ஆசாமி, சர் ஆர்தர் கோனன்டா யில் என்பவரது கதைகளில் வந்த துப்பறிகிறவர். கற்பனைப் பாத்திரம். உலகமே இவர் பெயரைத் தெரிந்து வைத்தி ருக்கிறது. அவர் ஒரு உண்மை யான ஆசாமி என நம்புகிற வர்களும் ஆயிரக் கணக்கில் உண்டு. அப்படிப்பட்ட பாத்தி ரத்தை உருவாக்க வேண்டும் என்று எழுத்தாளருக்கு கற்பனை கடிவாளமிட்டது, டாக்டர் ஜோசப்பெல் என்பவரைக் கண்ட பிறகுதான். இவர் அப்பொழுது எடின்பார்க் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பேரசிரியராக இருந்தார். எழுத்தாளர் கோனன டாயில் கூட ஒரு மருத்துவர் தான்.

## திருவள்ளுவருக்கு ஒரு திருக்கோயில் தமிழகத்தில்

தமிழகத்தில் திருவள்ளு வருக்கென்றே அமைந்த கோயில் அவர் பிறந்ததாகக் கருதப்படும் சென்னை மயிலாப்பூரில் உள் ளது. இக் கோயில் உள்ள தெருவுக்கு ‘திருவள்ளுவர் கோயில் தெரு’ என்றே பெயர். தமிழ் அர்ச்சனையை இங்கு காது குளிரக் கேட்கலாம். இன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் காட்சி தரும் மிகப் பிரபலமான

‘வள்ளுவர் கோட்டம்’ ஆரம பத்தில் மயிலாப்பூரிலேயே அமைக்கப்பட இருந்தது. (திரு வெற்றியூர் என்கிற இடத்திலும் வள்ளுவருக்கு ஒரு சிறு கோயில் உண்டெனச் சொல்லுகிறார்கள்.)

## நோயறிய உமிழ் நீர்

குடற் புண் நோயாளிகளின் உமிழ் நீர் முதல், 5 அல்லது 6 வார கால கர்ப்பம் தரித்த பெண்டிர் உமிழ் நீர் வரை சேகரித்து ஆராய்ந்ததில் மிக எளிதாகப் பிணிகளையும் உடலியல் மாறு பாடுகளையும் சரியாக மருத்து வர்களால் தீர்மானிக்க முடிந்துள்ளது.

## ஆபரேட்டர் ஆசிரியர்.

‘சண்டே டைம்ஸ்’ என்று இலண்டனில் பிரபலமான ஓர் ஆங்கிலப் பத்திரிகை. இதன் ஆசிரியர் அந்த அலுவலகத்தில் முன்பு ஒரு டெலிபோன் இயக்குபவராக (ஆபரேட்டர்) வாழ்க்கையைத் துவங்கினார்.



# ஒட்டகப் புத்தியா உங்களுக்கு?

**அது என்ன ஒட்டகப் புத்தி?**

எருமை மாட்டுப் புத்தி குரங்குப்புத்தி, நரிப்புத்தி இப்படித்தானே புத்தி உண்டு. ஒட்டகப்புத்திகள் எங்கிருந்து குதித்தது?.

ஆனால் ஒட்டகப் புத்தி உள்ள மனிதனும் இருக்கிறான். அதுவும் கொஞ்சமாக அல்ல நிறையவே இருக்கிறான்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஓரிடத்திலே ‘ஒட்டகப் புத்தி உள்ளவனை மட்டும் இறைவன் மன்னிக்கமாட்டான்’ என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒட்டகமானது நன்றாகத் தண்ணீர் குடித்து ஸ்டாக் செய்து கொண்டு நாட்கணக்கில் கிடக்கும். அதனுடைய விசேட உணவு ‘கருவேலஞ் செடி’ நமக்குப் பிரியாணி எப்படியோ அப்படி.

கருவேலஞ்செடி என்பதை இலேசாக நினைத்து விடக்கூடாது. கிராமப்புற மக்களுக்குத் தான் அதன் பயங்கரம் தெரியும். கையில் எடுத்தாலேயே முட்கள் இஞ்செக்சன் போட்டு விடும். இலைகளைவிட முட்கள்தான் அதில் அதிகம். இதைத்தான் ஒட்டகம் நாக்கைச் சுழற்றிச் சுழற்றித் தின்னும். அவ்வளவு ஆசை அதற்கு. அந்தச் செடியைத் தின்னும் பொழுது முள் எல்லாம் குத்தும். நாக்கிலிருந்து இரத்தம் கொட்டும் அப்படியம் சுழற்றிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும். சாப்பிடுவதற்கு முன் செடியின் முள் குத்தும் என்பது அதற்குத் தெரியாது. சாப்பிடுகையில் உணர்ந்தாலும் இரத்தம் ஓடினாலும் வாயிலிருப்பதை ‘தூ’ என்று துப்பாது தொடர்ந்து கருவேலஞ் செடியைக் காணும் பொழுதெல்லாம் இப்படியே! இதுதான் ஒட்டகப் புத்தி.

ஒருவன் தவறு செய்வது எளிது. அறியாமல் செய்துவிடலாம். ஆனால் செய்த தவறைத் தவறு என்று உணர்ந்த பிறகு ஆண்டவனிடம் மன்னிப்பும் கேட்ட பிறகு மீண்டும் அந்தத் தவறையே திருப்பிச் செய்தால் அதற்குப் பெயர்தான் ஒட்டகப்புத்தி அதனால் தான் அப்படிப்பட்ட புத்தி உள்ளவனை ஆண்டவன் மன்னிக்கமாட்டான் என்றார்கள் நாயகம் (ஸல்) அவர்கள்.

# உலகில் சமாதானம் 9 ஆண்டில்

சாந்தி சமாதானத்தை நித்தம் நித்தம் எதிர் பார்த்து ஏங்கும் இந்த வையகத்து மக்களுக்குக் கடைசியாக அது 1999ல் ஜூலைக்குப் பிறகு கிடைத்தே விடுமாம்.

இந்தத் தகவல் எந்த அரசியல் வாதியாலும் தெரிவிக்கப்படவில்லை. ஓர் ஆரூடக்காரரின் கணிப்பு. அதுவும் இன்று நேற்றல்ல கிட்டத்தட்ட 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உலகப்புகழ் பெற்ற ஒரு சோதிடப் புலியின் கூற்று.

1503ம் ஆண்டில் பிறந்த ஒரு பிரெஞ்சு ஆசாமி உலகத்திற்கு அமைதி 1999ல் கிடைக்கும் என்று சொல்லி விட்டுச் சென்றிருப்பது இலேசுமானதல்ல.

இந்த ஆள் தன் இறப்பையும் அச்சொட்டாகக் குறித்து வைத்துவிட்டு அந்தத் தேதியிலேயே இறந்தும் போனான். (1566 ஜூலை 2)

சில மனிதருக்கு அதிசயப்படத்தக்க அதீத சக்திகளை வைத்துவிடுவது இறைவனுக்கேயுரிய விளையாட்டு. இந்த வகையில் மைக்கல் டீ நாஸ்டடேம் என்பவனும் ஒருவன் தனது 22வது வயதில் மருத்துவ மாணவனாக பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த வேளையில் தன்னையுமறியாது தன்னுள் புகுந்திருக்கும் சக்தியால் ஐரோப்பாவில் 1525ல் ஏற்பட்ட கொள்ளை நோயையே ஒரு விசேட பவுடரைக் கொண்டு குணப்படுத்தினான் என்று வரலாறு பேசுகிறது.

இங்கிலாந்து (பிரிட்டன்) நாட்டின் பல முக்கிய சரித்திர நிகழ்வுகளையெல்லாம் இவன் தன்காலத்திலேயே சொன்னது ஒன்றன் பின் ஒன்றாக பலித்துக் கொண்டே இருந்தது.

அமெரிக்க கென்னடி சகோதரர்களையும் இவன் விட்டுவைக்கவில்லை. ஜோன் ராபர்ட் எட்வார்ட் கென்னடி சகோதரர்களின் வாழ்வில் ஏற்படப் போகும் பேரிடிகளை இவன் பிட்டு பிட்டுப் வைத்து விட்டுச் சென்றான்.





நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் என்ற வகையில் பெண்கள் கல்வித்துறையில் உயர்ந்துள்ள இடம் கேரளம் எனப்படுகிற மலையாளம். இதில் சரிக்குச் சமமாக முஸ்லிம் பெண்களும் அடங்குவர்.

ஆனால் கல்யாணம் என்று வரும்பொழுது பத்தாம்பசலித்தனங்கள்தான்.

இன்றைக்கு ஒவ்வொரு ஆயிரம் ஆண்களுக்கும் 1034 பெண்கள் இருக்கின்றனர். 34 பேர் அதிகப்படி. வருகிற ஆண்டில் இன்னும் இது கூடும்.

இந்த நிலையில் சீதனப் பிரச்சினை ஆட்டிப் படைக்கிறது. சாதாரணமாக இருபத்தெட்டு, முப்பது என்று வயது அதிகரித்த நிலையில் திருமணங்கள் நடக்கின்றன. பெண்கள் வேலைக்குச் சென்று வீட்டு அடுப்பு எரிவதற்கு உதவுவதால் அவர்களது திருமணத்தைப் பற்றி நினைக்காமல் இருக்கும் பெற்றோர்கள் பலர்.

இங்குபோல் அங்கும் அரபுநாட்டு சம்பாத்தியக்காரர்கள் உண்டு. எனினும் பெண்கள் செல்வதில்லை. ஆண்கள்தான். அவர்களுக்குக் கல்யாண மார்க்கட்டில் விலை அதிகம். நமது இலங்கை ரூபாவில் இரண்டு இலட்சத்தைத் தாண்டும் சீதனம்.

அங்கே மலையாளிகளும் முஸ்லிம்களும் நகமும் சதையும் போல. இருந்துங் கூட கலப்புத் திருமணம், மதம் மாறல் மூச். அதற்கு அவசியப்படாத படி அவர்கள் வாழ்க்கை ஓர் ஐக்கியப்பட்ட வாழ்க்கை. பெரும்பாலான மலையாளப் படங்களில் முஸ்லிம் கதாபாத்திரம் ஒன்று கட்டாயம் இருக்கும். ஒரு காலத்தில் வந்த 'செம்மீன்' (இறால்) படத்தில் நெஞ்சு முழுவதும் நிறைந்த மம்மது முதலாளியும், கறுத்தம்மாவும் இதை எழுதுகிற நேரத்திலும் முன்னால் தோன்றுகிறார்கள். ஆனால் கல்யாணம் செய்யாமலே கடற்கரை மணலில் அவர்களது சடலங்களை அலைகள் கொண்டு வந்து சேர்க்கும்.

இப்படியே அங்கே கல்யாண மார்க்கெட்டில் கதை சோகமாக இருக்கிறது.

# மலையாள மக்களுடன் நம் கல்வியை நோக்கினால்

### ஏக்கமும் கவலையும்

நம் நாட்டுப் பாடசாலைக் கல்வியோடு கேரளத்து மலையாளப் பகுதியை ஏறிட்டு நோக்கினால் ஏக்கமும் கவலையும் நெஞ்சைக் கௌவிக் கொள்கின்றன.

அங்கே கல்வியின் நிலையைப் பாருங்கள்.

★ எஸ்.எஸ்.சி. வரைக்கும் படிப்புக்குச் செல்லவில்லை.

★ கல்லூரிகளில் பதினான்கு, பதினைந்து ரூபாய்கள் தான் கட்டணம். புலமைப்பரிசில்கள் நிறைய உண்டு.

★ அரசாங்க பஸ்களிலும் தனியார் பஸ்களிலும் அறுபது சத தூரத்திற்குப் பத்துச்சதந்தான் அறவிடுகிறார்கள்.

★ கடுமையான குடும்பக் கட்டுப்பாடு காரணமக கேரளத்தில் பிள்ளைகள் குறைவு. கல்விக் கூடங்கள் அதிகம். தெருவுக்கு ஒரு பாடசாலை என்பதால் அட்மிஷன் ரொம்ப சுலபம்.

★ கேரளாவில் எல்லாப் பெற்றோர்களுமே எப்பாடு பட்டாவது தங்கள் பிள்ளைகள் கல்வி‿றிவு, பெற்றிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

★ பஸ்களில், படகுகளில் நடைப்பாதைகளில் ஏற்றங்களில் இறக்கங்களில், கடை வீதிகளில், கிராமங்களின் ஒற்றையடிப்பாதைகளில் எங்கு பார்த்தாலும் புத்தகச் சுமையுடன் மாணவ, மாணவியரே;



### அஷ்ட லட்சுமிக்குள் எண்மர்

அருள் வழங்குபவள் - மகாலட்சுமி, செல்வம் வழங்குபவள் - தனலட்சுமி, பயிர் விளைச்சலை அமோகமாக்குபவள் - தான்யலட்சுமி, கல்வியை அளிப்பவள் - வித்யலட்சுமி, வீரத்தை வழங்குபவள் - வீரலட்சுமி, சௌபாக்கியத்ததை தருபவள் - சௌபாக்கியலட்சுமி, குழந்தைச் செல்வங்களை கொடுப்பவள் - சந்தானலட்சுமி, கருணையே உருவானவள் - காருண்ய லட்சுமி.

இன்றைக்கும் தமிழகத்தில் 'அஷ்டலட்சுமி வழிபாடு' மிகப் பிரசித்தம்.

வடபகுதி இந்தியாவில் அஸ்ஸாமில், லட்சுமி பராசக்தியாகக் கருதப்படுகிறாள். ராஜபுதனத்தில் அவள் அன்னபூரணி. வங்காளிகளின் வீடுகளில் 'லட்சுமிபீடம்' என்று ஒன்று தனியாக அமைந்திருக்கும்.

''தீப ஜோதியாய் வருவாய் திருமகளே.. பொருள் தரு மகளே..'' எனத் தீபாவளியை எதிர்நோக்கிப் பாடுவோமா?

### உடலுக்கு உகந்த உணவு

மாமிச உணவு உட்கொள்பவா களை விட மரக்கறி உட்கொள் பவர்களை நோய் அவ்வளவாக தாக்குவதில்லை என்பது ஜெர்மன் புற்று நோய் ஆய்வு மையத்தின் சமீபத்திய கண்டு பிடிப்பு.



மாமிச உணவு வயிற்றுப் புற்றுநோயை ஊக்குவிக் கின்றது. மரக்கறி உணவு இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றது என ஆஸ்திரேலியப் பல்கலைக் கழக ஆய்வாளர் ஒருவரும் தெரிவிக்கிறார்.

## தலைமுடி நரைப்பது ஏன்?

நரை தோன்றுவது வயோதிபத்தின் அறிகுறி என்பது பொதுவான கருத்து.

கடும் நோய் வந்தால் சத்துக் குறைவான உணவு உண்டால் அதிர்ச்சிகள் அடைந்தால்; மனக்கவலைகள் ஏற்பட்டால் நரைவரும்.

நரை தோன்ற பரம்பரையும் காரணமாக அமையும்.

நமது தோலின் ஒரு துணை உறுப்புத் தான் தலைமயிர்.

தோலுக்கு நிறம் கொடுக்கும் ஐந்து வகையான சாயப் பொருட்கள் நம் உடலிலேயே இருக்கின்றன. மெலனின் என்பது அதில் ஒன்று. இது கறுப்பு நிறத்தைக் கொடுக்கும். இது எந்தளவில் உடம்பில் இருக்கிறதோ அதுவே உடம்பின் நிறத்தை நிர்ணயிக்கிறது. முடியின் நிறமும் இந்த அளவைப் பொறுத்தே அமைகின்றது.

இந்த முடிகளுக்கு நிறத்தை மயிர்க்கால்களின் நடு அடுக்கில் உள்ள செல்களே தயாரித்து அனுப்பி வைக்கின்றன.

வயது செல்லச் செல்ல இந்த செல்களின் உற்பத்தித் திறன் குறைகிறது. செல்களின் திறன் குறைவால் மெலனின் போதியளவு உற்பத்தியாகாது போகும். அச்சமயம் தலைமயிரில் வெள்ளை காட்சியளிக்கத் தொடங்குகிறது. இதுவே நரை.

சிலருக்கு இளம் பருவத்தில்கூட மெலனின் உற்பத்தி குறைந்து போவதால் நரை தோன்றி விடுகிறது.

## நாடாளுமன்றத் தொழுகை அறை

ஜயவர்த்தன புரவில் அமைந்துள்ள நமது நாடாளுமன்றம் மிக நவீனமானது. இதில் ஒருவிசேடம் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் மற்றும் உத்தியோகத்தர் ஊழியர்களுக்கும் தொழுவதற்கென்று ஒரு வசதியான அறை கட்டடம் கட்டப்படும் பொழுதே அமைக்கப்பட்டுள்ளதாகும். இதற்குப் பின்னணியில் நின்று கடும் முயற்சி எடுத்துக் கொண்ட தலைவர் முன்னை நாள் சபாநாயகரும் இந்நாள் தென்னிலங்கை ஆளுநருமான அல் ஹாஜ் எம்.ஏ. பாக்கீர் மாக்கார் அவர்கள் இப்பொழுது ஜமாஅத் தொழுகை நடக்கிறது.



# ஞாயிறு காலைப்பொழுதில்...

ஒவ்வொரு ஞாயிறும் உன் எழில் உருக்காணத் துடித்து, துடிதுடித்துப் பிரியமுடன் பிரித்துப் படித்து சுவைத்து மகிழ்வேன்.

**திருமதி. றுவைதா மதீன்,**
**கல்லொழுவ எம்எம்வி.**

ஞாயிற்றுக்கிழமை காலையில் எமது முதல்காரியம் 'லைட்ரீடிங்' பகுதியில் வரும் சுவையான அம்சங்களை வாசிப்பதே.

**ஸாமிலா, ஸமீனா,**
**ஸாஹிராக் கல்லூரி, கம்பளை.**

ஞாயிறுதோறும் எம் வீட்டை வந்தடையும் வாரமஞ்சரியில் 'லைட் ரீடிங்' பகுதியையே முதலில் படிப்பேன்.

**எம்.ஐ. அஸ்ஹரி,132, எஸ்.எச்.ரோடு,**
**அட்டாளைச்சேனை.**

ஞாயிறு காலை விடிந்தவுடன் பத்திரிகையில் உங்கள் பகுதியைப் பார்த்துவிட்டுத்தான் மற்றவை.

**எம்.ஐ.எம். நஸார், கம்மல்துறை.**

ஞாயிற்றுக்கிழமை காலை என்ற உடன் முதலில் புரட்டுவது உங்கள் பக்கத்தையே.

**எம்.எஸ்.எம். ரஹீம், 96, வான்வீதி,**
**புத்தளம்.**

ஞாயிறு வந்தால் உங்கள் பகுதி எப்பொழுது என் கரம் தவழும் என எதிர்பார்ப்பேன்.

**சி. அமீன், பாண்டியங்குளம், அநுராதபுர.**

ஞாயிறில் தினகரனை எடுத்தால் ஏனோ எனக்கு உங்கள் பக்கத்தையே புரட்டத் தோன்றும்.

**அப்துல்லாஹ் இஸ்மாயில், 216, உயன்வத்தை,**
**தெவனகல.**

# கடிதக் குவியலில் கண்டெடுத்தவை

நிறைய நிறைய 'லைட்ரீடிங்' கட்டிங்ஸ்களை சேகரித்து வைத்துள்ளேன். சும்மா இருக்கும் வேளையில் அவற்றை வாசித்து மகிழ்வேன்.

**ருக்ஷான் அமீன், மும்தாஸ் மஹால்,**
**உடுதெனிய.**

தினகரன் வாரமஞ்சரிக்கு உயிர் இருக்கிறது என்றால் அது நீங்கள் தொகுத்து வழங்கும் 'லைட்ரீடிங்' பகுதி இருப்பதால் தான் என்று சத்தியம் செய்து கூறிவிடலாம்.

**நிஸ்வா ஸலாம்.**
**தர்ஹா நகர்.**

ஆயிரம் ஆயிரம் அற்புதமான நிகழ்ச்சிகளை நீங்கள் தொகுத்து வழங்குவதற்காக எமது பாராட்டுக்கள்.

**செல்வி. பௌஸுல் தஸீமா தாஹா,**
**371/2, ரல்லிமன்கொட, தெல்தோட்ட.**

உங்கள் பகுதி இலங்கை வாசகர்களின் மனதை ஆட்கொள்வதற்குக் காரணமே உங்கள் நகைச்சுவைப் பேச்சுக்களும் அதில் இடம் பெறுவதாகும்.

**முஹம்மட் ரியாஸி, 69, ராஜவீதி,**
**மாத்தளை.**

ஒவ்வொரு வாரமும் உங்களின் 'லைட்ரீடிங்'கை 'மிஸ்' பண்ணுவதில்லை

**ஏ.வி. செல்வம், 68, பிரதான வீதி,**
**பத்தன.**

ஒவ்வொரு அம்சங்களும் ஒவ்வொரு தேன் சொட்டுக்கள்

**அம்ஜதா, அஹிலா, பள்ளிவாசல்துறை,**
**புத்தளம்.**



18.7.1992ல் இடம் பெற்ற தங்களுக்கான பாராட்டு விழாவில் கவலைக்குரிய சில விடயங்களை செப்பினீர்கள். தங்களது மனவேதனையின் பிரதிபலிப்புத்தான் அது என்பதை உடன் உணர்ந்து கொண்டேன். எமது 6ம் பார்க்க 'லைட்ரீடிங்' மறையக்கூடாது.

**வின்னாஸ் சௌக்கத், 26 இந்திரிலிகொட, மக்கொன.**

பத்திரிகை கிடைத்தவுடன் தங்கள் பகுதியை முதலில் புரட்டும் வாசகர்களுள் நானும் ஒருவன்.

**எம்.ஐ.எம். அஷ்றஃப், 275-ஏ, மார்க்கட் வீதி, சாய்ந்தமருது.**

நான் தொகுத்த சிலவற்றைப் பிரசுரித்திருந்தீர்கள். உண்மையில் நான் அதை எப்போது எழுதியனுப்பினேன் என்பது எனக்கே தெரியாது. வாசகர்கள் எழுதும் விடயங்களை பாதுகாப்பாக வைத்து அதை சமயம் பார்த்துப் பிரசுரிக்கும் உங்கள் சேவையை எப்படித்தான் பாராட்டுவதோ தெரியாது.

**உடத்தலவின்னை பி.எம். தமீம் அன்ஸார்.**

தங்கள் பணி மென்மேலும் சிறப்புறவும், வளர்ச்சியடையவும் எனது நல்வாழ்த்துக்கள் பிரார்த்தனைகளும்.

**எஸ். தில்லை நடராஜா,**
**அரசு அதிபர். வவுனியா.**

வரவர உன்னுடைய வெயிட் அதிகரிப்பினால் மனம் டைட்டாகி நிற்கிறேன். உன்னுடைய 'பிட்' நிவ்ஸ்களினால் எல்லாம் பிரைட்டாக ஜொலிக்கிறது. இன்னும் நீ 'ஹைட்'டில் ஜெட்டாகப் பறக்க என் வாழ்த்துக்கள்.

**'தேன்மொழி' (திருமதி ரஹ்மாஷாகுல் ஹமீத்) தெஹிவளை.**

உலகின் பொதுச் செய்திகளை லைட்டாகத் தந்து வரும் லைட்ரீடிங் பிறந்த நாளாகிய அந்த ஏப்ரல் 30ஐ (1989) மனதார வாழ்த்துகிறேன்.

**சீ. ஜெய்னுலாப்தீன், கொழும்பு 11.**

## குவைத்திலிருந்து குதித்து வந்தது...

''தினகரனில் லைட்ரீடிங்'' பகுதி இந்தப் பாலைவன மண்ணில் 'சோலை''யாக மனதுக்கு இதம் அளிக்கிறது. நம் இலங்கை வாசகர்களை மட்டுமல்ல எத்தனையோ தென்னிந்திய வாசகர்களையும் உங்கள் ''லைட்ரீடிங்'' கவர்ந்து வைத்திருப்பது, எமக்குப் பெருமை தருகிறது. எனது சில தென்னிந்திய நண்பர்கள் ''தினகரன் வாரமஞ்சரி'' யைக் கண்டுவிட்டால் ''எங்கேய்யா லைட்ரீடிங்'' என்று என்னைப் பிய்த்து எடுத்து விடுவார்கள் அப்படி ஒரு பித்து அவர்களுக்கு (எனக்கும் தான்)

ஆனாலும், ''தமிழ்ப் பத்திரிகையின் பகுதிக்குத் தமிழில் பெயர் இல்லாது ஆங்கிலமாக இருப்பது பற்றி அவர்களுக்கு சின்ன மனக்குறை. அதனால் பெயரை மாற்றச் சொல்லவில்லை. பரிசீலனை செய்யுமாறு ஒரு வேண்டுகோள்.

சுப்ஹான் ஹனீப், த.பெ.இல. 15262,
அல் தாஇயாஹ், குவைத்.

---

நாமெல்லாம் உங்கள் அபிமானிகள் என்பதைத் தாங்கள் இதுவரை அறிந்திருக்கமாட்டீர்கள். நான் ஜே.எச். பாத்திமா என்றால் ஞாபகம் வருகிறதா? நாம் சகோதரிகள் நால்வர்; இப்போது திருமணமாகி ஒவ்வொருவர் ஒவ்வொரு திக்கில்.

தங்கள் தினகரன் ''கண்டதுண்டா கேட்டதுண்டா'' இன்னும் எம் நெஞ்சை விட்டகல மறுக்கிறது. எம் அறிவு தெரிந்த காலம் முதல் தங்கள் எழுத்துக்கள் மூலம் தங்களை யாமறிவோம். புனைபெயர்களையும் கண்டு பிடித்துத் தெரிந்து வைத்துள்ளோம்.

உங்கள் 'லைட்ரீடிங்' இப்போது சக்கை போடு போடுகிறது. அதுவும் சிந்தையைக் கவரும் சிங்கார நடையுடன். சும்மா சொல்லக் கூடாது. எமது அறிவுப் பசிதீர்க்கும் அருமருந்தாய் அமைந்துள்ளது அது.

திருமதி. எஃப். நபீஸா ஜவ்ஃபர்
145, கல்பொக்கை, வெலிகம. (31.10.1990)



தினகரன் வாரமஞ்சரியில் கையில் பட்டதும் முதல் முதலாக உங்கள் பகுதியைத் தான் விரல்கள் துழாவும்.

அஸ்மலா, தம்பாளை, பொலன்னறுவை.

என் போன்ற படிக்கும் மாணவர்களுக்கு தங்கள் பகுதி தரும் பல புதிய தகவல்கள் பயன் மிகத்தொன்று.

ஷியானா நஸீர், மாதிப்பொளை.

வாலிப நெஞ்சங்ககளைக் களிப்பில் ஆழ்த்தும் பகுதியைப் பார்த்து தன்னிலை மறந்து லயித்துப் போனேன்.

நூறுல் முர்ஷிதா சுபைர்,
பீ 2-1/4, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொ - 10.

எம்மைக் கடந்த 3 வாரங்களாக தங்களுடன் மாலையில் பயணம் செய்ய வைத்தீர்கள். பக்கத்து இடமாகயிருந்தும் முன்னர் கேட்டிராத அறிந்திராத பல விஷயங்களை அளித்து எங்கள் அறிவுப் பசிக்கு தீனி போட்டீர்கள். சபாஷ் [illegible]

திருமதி. எஃப்.எம். நவாஸ்,
47, பியரத்னராம வீதி, தெஹிவளை.

லைட்ரீடிங்' பக்கத்தில் காஸி அப்துல் மஜீத் அவர்களைப் பற்றிய அறிமுகமொன்றை வெளியிட்டமைக்காக என் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இலைமறைகாயாக வாழ்ந்து கல்விக்காக தம்மை அர்ப்பணித்த அறிஞரை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதில் நீங்கள் காட்டிய ஆர்வம் அபாரம்.

தாஜுல் அதீப்'
அல் ஹாஜ் என்.எம்.ஷாஜஹான்,
20/3, காசில் லேன், புத்தளம்.

'வாரமஞ்சரி'யின் தங்கள் பகுதியில் தாங்கள் வெளியிட்டுள்ள தலைப்பும் செய்தியும் மிகப் பொருத்தமாகவும், நெஞ்சத்தைத் தொடும்படியாகவும் அமைந்துள்ளது. பெருஞ்சிறப்புடைத்து.

ஜி.வெங்கட்ராமன்,
பீ11, கண்ணன் நகர், தஞ்சாவூர். (தமிழகம்)

நீங்கள் என்மனதில் நீங்காத இடம் பிடித்து விட்டீர்கள் காரணம், உங்கள் பகுதியில் நீங்கள் தரும் விலை மதிக்க முடியாத அருந்தகவல்களே.

**எம்.எல்.எம். ரியால்,**
**13பீ 10, முஸ்லிம் மத்திய கல்லூரி,**
**சம்மாந்துறை.**

உமது லைட்ரீடிங்கை பலசரக்குகடையென நினைத்ததுண்டு எதைத்தான் விட்டு வைத்தீர்! பாராட்டுக்கள். ஒரு இஸ்லாமிய பத்திரிகையாகிவிட்ட 'தினகர'னில் ஒரு முஸ்லிமாகிய நீர் தயாரிக்கும் பகுதியில் 'நன்-முஸ்லிம்' (முஸ்லிம் அல்லாத) சரக்குகளும் தாராளமாகக் கிடைப்பது பற்றி உம்மை சபாஷிக்கிறேன்.

எம்.ஜி. ராஜ்மோகன்
145/1, ஜெம்பெட்டாவீதி, கொழும்பு 13.

தங்களிடம் தலைக்கனம் இல்லை.

**ஏ.எம். நிஜானா, இக்கிரிகொல்லாவ,**
**அநுராதபுரம்.**

'லைட்ரீடிங்'கைப் படித்து மனம் இனித்து பயன்பெறும் பல்லாயிரம் ரசிகைகளில் நானும் ஒருத்தி.

**பௌஸுல் நள்மிய்யா முஹம்மது,**
**158, பிரதான வீதி, மாத்தறை.**

'லைட்ரீடிங்' இலங்கைத் தமிழப்பத்திரிகை உலகுக்கு ஒரு புதிய பாணி. வாசகர்களோடு நேரில் உரையாடுவது போன்ற உணர்வை உங்கள் எழுத்துக்கள் ஏற்படுத்துகின்றன.

**ஏ.சி. அஸீம், (ஆசிரியர்)**
**மதவாச்சி மு.வி., மதவாச்சி.**

'லைட்ரீடிங்' வியப்பூட்டும் அதிர்ச்சியான ஆக்கங்களை தருவதில் முதலிடம் பெறுகிறது.

**முஹம்மது றம்ஸான், 113, கண்டிவீதி, வரக்காமுற.**



உங்கள் பக்கத்தின் மூலம் ஓவியக்கலையை ஊக்குவிக்கும் முறை அதிசயமானதும் அவசியமானதுமாகும்.

**செல்வி முந்சிதா அப்துல் ஹமீத்,**
**கே.பீ.எம். ஸ்டோர்ஸ், குறிஞ்சாப்பிட்டி, கல்பிட்டி.**

உங்கள் பேனாமுனை வலுவுள்ளது. தட்டவேண்டிய இடத்தில் தட்டிக் கேட்பீர்கள்.

**எஸ்.எம்.ஏ. முஃபீன், காத்தான்குடி 2.**

மானா மக்கீன் வழங்கும் இது, மாணவர் உலகிற்கும் சிறப்பே. காணா புதினம் பல தந்து கீதம் இசைக்கும் கலைப்பணியே

**கலைமகன் பைரூஸ், மதுராப்புர, வெலிகாமம்.**

வித்தியாச வேறுபாடுகள் பாராமல் எல்லா ஓவியர்களுக்கும் சந்தர்ப்பம் அளித்துவரும் உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

**கே.எல்.எம். ஹஸ்ஸாலி,**
**31, மாவடி ரோடு,**
**பெரிய நீலாவணை.**

இலங்கை - இந்திய நல்லுறவுக்குப் பாலமாய்த் திகழ்கிறீர்கள். நம்மவர்கள் மீது அவர்கள் வைத்திருக்கும் மரியாதையையும் பற்றையும் அறிந்து மனம் நெகிழ்ந்தேன். அதற்குத் தாங்களும் குறிப்பிடத்தக்களவு காரணமாய் இருக்கிறீர்களல்லவா?

**இளைய நெஞ்சன், எம். முகர்ரம், 233, நாம்புளுவ, பஸ்யால.**

இலங்கை எழுத்துலகிற்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு என் வாழ்த்துக்கள். மக்கள் எழுத்தாளன் மறக்கப்பட மாட்டான்.

**எம்.எச்.எம். ஜவஃபர், டிக்கோயா.**

பழம்பெரும் எழுத்தாளர், மர்ஹூம் ''முமீசா'' உங்களைப் பற்றி சொன்ன வாக்கு உங்கள் வகையில் பொய்த்து விடவில்லை.

**என்.எம்.எச். ஹுசைன்,**
**108, கொழும்பு வீதி, எட்டியாந்தோட்டை.**

நேயர்களின் தலைப்புகளுக்கு ஓர் இடம் கொடுத்து இளைய தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பது கண்டு சந்தோஷம்.

ஜே. பௌஸர் நியாஸ், 107 ஏ, டெம்பள் ரோடு, ஹப்புத்தளை.

லைட்ரீடிங் எமது அறிவுக்கும் சிந்தனைக்கும் நல்விருந்தாக அமைகிறது.

எம்.ரி.எம். அஸார், 424,
பேர்குஸன் வீதி, கொழும்பு 15.

நான் லைட்ரீடிங் ஆரம்பித்த காலத்திலிருந்து அதன் ரசிகை. பத்திரிகையைக் கையில் எடுத்ததும் அந்தப்பக்கத்து அனைத்து விடயங்களையும் படித்துவிட்டுத்தான் மறுவேலை. ஒரு புத்தகத்தையே படித்து முடித்த திருப்தி.

ஸஃபீனா கலீல, துந்துலை, கபுறுகல.

நான் 'தினகரன்' ரசிகன். அதிலுள்ள சினிமாப் பகுதியையும் பார்க்க லைட்ரீடிங் பகுதியை விரும்புபவன்.

எம.எஸ. நாதன், சிடீ, 39 சுவர்னா ரோடு, கொழும்பு 6.

எழுத்துலகில் என்றும் என் நெஞ்சில் நீங்கா இடம்பிடித்த எழுத்தாளர் வரிசையில் தங்களுக்கே முதலிடம்.

எம்.எம்.எம். ரம்சீன், 136 கழுகமுகவ
கெலிஓய.

உறங்கிக் கிடக்கும் சில உண்மைகள் தங்களின் சேவையினால் வெளிவருவதுண்டு.

.........இரத்மலானை விமான பயிற்சித்தள வாசகர்

நீங்கள் 'தினகர'னில் முன்பு வழங்கிய ''கண்டதுண்டா''. கேட்டதுண்டா'' பகுதியின் தீவிர அபிமானியான நான் அந்த நாட்களில் கல்லூரி மாணவன். தற்போது 'லைட்ரீடிங்' கின் தீவிர அபிமானி.

ஜெ.ரா. முஹம்மது, நொச்சியாகம.



'கோவிலுக்கும், பள்ளிக்கும் ஒரே வாசல்' என்ற தங்கள் செய்தி என்னை மெய்சிலிர்க்க வைத்ததுமல்லாமல் உள்ளத்தையும் புளங்காகிதமடையச் செய்துவிட்டது.

எஸ்.எம்.எம். முகையித்தீன்
(ஓய்வுபெற்ற கோட்டைப் புகையிரத நிலைய அதிபர்)
24/1, அப்போன்சு அவன்யு, தெகிவளை

'லைட்ரீடிங்' பகுதியை நீங்கள் ஜொலிக்க வைப்பதுவும் வாசகர்களை வியக்க வைப்பதுவும் வாடிக்கையாகிவிட்டது. வரவேற்கிறேன். வாழ்த்துகிறேன்.

ஏ.எஸ். ஸாஹிர், முகத்துவார வீதி, கல்பிட்டி

'லைட்ரீடிங்' பகுதியை மிக விருப்பத்தோடும் ஆவலோடும் எதிர்பார்த்து காத்திருப்பவன். ஒருமுறை பார்க்காவிட்டாலும் என் தலை வெடித்துவிடும்.

அ.ச. திலீப், நொக்ஸ் வீதி, மூதூர்.

'தினகர'னை கடையில் வாங்கியதும் சிலர் 'லைட்ரீடிங்' பகுதியைத்தான் தேடுகிறார்கள்.

எம்.எச்.எம். றியாஸ்,
உருளாவெளை, மாவனல்லை.

உங்கள் பகுதியை வாசிக்க முன்பே ரசிக்கத் துடிப்பது 'மான்ா மக்கீன் வழங்கும் லைட்ரீடிங்' என்ற ஓவியத் தலைப்பைத்தான்.

எம். அஸ்மி ஷரீஃப், எஃப்/73, கம்பளை வீதி, ஹெம்மாதகம.

நாம் அறிந்தும் அறியாமலும் மறைந்து போன எத்தனையோ விடயங்களை தேடிப்பெற்று வெளிச்சம் போடுவது என்றுமே மறக்க முடியாதது.

எஸ்.எம். யூசுப், 212, ஹனிபா வீதி, கல்முனை.

## உலகில் முஸ்லிம்களின் தொகை அதிகரிக்கும்

''உலக ஜனத்தொகை அலுவலகம்' கொடுத்துள்ள தகவலொன்றின் படி தற்சமயம் உலகில் பெருகிக் கொண்டிருக்கும் மக்கள் தொகையினர் முஸ்லிம்களே. 2020ம் ஆண்டில் உலக மக்களில் நான்கில் ஒரு பங்கினர் முஸ்லிம்களாக இருப்பர்.

## அமெரிக்காவில் நிதியமைச்சர் கிடையாது

தலைப்பைப் பார்த்து அசந்து போகாதீர்கள். எந்த நாட்டிலும் நிதியமைச்சர் ஒருவர் இருக்கவே செய்வார். அமெரிக்காவிலும் இருக்கிறார். ஆனால் நாம் அழைப்பது போல நிதியமைச்சர் என்பதில்லை. 'செகரட்டரி ஆஃப் டிரஷரி' என்கிறார்கள்.

## டச்சுக்காரர்கள் முஸ்லிம்களுக்குச் செய்த கொடுமைகள்.

போர்த்துக்கேயரின் பின் 17ம் நூற்றாண்டில் (1658) நம்மை ஆளவந்த டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) முஸ்லிம்களுக்குச் செய்த கொடுமைகளுக்குள் முக்கியமானது காணிச் சொந்தக்காரராவதிலிருந்து தடுத்து வைத்ததே.

1832 வரை அமுலில் இருந்த ஒரு டச்சுக் சட்டவிதியின் படி, கொழும்புக் கோட்டையிலும் புறக்கோட்டையிலும் வீடுகளோ நிலங்களோ வாங்குவது முஸ்லிம்களுக்குத் தடை. 1659ல் மாத்தறையிலிருந்தும் 1670ல் கொழும்பிலிருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். தங்கள் இறுதிக் காலத்திலேயே டச்சுக்காரர்கள் கொடூரத்தைத் தளர்த்தினார்கள்.

79



# தோன்றாத் துணை

இது நானா? ஏமாறாதீர்கள். 20 ஆண்டுகளுக்கு முன் என் எழுத்து இவரை என்னருகில் கொண்டு வந்தது. அப்பொழுது அவர் மாடி வீட்டு ஏழை. எனினும் என் அபிமானத்திற்குரிய வாசக-நெஞ்சம். பணத்தை மட்டும் குறிவைத்துப் பழகும் 'புத்திசாலி'கள் கேலி செய்தனர். பழக்கமோ தொடர்ந்தது. இப்பொழுது இலட்சாதிபதியாக, தொழில் அதிபராக, வள்ளல் பெருமகனாராக மாறிய பொழுதும் அபிமானியே. ஆனால் எனது 'தோன்றாத்துணை' . இந்தத் துணையை மட்டும் இறைவன் தந்திராவிட்டால் எழுத்துலக எதிர்நீச்சலில் நான் எப்பொழுதோ முடமாகி விட்டிருப்பேன். இந்தச் சிறு தொகுப்பு அவரது ஆவலுக்கே. தங்கத் தமிழ் இதழாசிரியர்கள், ஒருவருக்கு இருவராய் வருகை தரவும் காரணம் அவரே. அனைத்தும் அவரே. பாசமும் நேசமும் கொண்டு எளிமை வாழ்க்கை வாழும் மேமன் சமூகப் பெருமகனார் அல்ஹாஜ் ஹாஷிம் உமர் அவர்களது புகைப் படத்தை எனக்கே உரித்தான இடத்தில் -இங்கே-பிரசுரித்திருப்பது புதுமையும் புரட்சியும் மட்டுமல்ல. என் நன்றிக் கடனைச் செலுத்த வேறெந்தப் பக்கமும் பொருத்தமற்றிருப்பதும் ஒரு காரணம். புரவலரே, தாங்கள் வளமாக வாழ்க எப்பொழுதும்!

— மானா மக்கீன்